Volume-15
Issue-6

# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

ஜூன்-2022 (துல்காயிதா-1443)

விலை ரூ. 40 /-




## கியான் வாபி மஸ்ஜித் விவகாரம் நடந்தது என்ன?

## இந்தியாவை மீட்க அணிதிரண்ட ஊடகங்கள்



## ஏன் நான் இஸ்லாத்தைத் தேர்ந்தெடுத்தேன் - சகோதரி சபரிமாலா

**முஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள்; இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.**

(5:08)


04 கியான் வாபி மஸ்ஜித் விவகாரம் நடந்தது என்ன?

10 ஏன் நான் இஸ்லாத்தைத் தேர்ந்தெடுத்தேன் - சகோதரி சபரிமாலா

18 யாசின் மாலிக்குக்கு ஆயுள் தண்டனை விசாரணை முறைகள் சரியா?

21 பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

31 சிலுவைப் போர்கள் 2.0

35 கண்ணியமிகு காயிதேமில்லத் விருது - நீதித்துறையின் வீழ்ச்சி...

40 9-ம் வகுப்பு சமூக அறிவியல் புத்தகத்தில் வகுப்புவாதம்

47 இந்தியாவின் தன்னிகரற்ற இஸ்லாமிய ஆளுமைகள்

52 இந்தியாவை மீட்க அணிதிரண்ட ஊடகங்கள்



# வைகறை வெளிச்சம்

ஜூன்-2022 துல்காயிதா-1443

ஆசிரியர்

**மு.குலாம் முஹம்மது,M.A., Journalism & Communication**

துணை ஆசிரியர்

**கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,**



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only



http:/www.facebook.com/vaigaraivelicham

**தனி இதழ்: ரூ.40/-**

**ஆண்டுச் சந்தா**

**உள் நாடு: ரூ.480/-**

**வெளி நாடு: ரூ.5000/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் **DARUL ISLAM FOUNDATION TRUST** என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

**VAIGARAI VELICHAM**

**52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.**

**+91 81481 29887 | Email: darultrust@yahoo.com |**

**Web: www.darultrust.in**

# கியான் வாபி மஸ்ஜித் விவகாரம் நடந்தது என்ன?



இந்துக் கோயிலை, இந்தியாவைப் பொருளாதார வல்லரசாக ஆக்கிக்காட்டிய அவ்ரங்கஜேப் இடித்ததாக, ஒரு பெரும் பொய்யை நீண்ட நெடுங்காலமாக இட்டுக்கட்டி வருகின்றார்கள். இதற்கு எந்த ஆதாரமுமில்லை.

அவ்ரங்கஜேப் அவர்கள் இஸ்லாமிய நெறிமுறைககளைப் பின்பற்றி வாழ்ந்த ஒரு அதிசயமான ஆட்சியாளர். 1453-இல் கிருஸ்தவர்களின் மாற்பிடம் எனக் கருதப்பட்ட காண்ஸ்டான்டி நோபிள் முஸ்லிம்களால் வெற்றி கொள்ளப்பட்டது. இஸ்தான்புல் என்றானது. இதனால் உலகெங்கிலுமுள்ள இஸ்லாமிய சாம்ராஜ்யங்களை அழிக்க திட்டம் தீட்டினார்கள். காண்ஸ்டன்டி நோபிளைஇழந்தவர்கள். ஒரு கட்டத்தில் ஆங்கிலேயர்கள் எடுத்துக் கொண்டார்கள்.

பெரியதொரு திட்டத்தோடு வந்தார்கள். அவர்கள் இந்தியாவில் முஸ்லிம் மன்னர்களுக்கு எதிராக தொடங்கிய சிலுவைப்போர் ஆயுதங்களைக் கொண்டதல்ல. மாறாக வியாபாரம் என்ற போர்வையில் தொடங்கியது.

உலகில் முஸ்லிம்கள் எங்கெல்லாம் ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்களோ அங்கெல்லாம் சென்று சீரழிக்க வேண்டும் எனத் திட்டம் தீட்டினார்கள். இதைச் செய்திட பாபல்புல் என்ற ஆணையைப் பிறப்பித்தார்கள்.

அந்த வகையில்தான் முதலில் டச்சுக்காரர்கள் கோவை வழியாக வந்து இந்தியாவிலிருந்த முஸ்லிம்களின் ஆட்சியைத் தாக்கித் தகர்த்திட முயற்சிகளை மேற்கொண்டார்கள். தோல்வியைத் தழுவினார்கள்.

ஆனால், அதனை ஆங்கிலேயர்கள் சாதிக்க முன்வந்தார்கள். வியாபாரம் என்ற தந்திரத்தால். இந்த ஆங்கிலேயர்களை புறமுதுகிட்டு ஓடச் செய்தார் அவ்ரங்கஜேப். பல நேரங்களில் அவ்ரங்கஜேப் -யிடம் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்டார்கள்.

ஆங்கிலேயர்கள், கிருஸ்தவ உலகின் கேந்திரமான காண்ஸ்டான்டி நோபுளை இழந்ததற்கான பழியைத் தீர்த்திட இயலவில்லை என்றொரு பெரும் ஆதங்கத்திற்கு உள்ளானார்கள்.

அடுத்து, அவ்ரங்கஜேப் -ஐ அசைக்க இயலவில்லையே என்று இன்னொரு ஆதங்கத்தால் விரக்தியடைந்து நின்றார்கள்.

**எளிமை :** மிகவும் எளிமையான வாழ்க்கையை வாழ்ந்த ஓர் முன்மாதிரி ஆட்சியாளர் அவ்ரங்கஜேப் இஸ்லாத்தின் உன்னதமான வழிகாட்டுதலாகிய வட்டியில்லா பொருளாதாரத்தைச் செயலில் கொண்டு வந்தார். அதன்

மூலம் அன்றைய இந்தியாவை ஒரு பொருளாதார வல்லரசாக ஆக்கினார்.

அவ்ரங்கஜேப் -ஐ தொடர்ந்து அடுத்தடுத்து வந்த முஸ்லிம் ஆட்சியாளர்களும் இதேபோல் ஆங்கிலேயர்களைத் தோற்கடித்தார்கள்.

அவ்ரங்கஜேப் -ஐ தொடர்ந்து ஹைதர்அலீ, திப்புசுல்தான். வடக்கே சிராஜீத் தவ்லா, இப்படி ஆங்கிலேயர்கள் அடைந்த விரக்திக்கு அளவே இல்லை.

பிற்றை நாட்களில், அவர்களின் பிரித்தாளும் சூழ்ச்சிகள், பலன் தந்தன. இதற்கு அவர்கள் கையாண்ட தந்திரங்களுள் ஒன்று. வரலாற்றை திரித்து முஸ்லிம்களுக்கெதிராக இதர சமுதாயத் தவரை தூண்டி விட்டார்கள். இதில் அனைத்துப் பிரச்சார உக்திகளையும் அப்படியே பயன்படுத் தினார்கள்.

வரலாற்று ஆய்வுகள் முதற்கொண்டு, மழலைப் பாடங்கள் வரை இந்த இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களின் வெறுப்பை விதைத் தார்கள்.

பிற்றை நாட்களில் இந்தியாவில் பாசிசத்தை வளர்த்தவர்கள். இந்த வெறுப்பின் வேர்களை அப்படியே பிடித்துக் கொண்டார்கள்.

இதன் விளைவாக இந்தியாவில் பல்வேறு வழிபாட்டுத் தலங்களும் இன்று பிரச்சினை களுக்கு உள்ளாகின்றன.

ஜனநாயகத்தின் பலவீனங்களை முழுமை யாகப் பயன்படுத்தி, இந்திய பாசிஸ்ட்டுகள் ஆட்சியை பிடித்துக் கொண்டார்கள்.

அத்தோடு இந்திய அரசியல் சாசனம் உருவாக்கிய அனைத்து நிறுவனங்களையும், தங்களது ஆட்களால் நிரப்பிவிட்டார்கள். சுயமாக இயங்கிட வேண்டிய நீதித்துறை உள்ளிட்ட அனைத்தும், அவர்கள் பிடியில் என்றாகிவிட்டது. இதை ஊடகவியலாளர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அதனை இந்த இதழில் தந்துள்ளோம்.

அங்கிங்கொனாதபடி எங்கனும் எங்களவர்கள் என்றாக்கிக் கொண்டார்கள்.

அநியாயங்கள் கொலைகள், கொடூரங்கள். இருப்பிடங்களின் இடிப்பு எல்லாம் முஸ்லிம்களை நோக்கி அலைபாய்ந்து வருகின்றன.

> **“ வாசகர்களின் கவனத்திற்கு**
>
> **விலைவாசியின் ஏற்றத்தின் காரணத்தால் வைகறை வெளிச்சம் இதழின் விலையை 20 ரூபாயிலிருந்து ரூ. 40 ஆக உயர்த்த வேண்டிய கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டோம். வாசகர்கள் இதனைப் பொறுத்தருளி வேண்டுகிறோம். வாசகர்கள் இதனை உணர்ந்து தங்கள் ஆதரவை தொடர்ந்து வழங்கிட கேட்டுக் கொள்கிறோம். ”**

முஸ்லிம்கள் மிகப்பெரும் விலைகளைத் தந்து வருகின்றார்கள். இதுபோன்ற சூழ்நிலைகளை எதிர்கொண்டு ஏற்படும் இடிப்புகளுக்கிடையேயும் வெற்றிகளைத் குவித்த நிகழ்வும் முஸ்லிம்களின் வரலாற்றில் ஏராளம்.. தாராளம்..

### முஸ்லிம்களும் இதர வழிபாட்டுத் தலங்களும்

முதன் முதலில், வழிபாட்டுத் தலங்களை இடிப்பது என்பது இஸ்லாத்தின் வழிகாட்டு தலுக்கு நேர் எதிரானது. அல்லாஹ் கூறுகின்றான்

“மனிதர்களில் சிலரை, சிலரைக்கொண்டு அல்லாஹ் தடுக்காதிருந்தால், ஆசிரமங்களும் கிருஸ்தவ ஆலயங்களும் யூதக் கோயில்களும் அல்லாஹ்வின் திருநாமம் அதிகமாகக் கூறப்படும் மஸ்ஜித்களும் இடிக்கப்பட்டுப் போயிருக்கும். தனக்கு எவன் உதவி செய்கிறானோ அவனுக்குத் திடனாக அல்லாஹ்வும் உதவி செய்வான். நிச்சயமாக அல்லாஹ் வலிமை மிக்கோனும், யாவையும் மிகைத்தோனுமாக இருக்கின்றான்.” *(அல்குர்ஆன் - 22:40)*

இந்தத் திருக்குர்ஆன் வசனத்திற்கு விளக்கம் சொல்லும் பல விரிவுரையாளர்களும் இப்படி ஆலயங்களின் வழிபாட்டுத் தலங்களின் பாது காப்பைப் பெறுவது அந்தந்த மக்களின் உரிமை என அல்லாஹ் பிரகடனப்படுத்துகின்றான் என்கின்றார்கள்.

இந்த உரிமையை அல்லாஹ்வை அஞ்சி ஆட்சியில்அமருகின்றஆட்சியாளர்கள்அவசியம் பாதுகாக்க வேண்டும்.

வரலாறு முழுவதும் ஆட்சியில் அல்லாஹ்வின் பெயரால் அல்லாஹ்வை அஞ்சி ஆட்சியில் அமர்ந்தவர்கள், இந்த உரிமையைப் பாதுகாத் தார்கள். இதனைத் தொடங்கி வைத்தவர்கள்

அகிலத்திற்கோர் அழகிய முன்மாதிரியாக அனுப் பப்பட்ட அண்ணல் முஹம்மது (ஸல்) அவர்கள்

இஸ்லாத்தை ஏற்று பின்னர் இஸ்லாத்தின் வரலாறு கலாச்சாரம் ஆகியவற்றை ஆய்வுக்குட் படுத்திய பிக்தால் என்ற முஹம்மத் மர்முடேக் பிக்தால் அவர்கள் (Cultural Side of Islam) என்ற நூலில் இப்படிக் குறிப்பிடுகின்றார்கள்.

### சினாய் பாதுகாப்புப் பத்திரம்

அளவற்ற கருணையாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் பெயரால், செய்யும் ஒப்பந்தம் இது. இதன்மூலம் சினாய் மலையின் கிறிஸ்தவ சன்னியாசிகளான பாதிரியார்களுக்கும், கிருஸ்தவ குடிமக்களுக்கும் அல்லாஹ்வின் திருத்தூதரான முஹம்மத் (ஸல்) அவர்கள் அளிக்கும் உறுதியாகும். கிருஸ்தவ சன்னியாசிகள் தங்கள் பயணங்களின் போது ஏதாவதொரு இடத்தில் அல்லது மலைக்குன்றில் தங்கிட நேர்ந்தால், அவர்களுக்கோ அவர்களின் மக்களுக்கோ அவர்களின் குடியிருப்புகளுக்கோ ஆபத்து நேர்ந்தால் அல்லது அவர்களது சொத்து களுக்கோ இதர உடைமைகளுக்கோ ஆபத்துகள் நேர்ந்தால் என் உயிரோடும் எனது மக்களோடும் அவர்களின் பாதுகாப்பிற்கு அங்கே நிற்பேன். ஏனெனில் அவர்கள் என் சொந்த மக்களில் ஒரு பகுதியினர். அவர்களின் கோயில்களை அவர் களிடமிருந்து பறித்துக் கொள்வதற்கு யாருக்கும் உரிமை இல்லை.

பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த உறுதி, அல்லாஹ் அளிக்கும் உரிமை. ஆலயங்களின் பாதுகாப்பு, உயிர்களின் பாதுகாப்பு என்பதை எடுத்துரைக்கும், இந்த அழகிய முன்மாதிரியைப் பின்பற்றி ஆட்சி செய்தவர்தான் அவ்ரங்கஜேப் அவர்களின் தனது ஆட்சியில் அவர் இஸ்லாத்தின் வழிமுறைப்படி நின்றார் என்பதனால்தான் அன்று ஆங்கிலேயர்களுக்கும் இன்று இந்திய பாசிஸ்ட்டுகளுக்கும் மிகையான வயிற்றெரிச்சல்.

### மார்க்க அறிஞர்

அவ்ரங்கஜேப் தனது 14ஆம் அகவையிலேயே அல்குர்ஆனை மனனம் செய்தவர். அதுபோல் நபிமொழியையும் நபிவழிகளையும் கற்றுத் தேர்ந்தவர்.

பொதுவாக இந்தியாவை ஆண்ட முஸ்லிம் மன்னர்களில் மிகவும் இறையச்சம் மிக்கவராகத் திகழ்ந்தவர் அவ்ரங்கஜேப் அவர்கள்.

ஆக அவ்ரங்கஜேப் அவர்கள் கோயில்களை இடித்துவிட்டு, மஸ்ஜித்களை கட்டினார் என்பது அன்றைய ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் சூழச்சியின் அடிப்படை.

அதே பிரித்தாளும் சூழ்ச்சியை இன்றைய பாசிஸ்ட்டுகளும் கையாளுவதால் அந்தக் கட்டுக்கதைகளையே இவர்களும் ஊதிப் பெருதாக்குகின்றார்கள். இதில் துமிஅளவும் உண்மை இல்லை.

### பழகிப்போன பழி

இதுபோன்ற கட்டுக்கதைகள் இஸ்லாமிய வரலாற்றில் புதியதல்ல. பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கட்டிவிட்டக் கட்டுக்கதைகளை நாமறிவோம், நாடறியும்.

இப்படிப் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது பழிசுமத்தி எழுதி வாழ்ந்த பலர் பின்னர் அவர் களிடத்தில் மன்னிப்புக் கேட்டார்கள். இவர்களின் பலரைநாம்பட்டியலிடலாம். அவர்களில்ஒருவர் ஜான் திவான் போர்ட் (John Dewan Port)

பெருமானார் (ஸல்) அவர்களின் பொற் குணங்களைஉணர்ந்தபோது, பெருமானார்(ஸல்) அவர்களிடம் மன்னிப்பும் கேட்டே ஆக வேண்டும், என உணர்ந்தார். ஆனால் அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் உலகில் இல்லை. ஆகவே ஒரு நூல் எழுதினார் An Apology for Mohamed and the koran (1869) பெருமானரிடமும் திருக்குர்ஆனிடமும் மன்னிப்பு என பார்சி, அரபு, உருது இது பல மொழிகளில் மொழிப் பெயர்க்கப்பட்டுள்ளது.

இதேபோல்தான், இன்றைய நாட்களில் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது பொய்களை இட்டுக்கட்டும் போதெல்லாம், இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளாத ஆய்வாளர் வரலாற்றுப் பேராசிரியர், கரன் ஆம்ஸ்ட்டிராங் என்ற நங்கை நல்லாள், அதற்குப் பதில் சொல்லியாக வேண் டும் அது பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கையை ஆய்வு செய்த, நமது கடமை என உணருகின்றார். அந்த வகையில் அவர் எழுதிய ஒருநூல்தான் Muhammad the Prophet for our times. முஹம்மத் (ஸல்) அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி. பெருமானார் (ஸல்) அவர்களின்பெருந்தன்மைகளைப்பட்டியலிட்ட

சீநிவாச அய்யங்கார் தனது மஹமத் நபி என்று (நூலில் **1926**இல்) வெளிவந்த நூலில் இப்படிக் குறிப்பிடுகின்றார்.

ஒரு சமயம், நஜ்ரான் தேசத்திலிருந்து கிருஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை அன்று அண்ணல் நபி (ஸல்) அவர்களைக்காண வந்திருந்தனர். அன்று கிருஸ்தவ மதமுறை பிரகாரம் அந்த கிருஸ்தவர்கள் இறைவனை வணங்கிட தங்களுடைய பள்ளிவாசலிலயே இடம் வழங்கி அனுமதி அளித்தவர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள்

(Srinivasa Iyengar as quoted by Sa Dewan in his book an "Aurangzeb" P-305)

இந்தப் பண்புகளையெல்லாம் அப்படியேப் பின்பற்றிய அவ்ரங்கஜேப் அவர்கள் கோயில்களைப் பராமரிக்க ஏராளமான மாநியங்களை வழங்கினார்கள். இடிந்த கோயில்களை மீண்டும் கட்டிட அனுமதி வழங்கினார்கள். புராதனக் கோவில்களைப் பாதுகாத்திட உத்திரவிட்டார்கள்.

பானை சோற்றுக்கு ஒரு சோறுபதம் என்ற அளவில் ஓர் ஆணையை இங்கே குறிப்பிடுகின்றோம்.

"உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற வேற்றுமைகளின்றி மக்களின் நலன்களை மேம்படுத்த நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நாம் மிகுந்த அன்போடும் பரிவோடும் செயல்பட வேண்டும். நமது மார்க்கவழிகாட்டுதல்களின்படி நாம் புராதன கோவில்கள் எதையும் அழிக்கக் கூடாது. ஆனால் (புராதனம் என்ற பெயரில்) புதியக் கோயில்கள் எதையும் கட்டக்கூடாது. (PN.Pande As Quoted by Sa Dewan) அவ்ரங்கஜேப் கோயில்களுக்கு வழங்கிய மாநியங்கள், மத குருமார்களுக்கு தந்த பாதுகாப்புகள் இவற்றைப் பட்டியல் போட்டு மாளாது.

### கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாக ஆனபோது

இப்படியெல்லாம் இதர மத நம்பிக்கையாளர்களின் வழிபாட்டுத் தலங்களை காப்பாற்றிய அவ்ரங்கஜேப், கோயில்கள் கொடியவர்களின் கூடாரமாக ஆகாமல் தடுத்திட அவற்றை பூமியிலிருந்து நீக்கினார். அப்போது வாழ்ந்த மத பக்தர்கள் அதனை வரவேற்றார்கள் என்பது வரலாறு.



கரன் ஆம்ஸ்ட்டிராங்

### இந்து இளவரசிக்கு கோயிலில் நடந்த கொடுமை

அவ்ரங்கஜேப் அவர்கள் ஒருமுறை தன் ஆட்சிக்கு உட்பட்ட வங்காள தேசத்திற்குப் பயணம் செய்து கொண்டிருந்தார்கள். இந்தப் பயணம், வாரணாசி வழியாக நடந்தது. அவ்ரங்கஜேப் அவர்கள் ஆட்சியின் கீழ் பல இந்து மன்னர்கள் ஆட்சி செய்தார்கள். அவர்கள் வந்து அவ்ரங்கஜேப் அவர்களைச் சந்தித்தார்கள்.

சந்தித்தவர்கள் ஓர் விண்ணப்பத்தை வைத்தார்கள். அது அண்மையில் காசி, விஸ்வநாதர் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் நடக்கவிருக்கின்றன. எங்கள் இளம், இளவரசிகள் விசுவநாதர்கோவிலில்சிறப்பு வணக்கங்களுக்காக வரவிருக்கின்றார்கள். அவர்களுக்கும் விழா நிகழ்ச்சிகளுக்கும் வழிவிடும் வகையில் நீங்கள் இரண்டொரு நாட்கள் விட்டுப் பயணம் செய்தால் நாங்கள் மகிழ்ச்சி அடைவோம் என வேண்டினார்கள்.

தனது ஆட்சியின் கீழிருந்த மன்னர்களின் வேண்டுதல்களை அங்கீகரித்து, அவ்ரங்கஜேப் அவர்கள் தங்கள் பயணத்தை பாதியிலேயே நிறுத்திக் கொண்டார்கள். ஓரிடத்தில் தங்கி பின்னர் பயணத்தைத் தொடரவிருந்தார்கள்.

காசி விஸ்வநாதர் கோயில் நிகழ்ச்சிகள் நடந்து முடியும் வரை தன் பயணத்தை தாமதப்படுத்தினார்கள். இரண்டு நாட்களுக்குப் பிறகு, கோயில் நிகழ்ச்சிகள் முடிந்தன என்றொரு மகிழ்ச்சியான செய்தி, அவ்ரங்கஜேப் அவர்களை வந்தடைந்தது. தன் பயணத்தைத் தொடர தயாரானார்கள்.

ஆனால் அவர்கள் ஆட்சியின் கீழிருந்த இந்து மன்னர்கள் அவ்ரங்கஜேப் அவர்களைச் சந்திக்க வந்தார்கள். நெஞ்சம் பதற அவர்கள் ஓர் புகாரைச் சொன்னார்கள். அது காசி விஸ்வநாதர் கோயில் வழிபட வந்த “கட்சு” பகுது இளவரசியைக் காணவில்லை என்பதே அது.

**தேடுதல் வேட்டை**

அத்தோடு அவர்கள் விரக்தியின் விளிம்பில் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களை ஆறுதல் படுத்திட, தன் படைவீரர்களை அனுப்பி தேடிட உத்திரவிட்டார் கோமான் அவ்ரங்கஜேப் அவர்கள். அந்தப் படை வீரர்களும் வெறுங்கை யோடு வந்தார்கள்.

விரக்தி வயப்பட்ட பக்தர்கள் பெருவாரியாக அங்கே வந்து குழுமினார்கள். எல்லா கண்களும் இதயங்களும் ஆட்சியாளர் அவ்ரங்கஜேப் அடுத்து என்ன செய்யப் போகின்றார் என்பதன் பக்கமே இருந்தது.


அவ்ரங்கஜேப் அவர்கள் தன் குடிமக்களின் ஆதங்கங்களை தணித்தாக வேண்டும். “கட்சு” மகாராணியைக் கண்டுபிடித்தே ஆக வேண்டும் என முடிவு செய்தார்கள்.

தனது உயர்மட்ட மூத்த அதிகாரிகளைக் கொண்டே ஆய்வுப்படையை கோயிலுக்கு அனுப்பினார்கள். இதர இடங்களுக்கும் இன்னும் சில படைகளை அனுப்பினார்கள்.

கோயில்களை ஆய்வு செய்த சக்ரவர்த்தி அவ்ரங்கஜேப், இன் மூத்த அதிகாரிகள், ஒரு (கணபதி) சிலை அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் அதிசயத்தைக் கண்டார்கள்.

இந்தச் சிலை எப்படி, இப்படித் தொங்கு கின்றது? ஆய்வைத் தொடர்ந்தார்கள். மேலும் காந்தம், கீழும் காந்தம். பொறிக்கப்பட்டு, சிலையில் போதிய இரும்பு வேலைகளும் நுணுக்கமாகவே செய்யப்பட்டிருந்ததை கண்டார்கள்.

பக்தர்களைப் பரவசப்படுத்த, நன்றாக வேலைகள் நடந்திருக்கின்றன என்பதை உணர்ந்த அவ்ரங்கஜேப்-இன் மூத்த அதிகாரிகள், ஆய்வைத் தொடர்ந்தார்கள். சிலைக்கு கீழே சுரங்கப் பாதை. அங்கே ஓர் சல்லாப புரியை அமைந் திருந்தார்கள்.




அங்கே காணாமற்போன “கட்சு” இளம் இளவரசி பெண்மையைப் பறிகொடுத்து, கலை இழந்து களைந்துப் போய்க் கிடந்தாள்.

அங்கே கோயில் கொடியவர்களின் கூடார மாக மட்டுமல்ல, கற்பழிப்பவர்களின் கூடார மாகவே இருப்பதைக் கண்டார்கள்.

இதனிடையே “கட்சு” பகுதி அழகு இளவரசி காணாமற்போன செய்தி திக்கெட்டும் செவிவழிச் செய்தியாகவே பரவிற்று. மக்கள் ஏறத்தாழ ஒரு லட்சம் பேர் காசிவிஸ்வநாதர் கோயிலுக்கு முன்வந்து குழுமினார்கள்.

சிலையொன்றுக்கும் கீழ் சல்லாபபுரி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது பற்றிய செய்தி அன்றும் மக்களிடையே பரபரப்பை (இன்றைய தொலைக் காட்சி சொற்களில்) ஏற்படுத்தியது. மக்கள் காளை வண்டிகளிலும், இதர வாகனங்களிலும் காசி விஸ்வநாதர் ஆலயத்தில் வந்து குழுமினார்கள். சுமார் ஒரு லட்சம்பேர் என்பது வரலாற்றுக் குறிப்பு.

இந்நிலையில்தான் இராணி மீட்கப்பட் டார்கள். உண்மையான பக்தர்கள் ஆலயம் தீட்டுப்பட்டுவிட்டது. அதனை இனிவிட்டுவைத் திடக்கூடாது, அதனை இடித்து, அதன் அந்தரங்க

சுரங்கப்பாதைகளையும், சுரங்கங்களையும், பூமிக்கு மேல் இல்லாமலாக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள்.

சல்லாபபுரியில் இளம் இளவரசியை வன்புணர்ச்சி செய்தவர்களைத் தண்டித்தே ஆக வேண்டும் என வேண்டினார்கள்.

மக்களின் விருப்பத்திற்கிணங்க ஆணைகளைப் பிறப்பித்தார்கள். நீதி அரசர், சக்கரவர்த்தி அவ்ரங்கஜேப் அவர்கள்.

கோயில் இடிக்கப்பட்டது. ஆனால், அதற்கு மேல் மஸ்ஜித்கள் எதுவும் கட்டப்படவில்லை. அப்படி கட்டுவது இஸ்லாத்தில் "ஹராம்" தடை செய்யப்பட்டது.

எப்படி முஸ்லிம்கள் தொழுகைக்குச் செல்லும் போது உடல் சுத்தமாக இருந்திட வேண்டுமோ, அதேபோல் தொழுமிடமும் சுத்தமாக இருந்திட வேண்டும். இந்தச் சுத்தமான இடம் என்பதற்கு வில்லங்கங்கள், ஆக்கிரமிப்புக்கள் ஆகியவற்றிற்கும், அப்பாற்பட்டதாக இருந்திட வேண்டும்.

இன்றைக்கு கோயில்களின் பிரச்சினைகளை எழுப்புபவர்கள் இதுபோன்ற இடங்கள் காமக் களியாட்டங்களின் வரலாற்று அவமானங் களையும் சந்திக்க வேண்டியதுவரும் என்பதை உணர்ந்திட வேண்டும். பாசிச வெறி, அதிகார பலத்தோடு தலைக்கேறி நிற்பதால் அறிவுக்கு இப்போது வேலை இல்லை.

ஆனால், பாசிசம் வீழ்ந்தே தீரும், அப்போது அறிவு வேலை செய்யும். அவமானம் எல்லா நிலைகளிலும் இவர்களை அப்பிக் கொள்ளும்.

அன்பார்ந்த வாசகர்களே!

இந்தக் கட்டுரையில் இடம்பெற்ற பல தகவல்கள் வழக்கறிஞர் T. லஜபதிராய் அவர்கள், என்னிடம் (MGM)யிடம் நேரில் சொன்னவை. வைகை சட்ட நிறுவன தாளாளர் T. லஜபதிராய் அவர்களின் நண்பர் மேற்கொண்ட ஆய்வில் "கட்சு" ராணி மீட்கப்பட்டபோது ஒரு லட்சம் மக்கள் அன்றைய வாகனங்களில் வந்து குழுமினார்கள். அவ்ரங்கஜேப் -இன் அத்தனை நடவடிக்கைகளையும் மக்கள் ஆரவாரத்தோடும் ஆக்ரோஷத்துடனும் வரவேற்றார்கள், என்பதும் கிடைத்தது.

இவையெல்லாம் வரலாற்று நூல்களில் இடம் பெற வேண்டும் எனக் கேட்டுக்கொண்ட லஜபதி ராய் அவர்களின் நண்பரின் வேண்டுகோள்கள் நிராகரிக்கப்பட்டன. இந்திய அரசால் தொடர்ந்து அதிகாரவர்க்கத்தோடு போர்செய்து கொண்டிருக் கின்றார்கள். இன்ஷா அல்லாஹ் உண்மைகள் வெல்லும் காலம் விரைவில் வரும்.

**பள்ளிவாசலை இடித்த அவ்ரங்கஜேப்**

இதுகோல்கொண்ட எனுமிடத்தில் நடந்தது. இடிக்கப்பட்டது கோல்கொண்ட ஜும்ஆ மஸ்ஜித்! கோல்கொண்டாவின் மன்னர் தானஷா, அவர் தனது ஆளுகைக்குட்பட்ட இடத்தில் வரிகளை வசூல் செய்து டெல்லிக்கு அதன் பங்கை "கிஸ்தியை" அதாவது அவ்ரங்கஜேப்-யின் ஆட்சிக்கு செலுத்திட வேண்டியதை செலுத்த வில்லை.

செலுத்த வேண்டிய தொகை நாளுக்குநாள் பெருகிக் கொண்டே போனது. சில ஆண்டு களுக்குள் அது பலகோடி என்றானது.

இந்தக் கோடிக்கணக்கான பணத்தை அப்படியே அவ்ரங்கஜேப்-க்கு தந்திட மனமில்லை. அதை எங்கே ஒளித்து வைப்பது என்ற பிரச்சினை தானஷா மன்னனுக்கு.

எங்கே ஒளித்து வைத்தாலும் அவ்ரங்கஜேப் கண்டுபிடித்துவிடுவார். அவ்ரங்கஜேப் அண்டாத ஓர் இடத்தைக் கண்டுபடித்தார். அதான் மஸ்ஜித்-பள்ளிவாசல்.

மொத்தப் பணத்தையும் (பல கோடிகள்) பல இடங்களில் மிகவும் பத்திரமாகப் புதைத்தார். அவற்றையெல்லாம் மறைத்திட ஒரு பெரும் ஜும்ஆ மஸ்ஜித்-ஐ (பள்ளிவாசலை) அந்தப் புதை குழிகளுக்குமேல் கட்டினார்.

பள்ளிவாசலை - அதிலும் - ஜும்ஆ மஸ்ஜித்-ஐ அவ்ரங்கஜேப் இடிக்க மாட்டார். முஸ்லிம்களின் மத்தியில் அவப்பெயரைச் சம்பாதிக்கத் துணியமாட்டார் என தானஷா உறுதியாக நம்பினார்.

உண்மையை தனது ஒற்றர்கள் மூலம் அறிந்த அவ்ரங்கஜேப், பள்ளிவாசலை இடித்து அங்கே புதைக்கப்பட்டிருந்த கோடிகளை மீட்டார்.

கோயில் இடிபாடு என வரலாற்றை திரிப்ப வர்கள் உண்மையை உணர்ந்திடும் நாள் இன்ஷா அல்லாஹ் நிச்சயமாக வரும். **- MGM**



தொடர்

மகளிர் பக்கம்

சபரிமாலா அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அனுபவங்களை பதிவு செய்ய முடிவெடுத்தோம். அதற்காக யூடியூபில் அவர் பேசிய சுமார் 70க்கும் மேற்பட்ட வீடியோக் களை பார்த்து அதில் அவர் சொன்ன தகவல்களை வைத்து அவரது அனுபவங்களை பதிவு செய்துள் ளோம். இன்ஷா அல்லாஹ் அவரை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தால், அவரிடம் ஒரு பேட்டிக் கண்டு நமது வைகறை வெளிச்சம் யூடியூப் பக்கத்தில் வெளியிடுவோம்.

# ஏன் நான் இஸ்லாத்தைத் தேர்ந்தெடுத்தேன்

**- சகோதரி சபரிமாலா**

அஷ்ஹது லா இலாஹா இல்லல்லாஹ். வ அஷ்ஹது அன்ன முஹம்மது ரசூலுல்லாஹ் - வணக்கத்திற்குரிய இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறுயாருமில்லை. முஹம்மது அல்லாஹ் வின் தூதராவார்கள் என்று நான் சாட்சி சொல் கிறேன் என்று சகோதரி சபரிமாலா அவர்கள் மக்காவில் இருந்து முழங்கிய அந்த சத்தம் உலகம் முழுவதும் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியது.

ஒருபக்கம் இந்தியாவின் பாஸிஸ்டுகள் அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதை சகித்துக் கொள்ள முடியாமல் அவர் மீது ஆபாச அர்ச்சனை களை வலைதளங்கள் மூலம் உமிழ்ந்து கொண்டி ருக்க, இன்னொருப் பக்கம் வயிற்றுப் பிழைப்புக் காக இயக்கம் நடத்திக் கொண்டிருக்கும் சிலர், “அவர் பணத்திற்காக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்”, “அவருக்கு பின்னால் யாரோ இருக் கிறார்கள்” என்றெல்லாம் வதந்தியை பரப்ப தொடங்கினர்.

இவற்றிற்கெல்லாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் சகோதரி

**சமூக ஆசிரியர் சபரிமாலா (எ) ஃபாத்திமா**

இஸ்லாம்! போராட்டக் களங்கள் எனக்கு கொடுத்த வரம். என்னுடைய அம்மா, அப்பா கலப்பு திருமணம் செய்துக் கொண்டவர்கள். அதனால் உறவுகள் சூழ வளரமுடியாத ஒரு சூழல் எனக்கிருந்தது. அதேப்போல என்னுடைய நட்பு வட்டமும் சொல்லிக்கொள்ளும் அளவிற்குப் பெரியதாக ஒன்றும் அமையவில்லை. அதனால் “அன்பு” மீதான தேடல் இருந்துக் கொண்டே இருந்தது.

மேலும் நாம் வாழக்கூடிய இந்த சமூகத்தில் நிரம்பிக் கிடக்கும் சமூக சீர்கேடுகளுக்கான தீர்வுகள் குறித்த தேடல்களும் இருந்துக் கொண்டே இருந்தது.

மாதவிடாய் காலங்களில், “தீட்டு” என்று கூறி வீடுகளுக்குள் அனுமதிக்க மறுப்பது. கோவில் களுக்குள் அனுமதிக்க மறுப்பது. தமிழகம் முழுவதும் சுமார் ஆயிரம் கிராமங்களில் இந்த வழக்கம் பின்பற்றப்படுகிறது. மாதவிடாய் காலங்

களில் ஐந்து நாட்கள் பெண்களை, "வீட்டின் நிலவாசப்படிக்குள்" கூட விடமாட்டார்கள். வெளியில் இருக்கும் திண்ணையில் தான் இருக்க வேண்டும். இந்த நேரத்தில் அந்த கிராமத்தில் ஏதேனும் கோவில் திருவிழா இருந்தால், அந்த பெண்களை ஊருக்கு வெளியில் உள்ள மரத்தடியில் தங்க வைப்பார்கள்.

ஆடு, மாடுகளுக்கு கூட அடைத்து வைக்க கொட்டகை கட்டுவார்கள். ஆனால் மாதவிடாய் காலங்களில் பெண்கள், வெயில், புயல், மழை எது வந்தாலும் அப்படியேதான் தங்க வைக்கப் படுவார்கள்.

இந்த முறைமைகளை பின்பற்றக்கூடிய 18 கிராமங்களுக்கு நான் நேரில் சென்று ஆய்வு செய்துள்ளேன். அந்த கிராமங்களில், மாதவிடாய் காலங்களில் வீட்டில் குளிக்க கூட அனுமதி மறுக்கப்படுகிறது. ஊர் பொதுக்குளத்தில் தான் குளிக்கிறார்கள். பொதுக்குளத்தில் தண்ணீர் இல்லையென்றால், தெருக்குழாயில் குளிக்க வேண்டும்.

கஜா புயலின் போது ஏழாம் வகுப்பு படிக்கும் ஒரு பெண் பிள்ளை முதல் முறையாக மாதவிடாயை சந்திக்கிறாள். அவளை வீட்டிற்கு வெளியில் ஒரு கீத்து கொட்டகை கட்டி உட்கார வைத்துவிட்டார்கள். புயலின் வேகத்தில் அவள் மீது தென்னை மரம் விழுந்து அவளை பிணமா கத்தான் அந்த கீத்து கொட்டகையிலிருந்து வெளியில் எடுத்தார்கள்.

இப்படி பெண்களுக்கு எதிரான மோசமான பிற்போக்குத்தனமான சீர்கேடுகள் தமிழகத்தில் ஆயிரம் கிராமங்களுக்கு மேல் பின்பற்றப்படு கிறதென்றால், இந்தியா முழுவதும் எவ்வளவு கிராமங்கள் இருக்கும்? இவைகளுக்கான தீர்வுகள் தான் என்ன என்ற கேள்வி எனக்குள் இருந்து கொண்டே இருந்தது.

இந்த சமயத்தில் தான் சி.ஏ.ஏ. போராட்டக் களங்களில் நான் கலந்துக் கொள்கிறேன். அப்போது சக இஸ்லாமியர்கள் எனக்கு நிறைய புத்தகங்களை பரிசாக கொடுத்தார்கள். அதில் "முஹம்மத் - நபிகள் நாயகம்" எனும் நூல். ஈரோடு தமிழன்பன் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு சிறு தொகுப்பு அந்த நூல். வெறும் 30 பக்கங்கள் தான். அந்த நூலில் என்னுடைய எல்லா கேள்விகளுக்கும் தீர்வுகளை நான் பார்த்தேன்.

**வரதட்சணை பிரச்சினையா?**

ஒரு பெண் தன்னை திருமணம் செய்து கொள்ள விரும்பும் ஆணிடம், தனக்கான மஹர் கொடையை முடிவு செய்கிறாள். அதை ஏற்றுக் கொண்டு கொடுத்தால் தான் அவளை மணக்க முடியும். ஒரு ரூபாய் பணமோ, குண்டு மணி தங்கமோ, பெண் சார்பாக மாப்பிள்ளைக்கு வழங்கப்படமாட்டாது. அவள் நிர்ணயிக்கும் தொகையை மாப்பிள்ளைதான் கொடுத்து மணக்க முடியும். வரதட்சணை பிரச்சினைக்கு எவ்வளவு பெரிய தீர்வு இது.

**பெண்களுக்கு எதிரான குடும்ப வன்முறையா?**

இன்றைக்கு இருக்கும் நமது சமூக சூழலில் கணவன் என்ற "ஆண்", தன்னுடைய மனைவியை என்ன வேண்டுமானாலும் பேசலாம். கெட்ட வார்த்தைகளில் திட்டலாம் என்ற நிலை உள்ளது. கண்ணியமற்ற முறையில் நடத்தலாம் என்ற நிலை உள்ளது. இஸ்லாம் ஓர் அழகான தீர்வை ஒற்றை வரியில் சொல்கிறது. "கண்ணியமிக்க ஆண் எவனோ, அவன் தன் மனைவியை கண்ணியமான முறையில் நடத்துவான்". இதை சிறு வயதி லிருந்தே ஆண் பிள்ளைகளுக்கு கற்பித்தால் எவ்வளவு பெரிய புரட்சிகரமான மாற்றம் வரும்.

இப்படி அந்த நூலில் சமூக பிரச்சினை களுக்கு, இறைவன் புறத்திலிருந்து வந்த தீர்வாக, இறைவாக்காக இந்த தீர்வுகள் எனக்கு கிடைத் தது. சிறு வயதிலிருந்தே எனக்கு இறைநம்பிக்கை உண்டு. என் தந்தை சபரிமலை ஐயப்பன் கோவில் குருநாதர். ஐம்பது வருடங்களாக சபரிமலை கோவிலுக்கு சென்று வருகிறார். அதனால் எனக்கு கடவுள் நம்பிக்கையெல்லாம் உண்டு. இடையில் இந்த சமூகத்தில் நடக்கு பிரச்சனைகளைப் பார்த்து, சீர்கேடுகளைப் பார்த்து, "சாமியும் கிடையாது, ஒன்னும் கிடை யாது" என்ற நிலைப்பாட்டில் இருந்தவள் தான் நான். ஆனால் அப்படி ஒரு நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு என்னால் பிரச்சனைகளைத் தான் பேச முடிந்ததே தவிர, அதற்கான தீர்வுகளை சொல்லமுடியவில்லை.

பெண்களுடைய மாதவிடாய் பிரட்சினை யையே எடுத்துக் கொள்ளுங்கள். இஸ்லாம் எவ்வளவு அழகான ஒரு வரையறைய வைக் கின்றது. "மாதவிடாய் என்பது தீட்டல்ல. அந்த

நேரத்தில் அவள் தொழ வேண்டாம் என்ற சலுகை அளிக்கப்பட்டுள்ளதே தவிர, அவளை ஒரேயடியாக ஒதுக்கி வைக்க சொல்லவில்லை. தொழுபவருக்கு தொழுகை விரிப்பை எடுத்து கொடுப்பது, பாத்திரத்தில் தண்ணீர் கொண்டு வந்து கொடுப்பது, சமைப்பது போன்ற எதுவும் இங்கு தீட்டாக பார்க்கப்படுவதில்லை.

இவற்றையெல்லாம் தெரிந்து கொண்ட போதுதான், இஸ்லாம் பெண்களுடைய கண்ணியத்தை எந்தளவிற்கு போற்றுகிறது என்பது எனக்கு புரிந்தது. அதன் பின் இஸ்லாம் குறித்து நிறைய படிக்க ஆரம்பித்தேன். எனக்கு கிடைத்த இந்த பொக்கிஷத்தை மற்றவர்களுக்கும் சொல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் ரமழான் மாதத்தின் முப்பது நாட்களில் முப்பது காணொளிகள் வெளியிட்டேன். அதன் மூலம் உலகம் முழுவதும் உள்ள தமிழ்பேசும் நல்லுலகத்திற்கு, நாம் எடுத்த வைத்த செய்தி சென்று சேர்ந்தது.

இந்த நேரத்தில் தான் தமிழகத்தில் கல்யாண ராமன் என்ற மனிதர், நபி (ஸல்) அவர்கள் மீது அவதூறு பேசி, அது தமிழகம் முழுவதும் சர்ச்சையானது. அப்போது நான் முடிவெடுத்தேன். அவதூறை, அவதூறால் வென்றெடுக்க முடியாது. அவதூறை ஒழுக்கத்தாலும், நேர்மையாலும் தான் எதிர்க்க முடியும் என்று நபிகளார் (ஸல்) அவர்கள் சொல்லித் தந்துள்ளார்கள். அதன் வழியில் நின்று, இனி என் வாழ்நாள் முழுவதும் நான், "நபிகளார் காட்டிய பெண்ணியப் பாதை" என்ற பரப்புரைய செய்வேன் என்று முடிவெடுத்தேன். அதை செய்துக் கொண்டும் இருக்கின்றேன்.

**இஸ்லாம் உங்கள் வாழ்வில் வந்தபின் எப்படி உணர்கிறீர்கள்?**

இஸ்லாம் என் வாழ்வில் வந்தபின் முன்பைவிட அதிகமாக ஓடிக் கொண்டிருக்கின்றேன். "பெண்ணே பேராற்றல் பரப்புரை, வன்கொடுமைக்கு எதிரான பரப்புரை, போதை வஸ்துகளுக்கு எதிரான பரப்புரை, நபிகள் காட்டிய பெண்ணியப் பாதை என்ற பரப்புரை" என்று தொடர்ந்து செய்திகளை மக்களுக்கு சொல்லிக் கொண்டிருக்கின்றோம். நாளை எந்த களத்தில் இருக்கப்போகிறேன் என்பது தெரியாது, நான் பெற்றெடுத்த பிள்ளைகள் என்னுடன் இல்லை. எனக்காக எந்த சேமிப்பும் என்னிடம் இல்லை. இஸ்லாம் மட்டுமே உள்ளது. அது எனக்கு மன



நிம்மதியை அளிக்கிறது.

நபி(ஸல்) அவர்களுடைய வாழ்வை கவனியுங்கள். அவர் துறவியாகவோ, அல்லது முற்றும் துறந்த ஞானியாகவோ வாழவில்லை. அவர் இந்த பூமியில் இறைத்தூதராக வாழ்ந்து சென்றுள்ளார். அந்த "இறைத்தூதர்" என்ற வாழ்வு ஏதோ தனி பிரிவுகளுக்கான வாழ்வு என்று அவர் போதிக்கவில்லை. ஒரு சராசரி மனிதனுடைய வாழ்வு இந்த பூமியில் எப்படி இருக்க வேண்டும் என்று வாழ்ந்து காட்டிவிட்டு சென்றுள்ளார். இப்படியான ஒரு தலைவரை, வழிகாட்டியை பூமியில் எங்கும் உங்களால் காட்டமுடியாது.

**நபிகளாரைப் பற்றி இவ்வளவு அதிகமாக, ஆர்வமாக பிரச்சாரம் செய்கிறீர்கள். எப்படி வந்தது இந்த ஆர்வம்?**

நான் ரமழான் மாதத்தில் 30 காணொளிகள் வெளியிட்டபோது, ஒருநாள் நபிகளாரின் அன்பு மகள் ஃபாத்திமா (ரழி) அவர்கள் பற்றி பேசுவதற்காக குறிப்புகள் எடுத்துக் கொண்டிருந்தேன். அப்போது ஒரு செய்தி படிக்க நேரிட்டது.

"நபி(ஸல்) அவர்கள் எப்போதும் எங்கு சென்றாலும், அன்னை ஃபாத்திமா (ரழி) அவர்களை சந்தித்துவிட்டுதான் செல்வார்களாம். அதேபோல எங்கிருந்து வந்தாலும் அன்னை ஃபாத்திமா (ரழி) அவர்களை சந்திப்பது வழக்கமாம். அப்படியொரு நாள் வெளியில் செல்லும் போது, அன்னை ஃபாத்திமா (ரழி) அவர்களை சந்திக்க வருகின்றார்கள். அப்போது ஃபாத்திமா (ரழி) ஒரு தங்க நகையை தனது கழுத்தில் அணிந்

திருக்கிறார்கள். அதைக்கண்ட நபி (ஸல்) அவர்கள் எதுவும் பேசாமல் மௌனமாக சென்று விட்டார்கள். பதறிப்போன ஃபாத்திமா (ரழி) அவர்கள், தந்தையிடம் "என்ன நடந்தது வாப்பா? ஏன் ஏதுவும் பேசாமல் அமைதியாக செல்கிறீர்கள்?" என்று கேட்கிறார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் சொல்கிறார்கள், "இறைத்தூதரின் மகள் தனது கழுத்தில் நரக நெருப்பின் மாலையை அணிந்திருப்பது பொருத்தமாகுமா?" என்று. இதை கேட்ட அடுத்த கனமே, அந்த தங்க சங்கிலியை ஒரு ஏழைக்கு தர்மம் செய்துவிட்டு, இனி தன் வாழ்நாளில் தங்கமே அணிய மாட்டேன் என வாழ்நாள் முழுவதும் அப்படியே இருந்துள்ளார்கள் அன்னை ஃபாத்திமா (ரழி) அவர்கள்."

இந்த சம்பவத்தை படித்தபிறகு என் கழுத்தில் இருந்த ஒரு பவுன் நகையை நான் கழற்றிவிட்டேன். என் கையில் இருந்த ஆறு பவுன் நகையையும், பொதுச் சொத்தாக அறிவித்துவிட்டு, இனி நான் தங்க நகை அணியப்போவதில்லை என்று முடிவெடுத்துவிட்டு அன்றைய தினம் நான் அன்னை ஃபாத்திமா (ரழி) அவர்கள் வரலாற்றை பேசினேன்.

இன்றைக்கு நாம் வாழும் சமூக சூழலில் தங்கம் பெண்களுக்கான ஒரு ஆபரணமாக மட்டு மில்லை. அது மக்களின் வர்க்க நிலையை தீர்மாணிக்கும் ஒரு கருவியாக உள்ளது. அதனால் பல பெண்கள் தங்களுக்கு அத்தியாவசியமில்லாத தங்கத்தை வாங்க கடன்படுகின்றனர். தங்கம் இல்லாத திருமணமே நடப்பதில்லை. இதில் முஸ்லிம்களும் விதிவிலக்கல்ல. இப்படியான தங்கத்தின் மீதான, அல்லது ஒரு பொருளின் மீதான போதையை, அதை எப்படியாவது அடைந்தே தீரவேண்டும் என்ற எண்ணத்தை போக்குவதற்கான அழகான முன்மாதிரிதான் மேலே நான் சொன்ன சம்பவம். இந்த முன் மாதிரி நபிகளாரின் வாழ்வில் மட்டும் தான் நான் பார்த்தேன்.

இரண்டு கால்களை நீட்டிக்கொண்டு படுப்ப தற்கு கூட இடவசதி இல்லாத ஒரு வீட்டில் வாழ்ந்த, சொந்த வீடில்லாத ஒரு தலைவரை உங்களால் காட்டமுடியுமா?

ஒரு நாள் சாப்பிட்டால், அடுத்த இரண்டு நாட்களுக்கு உணவில்லாமல், வயிற்றில் ஈரத் துணியை கட்டிக்கொண்டு, கல்லைக் கட்டிக் கொண்டு வாழ்ந்த தலைவரை உங்களால் காட்ட முடியுமா?

பெண் பிள்ளைகளை உயிரோடு புதைத்துக் கொண்டிருந்த காலகட்டத்தில், பெண் பிள்ளைகள் பிறந்தால், அதை நற்செய்தி என்றும், அவர்கள் சுவனத்து தேவதைகள் என்றும் அறிவித்த ஒரு தலைவரை காட்ட முடியுமா?

ஒரு பெண் வெளியில் சொல்ல முடியாத பாலியல் சம்மந்தமான விஷயங்களுக்கு கூட தீர்வுகள் சொன்ன ஒரு தலைவரை உங்களால் காட்ட முடியுமா?

நான் எனது நூலகத்தில் 2000 நூல்கள் வைத்துள்ளேன். ராமாயணம், மகாபாரதம் எல்லாம் நான்கு முறைகளுக்கு மேல் படித்துள் ளேன். பைபிள் படித்துள்ளேன். புத்தம் படித்துள் ளேன். ஆனால் எதிலும் இன்றைய நவீன கால பெண்கள் எதிர்கோள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வில்லை.

நபி (ஸல்) அவர்கள் உயிரோடு இருக்கும் போது, பெண்களுக்கான சமூக அந்தஸ்து, கண்ணியம் எல்லாம் சாத்தியமாகிவிட்டது. நபிகளாரின் காலத்தில் அன்னை கதிஜா(ரழி) அவர்கள் மிகப்பெரிய தொழிலதிபர். நபிகளாரின் காலத்தில் போர்களத்தில் ஆண்களுக்கு நிகராக பெண்கள் வீரம் காட்டியுள்ளனர். செவிலியர் களாக பணியாற்றியுள்ளனர். சில நேரங்களின் முக்கியமான அரசு செய்திகளின் தூதுவர்களாக கூட பெண்கள் இருந்துள்ளனர்.

**இப்படி நவீன கால பெண்களுக்கான, பிரச் சினைகளுக்கான தீர்வுகளை 1400 ஆண்டுகளுக்கு முன்பே சாதித்துக்காட்டிய நபி (ஸல்) அவர்களை மட்டும்தான் என்னால் தலைவராக ஏற்றுக்கொள்ள முடியும்.**

*(ஃபாத்திமா சபரிமாலா அவர்களின் பல்வேறு உரைகளில் இருந்து தொகுக்கப்பட்ட கட்டுரை)*

- அஷ்ரப் அலீ

# இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்), சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்)



## ஓர் அறிமுகம்

– தொடர்

வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் முக்கியமானவர்கள் இமாதுத்துன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஆகியோர். ஆனால் மறக்கப்பட்டு விட்டவர்கள்.

நபி(ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக்களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

ஜெருசலேம் யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித்தவர்களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக கி.பி.1095இல் போப் அர்பன் 2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப்போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டன.

இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப் போர்களிலும் சிலுவைப்படையினர் முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் தாங்கள் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியாயங்களை முஸ்லிம்களுக்கு செய்தனர். இந்த அநியாயங்களில் அவர்கள் கிறித்தவர்களையும் கூட விட்டு வைக்கவில்லை. அவர்களையும் கொலை செய்தனர். சிலுவைப் படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு வெறி கொண்ட கூட்டமாக அவர்கள் இருந்தனர். சிறுவர்களோ பெரியவர்களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் காண்வர்களை எல்லாம் கொன்று, பார்வையில் பட்டதை எல்லாம் கொள்ளையடித்து சென்றனர்.

அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் தாக்குதல்களை தடுக்கவே முடியாத கையறு நிலையில் முஸ்லிம்கள் இருந்து வந்த வேளையில் முதன் முதலில் அவர்களை நோக்கி எதிர் தாக்கு தலை தொடுத்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள். முஸ்லிம்களை ஒரு தலைமைக்குள் கொண்டு வர முயன்றவர். ஜிஹாதை மறந்து இருந்த இஸ்லாமிய சமுதாயத்திற்கு ஜிஹாதை மீண்டும் நினைவுப்படுத்தியவர். கிறித்தவர்களின் கையில் இருந்து எடெஸ்ஸா போன்ற முக்கியமான பகுதிகளை கைப்பற்றியவர்.

இதன் பின்னர் இந்த பணிகளை அடுத்த

நிலைக்கு எடுத்து சென்றவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். சிலுவைப்படையினரை சின்னா பின்னப்படுத்தியவர். இன்று சுல்தான் ஸலாஹூத்தீன் அய்யூபி(ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் ஸலாஹூத்தீன் அய்யூபி அவர்களின் தலைவராக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

இஸ்லாத்தை பின்பற்றுவதிலும் அதனை செயல்படுத்துவதிலும் நேர்வழி நின்று ஆட்சி செய்த, சொர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப்பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ்(ரஹ்), இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திறமையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள்.

நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப் படையினருக்கு எதிராக ஓர் ஒருங்கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

நூருத்தீன் ஸங்கிக்கு பிறகு அந்த பணியை தொடர்ந்தவர் ஸலாஹூத்துன் அய்யூபி அவர்கள். இவர் காலத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம்களின் கையில் வந்தது. இந்த வடு ஆறாத வடுவாக கிறித்தவர்களுக்கு இருந்தது. முதலாம் உலகப் போரின் போது பிரெஞ்சு தளபதி ஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட் என்பவன் சலாஹூத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலத்தை எட்டி உதைத்து "எழுந்திரு, ஸலாஹூத்தீன் நாங்கள் திரும்பி வந்து விட்டோம். இன்றைய தினம் பிறையை சிலுவை வெற்றி கொண்டு விட்டது" என்று வெறிகொண்டு கூறியதிலிருந்து ஸலாஹூத்தீன் அய்யூபி அவர்கள் கிறித்தவர்களுக்கு கொடுத்த அடி எப்படிப்பட்டது என்பதை உலகம் அறியும். கிறித்தவ உலகம் கிட்டத்தட்ட எண்ணூறு வருடங்களுக்கு பிறகு வரலாற்றை நினைவில் வைத்து இஸ்லாமிய உலகத்தை பழி தீர்த்து கொண்டது.

ஆனால் இஸ்லாமியர்கள் தங்களது வரலாற்று நாயகர்களை மறந்துவிட்டது தான் வேதனை. இனி உள்ளே...

## ஸலாஹூத்தீன் அய்யூபியின் பிறப்பின்போது நடந்த சம்பவம்

ஸலாஹூத்தீன் அய்யூபி அவர்கள் பிறந்த போது தான் திக்ரித் கோட்டையின் ஆட்சியாளர், நஜ்முதீன் அவர்களையும் அவருடைய சகோதரர் அசதுதீன் அவர்களையும் கோட்டையை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டிருந்தார். அசதுதீன் ஒரு கிறித்தவரை கொன்று விட்ட காரணத்திற்காக இப்படி உத்தரவிடப்பட்டிருந்தது. நஜ்முதீன் அவர்கள் அந்த இடத்தின் மூலை முடுக்கெல் லாம் அறிமுகமாகி விட்டிருந்ததன் காரணமாக திக்ரித் கோட்டை அவருடைய சொந்த ஊராகி விட்டிருந்தது. அந்த இடத்தை பிரிவது அவருக்கு மிகவும் கடினமாக இருந்தது. அவர் மிகவும் கவலையாகி விட்டிருந்தார்.

மலாத்யா நகரின் தற்போதைய தோற்றம்



லாஹூத்தீன் அய்யூபி அவர்களின் பிறந்த உடனேயே இந்த நிகழ்வுகள் நடத்ததால் அவர் ஸலாஹூத்தீன் அவர்களின் பிறப்பை துரதிருஷ்டமாக நினைத்தார். அந்த கோட்டையை விட்டு வெளியேறும் போதும் அவர் அப்படித்தான் நினைத்தார். அவருடைய எண்ணத்தை அறிந்து கொண்ட அவருடைய கிறித்தவ வேலைக்காரரர் ஒருவர் அவரிடம் பேசுவதற்கு அனுமதி கேட்டான். அவர் பேச அனுமதி அளித்ததும் அந்த வேலைக்காரரர் இப்படி கூறலானார்," ஐயா, இந்த குழந்தை குறித்த உங்கள் எண்ணத்தை நான் குறிப்பினால் அறிந்து கொண்டேன். இந்த குழந்தையின் தவறென்ன? நடந்துள்ளவை அனைத்தும் அல்லாஹ் உங்கள் மீது விதித்தவை. அப்படியிருக்க நீங்கள் இந்த குழந்தை ஒரு திறமையான அரசனாக மாற மாட்டான் என்று எப்படி நினைக்கக்கூடும்?"



சிவாஸ் நகரின் தற்போதைய தோற்றம்

இந்த வார்த்தைகளை கேட்ட பின்னர் நஜ்முதீன் தெளிவு பெற்றார். அந்த கிறித்தவரின் பேச்சும் உண்மையானது. நஜ்முதீன் அவர்கள் நீண்ட நாட்களாக இதை கூறிக் கொண்டே இருப்பார். "நான் யாரை துரதிருஷ்டமாக நினைத்தேனோ அந்த மகன் தான் என்னை பெருமைப் படுத்திக் கொண்டே இருக்கிறான்" என்று அவர் உயிரை விடும் வரை கூறிக்கொண்டே இருந்தார். இதன் காரணமாகவே அவர் ஸலாஹுத்தீனிடம் சற்று கூடுதலாகவே அன்போடு இருந்தார். இதனால் தான் அவருடைய மரணம் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களை பெரிதும் பாதித்தது.

## நூருத்தீன் ஸங்கி அவர்கள் முஸ்லிம் மன்னருடன் போர்

பொதுவாக நூருத்தீன் ஸங்கி அவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராகவோ அல்லது இஸ்லாமிய நிலத்திற்கு எதிராகவோ போர் செய்வதை தவிர்த்து வந்தார். அவர்களை ஒருங்கிணைப்பதே அவருடைய நோக்கம். அவர்களுடன் போரிடுவது அல்ல. ஆனாலும் தற்போது வேறு வழியின்றி அப்படி நடந்து விட்டது.

இஸ்ஸுத்துன் காலிஜ் அர்ஸலான் என்பவர் மலாத்யா மற்றும் ஸிவாஸ் ஆகிய நகர்களின் மன்னர் துஅந்நூன் என்பவரை முற்றுகையிட்டு அந்த நகர்களை கைப்பற்றும் முயற்சியை மேற்கொண்டிருந்தார். இஸ்ஸுத்துன் காலிஜ் அர்ஸலான் முஸ்லிமாக பிறந்து இருந்தாலும் அவர் ஒரு இறை மறுப்பாளர். மேலும் முஸ்லிம்களின் பகுதிகளை ஆண்டு கொண்டே ரோமர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு முஸ்லிம்களுக்கு எதிராக செயல்பட்டு வந்தவர். அவரை எதிர்த்து போரிட முடியாத துஅந்நூன் அவர்கள் நூருத்தீன் ஸங்கி அவர்களிடம் உதவி கோரி இருந்தார். நூருத்தீன் அவர்களும் அவரிடம் நிச்சயம் உதவுவதாக வாக்களித்திருந்தார்.

இதனடிப்படையில் நூருத்தீன் அவர்கள் இஸ்ஸுத்துன் காலிஜ் அர்ஸலானுக்கு செய்தியனுப்பி அவர் கைப்பற்றிய பகுதிகளை மரியாதையாக ஒப்படைத்துவிட்டு திரும்ப செல்லும் படி கூறியிருந்தார். ஆனால் காலிஜ் அர்ஸலான் இதனை காதில் போட்டுக் கொள்ளவில்லை. எனவே, நூருத்தீன் படையெடுத்து சென்று கிசுன், பஹ்ஸானி, மராஷ் மற்றும் அதை சுற்றியுள்ள கோட்டைகளை கைப்பற்றினார். மேலும் அவருடைய படையில் ஒரு பிரிவினரை சிவாஸ் கோட்டையை கைப்பற்ற அனுப்பினார்.

தன்னுடைய நாட்டை நோக்கி நூருத்தீன் ஸங்கி படையெடுத்து வந்துள்ளதை அறிந்த பின்பு தான் இஸ்ஸுத்துன் காலிஜ் அர்ஸலான் தான் எவ்வளவு பெரிய தவறை செய்து விட்டோம் என்பதை உணர்ந்து கொண்டார். அச்சம் அவரை தொற்றிக் கொண்டது. அந்த அச்சத்தின் காரணமாக அவர் தனது நாட்டின் மையப்பகுதிக்கு சென்று அங்கு பதுங்கிக் கொண்டார். அவர் நூருத்தீன் ஸங்கி அவர்களுக்கு மன்னிப்பு கோரியும் சமாதானம் கோரியும் ஒத்திசைவு செய்து கொள்ள செய்தி அனுப்பினார். ஆனால் நூருத்தீன் அவர்கள் பல நிபந்தனைகளை விதித்து அதனை ஏற்றுக் கொண்டால் தான் சமாதானம் என்று கூறி விட்டார்.

அந்த நிபந்தனைகளில் மூன்று முக்கியமானது. "முதலாவது நீ மீண்டும் கலிமா சொல்லி இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒரு முஸ்லிம் மட்டுமே இஸ்லாமிய நிலங்களை ஆட்சி செய்ய அனுமதிக்க முடியும். நான் உன்னை முஸ்லிம் என்று நம்பவில்லை. எனவே, நீ மீண்டும் இஸ்லாத்தை கலிமா சொல்லி ஏற்றுக் கொண்டால் மட்டுமே உன்னிடம் இஸ்லாமிய நிலங்களை ஒப்படைக்க இயலும். இரண்டாவது நான் சிலுவைப்படையினரை எதிர்க்கும் போது உதவிக்கு உன்னை அழைத்தால் உடனே வர வேண்டும். நீ இஸ்லாமியர்களின் நிலங்களில் பெரும் பகுதியை ஆட்சி செய்து கொண்டு ரோமர்களுடன் ஒன்று சேர்ந்து கொண்டு அவர்களை எதிர்த்து போர் செய்யாமல் இருக்கிறாய்.

ஒன்று சிலுவைப்படையினரை எதிர்த்து போரிடும் போரில் உன்னுடைய படை வீரர்களை தந்து எனக்கு உதவி செய் அல்லது ரோமானியர்களுடன் சேர்ந்து கொண்டு கஷ்டப்படு. மூன்றாவது நீ உன்னுடைய மகளை என்னுடைய மருமகன் ஸைஃபுத்தீன் காஜிக்கு மணமுடித்து தர வேண்டும்" என்று கூறி விட்டார்.

இன்னும் பல நிபந்தனைகளையும் நூருத்தீன் கூறியிருந்தார். இஸ்ஸூத்துன் காலிஜ் அர்ஸலான் அவர்களுக்கு இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியேதும் இருக்க வில்லை. இந்த ஒத்திசைவுகளுக்கு பிறகு நூருத்தீன் ஃபக்ருதீன் என்பவரையும் அவருடைய படை வீரர்களில் சிலரையும் சிவாஸ் நகரத்தில் துஅந்நூன் அவர்களுடன் பாதுகாப்பிற்காக விட்டுவிட்டு திரும்பிவிட்டார்.

**நூருத்தீன் அவர்களின் மரணம் வரை அவர்கள் அந்த நகரிலேயே இருந்தனர். அவர்கள் திரும்பிய பின்னர் மீண்டும் இஸ்ஸூத் துன்காலிஜ் அர்ஸலான் மீண்டும் சிவாஸ் நகரை கைப்பற்றிக் கொண்டார்.**

- இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்.

# கருத்தியலை மட்டுமே உருவாக்க வேண்டும் என்பது சரியா?

அப்படி சொல்பவர்கள் வரலாறை பார்த்தால் முஸ்லிம்களுக்கு எதிரான கருத்தியலை தான் உருவாக்கி வந்துள்ளனர். ஆரம்ப காலத்தில் இந்தியாவில் குண்டு வெடிப்புகள் நிகழ்ந்த போது உடனே மீடியாக்களில் குண்டு வைத்தவர்களுக்கு இஸ்லாமே தெரியாது.

அவர்கள் இஸ்லாமியர்களே இல்லை என்பது போன்று பத்வாக்களை கொடுத்து முஸ்லிம்கள் தான் குண்டு வைத்ததாக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து விடுவார்கள். தங்களின் பத்திரிகையான சமரசத்திலும் அவ்வாறே எழுதி விடுவார்கள்.

சிமியின் தலைவராக இருந்து விட்டு சிமிக்கும் எங்களுக்கும் தொடர்பில்லை என்பார்கள். இது தான் இவர்கள் உருவாக்கிய கருத்தியல். அவ்வேளையில் குலாம் முஹம்மது மட்டுமே இதற்கும் முஸ்லிம்களுக்கும் சம்பந்தமில்லை எந்த. முஸ்லிமும் இது போன்று செய்ய மாட்டார் என தன்னுடைய விடியல் வெள்ளி பத்திரிகை வாயிலாகவும் தன்னுடைய அமைப்பான மனித நீதி பாசறை வாயிலாகவும் சொல்லி வந்தார்.

மாலேகான் குண்டு வெடிப்பிலிருந்து கர்கரே யார் குண்டு வைக்கிறார்கள் என்ற உண்மையை வெளி உலகிற்கு கொண்டுவந்தார். அதனால் அவர் கொல்லவும் பட்டார். அதன் பின் கர்கரேயை கொன்றது யார்? எந்த புத்தகத்தின் வாயிலாக முஸ்லிம்கள் குண்டு வைக்கவில்லை என்ற கருத்தியலை தமிழகம் முழுக்க கொண்டு சேர்த்தது தாருல் இஸ்லாமும் குலாம் முஹம்மது அவர்களும்.

இன்று தமிழகத்தில் குண்டு வைத்தது முஸ்லிம்கள் அல்ல என்ற கருத்தியல் ஆழமாக பதிய வைக்கப்பட்டு விட்டது. ஆகவே கருத்தியல் உருவாக்க வேண்டும் என்பவர்களால் இதுவரை எந்த கருத்தியலுமே உருவாக்க முடியவில்லை என்பதும் அவர்கள் இஸ்லாத்திற்கு எதிராக தான் கருத்தியலை உருவாக்கினர் என்பதுமே வரலாறு. இன்ஷா அல்லாஹ் தொடரும்




# யாசின் மாலிக்குக்கு ஆயுள் தண்டனை என்.ஐ.ஏ சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு

## விசாரணை முறைகள் சரியா?



**வழக்கறிஞர் கமருதீன்**
திருச்சி.

நீதியை நிலை நாட்டுவதற்குத் தன்னலமற்று உழைத்துக் கொண்டிருப்பவர், எளிமையானவர், ஏழைகளின் தோழர்.

திருச்சி விமான நிலையத்தில் வைத்து தமீம் அன்சாரி என்பவர் கைது செய்யப்பட்ட விவகாரம் அன்று அகில உலகையும் உலுக்கியது. ஏனெனில் தமீம் அன்சாரி என்பவர் இந்தியாவின் இராணுவ இரகசியங்களைக் கடத்திட முயற்சி செய்தார் என அதிர்வலைகளை அதிகாரவர்க்கம் ஏற்படுத்தியது.

**எங்கும் பீதி!**

தொலைக்காட்சிகளில் அப்படி அனல் பறந்தது. பார்ப்பவர்கள் ஆவேசத்தால் ஆட்கொள்ளப் பட்டார்கள். ஆனால் அவர் ஓர் அப்பாவி வியாபாரி. எல்லோரும் நம்பித்தான் ஆக வேண்டும் என்றொரு நிலை.

யாரும் பேசிட தயங்கிய நிலை, அவர் திருச்சி சிறையில் கொடுமைகளை அனுபவிக்கின்றார் என்பதறிந்து, சிறையில் அவரைப் பார்க்கச் சென்றார். வழக்கு உப்புசப்பற்றது என்பதை அறிந்து அவரும் அவருடைய சீனர் கென்னடியும் சென்று அந்த வழக்கை எடுத்துத் தங்கள் தலையில் போட்டுக் கொண்டார்கள்.

நீதிக்கான போரில் தொடர்ந்து போராடி அவருக்குப் பிணையை பெற்றுத் தந்தார்கள். பின்னர் என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வு முகமைக்கு அந்த வழக்கு மாற்றப்பட்டபோது, அதில் தொடர்ந்து வாதாடி வருபவர்.

வைகறை வெளிச்சம் இதழில் மூன்று விரிவான கட்டுரைகளை வெளியிட்டிருந்தோம்.

அன்றைய நாட்களில்.

இன்று என்.ஐ.ஏ. உபா என்ற Unlawful Activities Prevention Amendment Act என்றால் வழக்கறிஞர் கமருத்தீன்தான் என்றாகிவிட்டது.

அகில இந்திய அளவில் என்.ஐ.ஏ. NIA - Act உபா ஆகியவற்றிற்கு எதிராக ஒருபெரும் போர் நடந்து வருகின்றது. அதில் வைகறை வெளிச் சத்தைப் போர் முன்னணியில் நிற்பவர். அல்ஹம்து லில்லாஹ்!

யாசின் மாலிக்கு வழங்கப்பெற்ற தண்டனை குறித்து நமக்கு ஏற்பட்ட ஐயங்கள் குறித்து அவரிடம் பேசினோம். பல சட்ட நுணுக்கங் களைச் சொன்னார். அவை மக்களுக்குத் தெரிந்தாக வேண்டும் என எழுதி கேட்டோம்.

ஓர் சட்ட ஆய்வை நடத்தி வருகின்றேன் என்றார். தொடரைத் தொடங்கி வையுங்கள் என்றோம். தொடங்கி இருக்கின்றார் நன்றிகள் பல...

**சட்டம் சொல்வது என்ன?**

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி அமைப்பின் தலைவர் யாசின் மாலிக் மீது தீவிரவாத இயக்கங்களுக்கு நிதியுதவி அளித்தது, காஷ்மீரில் 2017-ம் ஆண்டில் தீவிர வாதத்தை பரப்பியது, தீவிரவாத செயல் களுக்கு சதித் திட்டம் தீட்டியது உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் பேரில் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் (உபா-UAPA) கீழ் பிரிவுகள் 17, 18, 20, 38, 39 மற்றும் 40 மேலும் இந்திய தண்டனைச் சட்டத்தின் 120B, 121, 121A பிரிவுகளின் கீழ் தேசிய புலனாய்வு நிறுவனம் (என்ஐஏ) வழக்கு பதிவு செய்தது.

அந்த வழக்கில் யாசின் மாலிக் உள்ளிட்ட பலர் கைது செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டு முதல் ஜாமீன் ஏதுமின்றி திகார் சிறையில் இருந்து வந்தனர். இவ்வழக்கில் என்ஐஏ குற்றப் பத்திரிகை தாக்கல் செய்த பின்னர் கடந்த மார்ச் மாதம், குற்றம் சாட்டப்பட்ட வர்கள் மீது குற்றச்சாட்டுகள் பதிவு செய்யும் சட்ட நடைமுறைகளுக்குப் பின்னர் யாசின் மாலிக் அவர்களுக்கு டெல்லியில் உள்ள என்ஐஏ சிறப்பு நீதிமன்ற நீதிபதி பிரவீன் சிங் அவர்கள், யாசின் மாலிக் குற்றவாளி என கடந்த 19-ம் தேதி அறிவித்ததார். அவருக்கு மட்டும் தண்டனை கடந்த 25.05.2022 தேதியன்று அறிவிக்கப்பட்டது.

தீர்ப்பில் யாசின் மாலிக் அவர்களுக்கு இரண்டு ஆயுள் தண்டனைகளும், இரண்டு பத்து ஆண்டுகள் சிறைத்தண்டனையும், ஒரு ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனையும், ரூபாய் பத்து இலட்சத்து முப்பது ஐந்தாயிரம் ரூபாய் அபராதமும் விதித்து தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த தீர்ப்பில் பல விநோதங்களும் ஆச்சரியங்களும் சட்ட மீறல்களும் நடந்துள்ளது. முதலில் இந்த தீர்ப்பு முழுமை யான சாட்சிய விசாரணை ஏதுமின்றி அவசர கதியில் வழங்கப்பட்ட தீர்ப்பாகும்.

விரைவான தீர்ப்பு என்பது நீதியை குழிதோண்டி புதைப்பதற்குச் சமம் (Justice hurried is justice buried) என்ற சட்ட முது மொழிக்கு உதாரணமாக இந்த தீர்ப்பில் நீதி குழிதோண்டி புதைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் நம் அனைவரையும் ஆச்சரியப்படுத்தும், செய்திகளில் மறைக் கப்பட்ட, நம் கவனத்திற்கு கொண்டுவரப் படாத முக்கிய அம்சம், இந்த வழக்கில் தன் மீதான குற்றச்சாடுகளை யாசின் மாலிக் மறுத்து வழக்கு நடத்தாமல் குற்றச்சாடுகளை ஒப்புக்கொண்டதன் காணரமாக (Pleaded guilty) தண்டனை பெற்றுள்ளார்.

ஆனால் உடன் குற்றம் சுமத்தப்பட்ட ஹபிஸ் முகமது சயீத், ஷப்பீர் அஹமது ஷா, ஹிஸ்புல் முஜாஹிதீன் தலைவர் சலாஹுத்தீன், ரஷீத் இன்ஜினியர், ஜஹூர் அஹமது ஷா வாட்டாளி, ஷஹீதுல் இஸ்லாம், அல்டப் அஹமது ஷா என்கிற பான்டூஸ் நயீம் கான், பாரூக் அஹமது டார் என்கிற பிட்டா கராத்தே உள்ளிட்ட மற்றும் பலர் தங்கள் மீதான குற்றச்சாடுகளை மறுத்ததன் காரண மாக அவர்கள் மீதான சாட்சிய விசாரணை


யாசின் மாலிக்

ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் குற்றச்சாட்டு பதிவு செய்யக்கூட போதுமான ஆதாரங்கள் ஏதும் இல்லாமல் கம்ரன் யூசுப், ஜாவேத் அஹமது மற்றும் சையத் ஆயிஷா பிர்தௌஸ் அன்ட்ராபி உள்ளிட்ட மூன்று நபர்கள் வழக்கில் இருந்து நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு அதாவது Discharge செய்யப்பட்டுள்ளனர்.

இப்படிப்பட்ட ஒரு பலவீனமான குற்றச் சாடுகளை கொண்ட வழக்கில் யாசின் மாலிக் வழக்கு சாட்சிய விசாரணைக்கு முன்னதாகவே வழக்கின் ஆரம்பக்கட்டத்திலேயே தன் மீதான குற்றச்சாடுகளை ஒப்புக்கொண்டு தண்டனை பெறவேண்டிய அவசியம் என்ன? என்று நாம் ஆச்சரியப்பட வேண்டியுள்ளது. யாசின் மாலிக் அவர்களின் மனைவி அவர் களின் டிவிட்டர் பதிவுகளில் தன் கணவருக்கு பொய்யான வழக்கில் தண்டனை வழங்கப் பட்டுள்ளது என சொல்லும்போது அவர் மனைவிக்குகூட தன் கணவர் குற்றச்சாட்டு களை ஒப்புக்கொண்டு தண்டனை பெற்றுள்ள விபரம் தெரியாதா?

கடுமையான குற்றச்சாடுகளை கொண்ட ஆயுள்தண்டனை, மரண தண்டனை விதிக் கப்படக்கூடிய வழக்குகளில், குற்றம் சாட்டப் பட்ட நபர் ஆரம்ப நிலையிலேயே குற்றச் சாட்டுகளை ஒப்புகொண்டாலும், நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவர் ஒப்புக் கொண்டதை குறித்துக்கொண்டு, அந்த நபர் குற்றச்சாட்டு களை மறுத்ததாக கருதி சாட்சிகளுக்கு சம்மன் அனுப்பி சாட்சியங்கள் மூலம் குற்றத்தை நிரூபிக்க அரசு தரப்பிற்கு உத்தரவிட வேண்டும். ஒரு நபர் குற்றம் சாட்டப்பட்ட வழக்கிற்கே இந்த நடைமுறையை பின்பற்ற வேண்டும் என்றால், இந்த வழக்கில் யாசின் மாலிக் தவிர மற்றவர்கள் தங்கள் மீதான குற்றச்சாடுகளை மறுத்து அவர்களுக்காக வழக்கு சாட்சிய விசாரணைக்கு வாய்தா போடப்பட்ட நிலையில் யாசின் மாலிக் அவர்களுக்கு மட்டும் எவ்வாறு விசாரணை நீதிமன்றம் தனியே தீர்ப்பு வழங்கும் என்பது மில்லியன் டாலர் சட்டக் கேள்வி!

இதுபோன்ற பல சட்ட பிரச்சனைகள் குறித்து சட்டம் மற்றும் உச்ச நீதிமன்ற உயர் நீதிமன்ற தீர்ப்புக்கள் என்ன சொல்கின்றன என்பது குறித்த விரிவான சட்ட வல்லுனர் களின் கருத்துக்களுடன் கட்டுரை அடுத்த இதழில் .....

முழுமையான வழக்கில் இந்த வழக்கின் தீர்ப்பில் உள்ள மற்ற ஒரு ஆச்சரியம். முன்னதாக என்ஐஏ தரப்பில் யாசின் மாலிக்குக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும் என தேசிய புலனாய்வு நிறுவனம் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.



தொடர்

# பிராமினிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

**பல வழக்குகளில் அப்பாவி முஸ்லிம்கள் பல ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டு சின்னா பின்னமாக்கப்பட்ட பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.**

*கடந்த சில வருடங்களாக தீவிரவாத தொடர்புடைய வழக்குகளில் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் எந்தவித தொடர்பும் இல்லை என்றோ அல்லது சரியான முறையில் குற்றம் நிரூபிக்கப்பட வில்லை என்று கூறியோ நீதி மன்றங்களால் விடுவிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலான வழக்கு களில் சந்தேகித்து கைது செய்யப்பட்டவர்கள் பல வருடங்கள் தங்கள் வாழ்நாளை சிறையில் கழித்த பின்னர் போதுமான ஆதாரங்கள் இல்லை என்று நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்டுள்ளது விசாரணை நிறுவனங்கள் மேற்கொண்ட விசாரணையின் மீது மிகப்பெரிய கேள்வியை எழுப்பியுள்ளது. நீதிமன்றங்கள் இப்படி குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு விடுதலை தந்து அவர் களை குற்றவாளிகள் இல்லை என சான்றளிப் பதற்கு முன்னதாக அவர்கள் பத்து வருடங்களுக்கு மேலாக சிறையில் தங்கள் வாழ்க்கையை தொலைக்க வேண்டிய தாகிவிட்டது.*

### I) அக்ஷர்தம் கோவில் காந்திநகர் குஜராத் தீவிரவாத தாக்குதல் வழக்கு – செப்டம்பர் 2002

*உச்ச நீதிமன்றம் 16,மே,2014–இல் அக்ஷர்தம் வழக்கில் கீழமை நீதிமன்றங்களால் குற்றவாளிகள் என உறுதி செய்யப்பட்ட 6 பேரையும் விடுதலை செய்தது. மேலும் குஜராத் காவல் துறையை அப்பாவி மக்கள் மீது பொய்யான வழக்கை புனைந்தமைக்காக கடிந்திருந்தது.*

*அரசு தரப்பின்படி செப்டம்பர் 2002, 24 மற்றும் 25 இரவுகளின் மத்தியில் இரண்டு ஆயுதம் தாங்கிய தாக்குதல்காரர்கள் குஜராத்தின் காந்திநகரில் உள்ள அக்ஷர்தம் கோவிலின் வளாகத் திற்குள் நுழைந்து பொதுமக்களில் 30 பேரை கொலை செய்தனர். அவர்களில் 80 பேரை காயப்படுத்தினர். அந்த இரண்டு தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர். 2002 செப்டம்பர் 25 அன்று இரவு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப் பட்டது. பின்னர் விசாரணை 3 அக்டோபர் 2002 இல் குஜராத்தின் தீவிரவாத தடுப்பு படைக்கு மாற்றப்பட்டது.*

*2003 ஆகஸ்ட் 28ஆம் தேதி அதாவது கிட்டத்தட்ட 11 மாதங்களுக்கு பிறகு விசாரணை க்ரைம் (குற்றப் பிரிவுக்கு) பிராஞ்சுக்கு மாற்றப் பட்டது. மாற்றப்பட்ட அடுத்தநாளே அதாவது 29 ஆகஸ்ட் 2003 அன்று ஐந்து நபர்கள் அல்தாப் மாலிக், ஆதம் பாய் அஜ்மீரா, முகம்மது சலீம் ஷேக், அப்துல் கையூம் பாய், அப்துல்லா மியான் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.*

*ஆறாவதாக குற்றம் சாட்டப்பட்ட சாந்த் கான், 2003 செப்டம்பர் 12ஆம் தேதி காஷ்மீர் காவல்துறை காவலில் இருந்து அஹமதாபாத்திற்கு கொண்டுவரப்பட்டார்.*

*விசாரணையின் நிறைவுக்கு பின்னர் இந்த ஆறு நபர்களுக்கும் எதிராக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு விசாரணை தொடங்கியது. விசாரணை நீதிமன்றம் ஜனவரி 2006 ஆம் தேதி அன்று தன்னுடைய தீர்ப்பினை கூறியிருந்தது.*

அதில் குற்றம் சாட்டப்பட்ட 6 பேரும் குற்ற வாளிகள் என அறிவிக்கப்பட்டிருந்தது. 3 பேருக்கு தூக்கு தண்டனையும் ஒருவருக்கு ஆயுள் தண்டனையும் ஒருவருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனையும் மற்றொருவருக்கு ஐந்து ஆண்டுகள் சிறை தண்டனையும் என அதில் தீர்ப்பளிக்கப்பட்டு இருந்தது.

மேல்முறையீட்டில் குஜராத் நீதிமன்றம் சிறப்பு நீதிமன்றத்தின் உத்தரவை உறுதி செய்தது. எனவே வழக்கு உச்ச நீதிமன்றத்திற்கு வந்தது.

குற்றம் சாட்டப்பட்ட 6 பேரையும் விடுதலை செய்யும் போது உச்ச நீதிமன்றம் குஜராத் காவல் துறையை அதன் மோசமான விசாரணைக்காக கடிந்திருந்தது. 2014 மே 16 அன்று கூறப்பட்ட தன்னுடைய தீர்ப்பில் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு தேசத்தின் ஒருமைப்பாடு மற்றும் பாதுகாப்பு ஆகியவை சம்பந்தப்பட்ட இத்தகையதொரு முக்கியமான வழக்கில் விசாரணை நிறுவனங்கள் இப்படிப்பட்ட திறமையற்ற ஒரு விசாரணையை நடத்தியிருப்பது குறித்து தன்னுடைய வேதனையை வெளிப் படுத்தி இருந்தது.

உச்சநீதிமன்றம் இவ்வாறு தீர்ப்பில் கூறியது, ‘பல உயிர்கள் கொலை செய்யப்படுவதற்கு காரணமாக இருந்த உண்மையான குற்றவாளி களை கைது செய்வதற்கு பதிலாக, காவல்துறை அப்பாவி மக்களை கைது செய்து அவர்களுக்கு எதிராக கடுமையான குற்றச்சாட்டுகளை பதிந்ததே இவ்வழக்கில் அவர்கள் குற்றவாளி என அறிவிக்கப்பட்டதற்கும் அதைத்தொடர்ந்து அறிவிக்கப்பட்ட மரண தண்டனைக்கும் காரணம்.‘


‘வழக்கின் விசாரணை நிலையிலிருந்து ஆரம்பித்து, குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு எதிராக பொடோ சட்டத்தின் கீழ் கைது செய்து வழக்கு விசாரணை நடத்த மாநில அரசாங்கம் அனுமதித்தது, அப்பாவிகள் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப் பட்டது, குற்றம் சாட்டப்பட்டவர் களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது என இவ்வழக்கில் பல்வேறு நிலைகளில் நடந்துள்ள முறைகேடுகளை நாங்கள் கருத்தில் எடுத்துக் கொள்ள விரும்புகிறோம். இப்படி இந்த நாட்டின் குடிமக்களின் அடிப்படை உரிமைகளும் மனித உரிமைகளும் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளது எங்கள் முன்னால் தெளிவாக சமர்ப்பிக்கப்பட் டுள்ள நிலையில், நாங்கள், நாட்டின் உச்ச நீதிமன்றமாக இருந்துகொண்டு எங்கள் கைகளை கட்டிக்கொண்டு ஆசுவாசமாக (வேடிக்கை பார்த்துக்கொண்டு) அமர்ந்து இருக்க முடியாது.‘

## 2) சூரத் குஜராத் குண்டுவெடிப்பு வழக்கு 1993

நீதிபதி டி.எஸ்.தாகூர் அவர்கள் தலைமையில் இயங்கிய உச்ச நீதிமன்றத்தின் பிரிவு அமர்வு, தடா நீதிமன்றம் 2008ஆம் ஆண்டு வழங்கிய தீர்ப்பை புறந்தள்ளி, சூரத்(குஜராத்)தில் 1993இல் நடந்த குண்டுவெடிப்பில் தொடர்பு உள்ளதாக குற்றம்சாட்டப்பட்ட 11 நபர்களையும் 18 ஜூலை 2014இல் விடுதலை செய்தது. தடா நீதிமன்ற த்தின் தீர்ப்பில் முன்னாள் காங்கிரஸ் அமைச்சர் முஹம்மது சூர்த்தி அவர்களும் இன்னும் நான்கு நபர்களும் (அனைவரும் முஸ்லிம்கள்) இருபது வருடங்கள் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பட்டு இருந்தனர். இதேபோல் இன்னும் ஆறு நபர்கள் (அனைவரும் முஸ்லிம்கள்) பத்து வருடங்கள் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பட்டு இருந்தனர்.

சூரத்தில் இரண்டு இடங்களில் குண்டுகள் வெடித்தன. முதல் குண்டுவெடிப்பு வர்ச்சாஸ் மினி பஸார் என்ற இடத்தில் இருந்த ஒரு பள்ளிக்கூடத்திலும் மற்றொன்று அடுத்த நாள் சூரத் இரயில் நிலையத்திலும் வெடித்தது. முதலில் நடந்த குண்டுவெடிப்பில் ஒரு பெண் இறந்தார். அவருடன் 11 நபர்கள் காயப்பட்டனர். சூரத் ரயில்வே நிலையத்தில் நடந்த குண்டுவெடிப்பில் இருபது நபர்கள் காயப்பட்டனர். இந்த இரண்டு குண்டுவெடிப்புகளும் 6 டிசம்பர் 1992இல் அயோத்தியாவில் நடந்த பாபரி மஸ்ஜித் பள்ளிவாசல் இடிப்பை தொடர்ந்து நடந்த மதக் கலவரங்களுக்கு பழி தீர்ப்பதற்காக நடத்தப் பட்ட குண்டு வெடிப்புகள் என காவல்துறையால் கூறப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்டவர்களும் குஜராத் அரசாங்கமும் ஒருவருக்கு எதிராக ஒருவர் தடா நீதிமன்றத்தின் தீர்ப்பினை எதிர்த்து உச்ச நீதிமன் றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர். குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் தடா நீதிமன்றம் தங்களுக்கு வழங்கப்பட்ட தண்டனைக்கு எதிராக தடா நீதிமன்றத் தீர்ப்பினை எதிர்த்து மனு தாக்கல் செய்தனர். குஜராத் அரசாங்கமோ குற்றம்




சாட்டப் பட்டவர்களுக்கு தடா நீதிமன்றம் மிக லேசான தண்டனையை வழங்கியுள்ளதை மாற்றி கடுமையான தண்டனை வழங்கக்கோரி மனு தாக்கல் செய்தது. உச்சநீதிமன்ற அமர்வு தடா நீதிமன்றத்தின் தீர்ப்பினை தள்ளுபடி செய்ததுடன் அத்துடன் குஜராத் அரசாங்கத்தின் கடுமையான தண்டனை வழங்க கோரிய மேல்முறையீட்டை யும் தள்ளுபடி செய்து குற்றம் சாட்டப்பட்ட 11 நபர்களையும் விடுதலை செய்தது.

நீதிபதிகள் டி.எஸ்.தாகூர் மற்றும் சி.நாகப்பன் அடங்கிய நீதிமன்ற அமர்வு வழங்கிய தீர்ப்பில் தடா சட்டம் தேவையின்றி இதில் பயன்படுத் தப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியதோடு மட்டு மல்லாமல் குஜராத் காவல்துறையிடம் குற்றம் சாட்டப்பட்டவர்களை குற்றத்தோடு தொடர்பு படுத்தும் எந்தவிதமான ஆதாரங்களும் இல்லை என்பதையும் தெளிவாக சுட்டிக்காட்டி இருந்தது.

தடாசட்டத்தின்கீழ்மாநிலகாவல்துறையிடம் கொடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தை தவிர்த்து இந்திய குற்றவியல் சட்டம் மற்றும் வெடிபொருட்கள் சட்டம் ஆகியவற்றின் கீழ் குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு உறுதிப்படுத்த இயலவில்லை என்ற தன் கையாலாகாத நிலையை அரசு தரப்பு வெளிப்படுத்தியிருந்ததை நீதிமன் றத்தின் அமர்வு கவனித்திருந்தது.

குற்றம் சாட்டப்பட்டவர்களின் ஒப்புதல் வாக்குமூலங்களை தவிர்த்து இருந்த ஒரே ஒரு சாட்சியம்குற்றம்சாட்டப்பட்டவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள். அதுவும் திருப்திக் கொள்ளும் வகையில் தெளிவாக, நம்பகமான சான்றுகளுடன் நிரூபிக்கப்படவில்லை என நீதிமன்றம் இந்த வழக்கில் இருந்த ஆதாரங்களின் தகுதிகளின் அடிப்படையில் கூறிவிட்டது.

## 3) டெல்லி என்.சி.ஆர் தொடர் குண்டு வெடிப்பு வழக்கு 1996–97. முக்கிய சூத்திரதாரி 14 வருடங்களுக்குப் பிறகு பிணையில் விடுவிப்பு. இதற்கு முன்னதாக 19 வழக்குகளில் 17 வழக்குகளில் இருந்து விடுதலை

டெல்லி காவல்துறை 18 வயது முஹம்மது அமீர்கான் என்பவரை 1996–97இல் நடந்த டெல்லி என்.சி.ஆர் தொடர் குண்டுவெடிப்பு வழக்குகளில் 28 இடங்களில் வெடிகுண்டுகளை வைத்ததாக குற்றம் சாட்டியது. மேலும் அவரை கொலை, நாட்டுக்கு எதிராக போர் தொடுத்தல் போன்ற 19 கடுமையான வழக்குகளில் அவரை தொடர்புபடுத்தி காவல்துறை கைது செய்திருந் தது. இந்த வழக்குகளில் இருந்து ஒன்றன்பின் ஒன்றாக 2001 ஆம் ஆண்டு முதல் அவர் விடுதலை செய்யப்பட்டு வருகிறார். ஆனாலும் அவர் 2012ஆம் ஆண்டு அதாவது 14 ஆண்டுகள் கழிந்தபின் அதுவும் அவர் குற்றம் சாட்டப் பட்ட 19 வழக்குகளில் 17 வழக்குகளிலிருந்து விடுதலைசெய்யப்பட்டபின்னர் இப்போதுதான் பிணையில் விடுவிக்கப்பட்டார். இந்தப் பதினே ழு வழக்குகளிலும் அரசு தரப்பு மேல்முறையீடு செய்யவில்லை. இதன்மூலம் அமீருக்கு எதிராக இவர்களிடம் எந்த உண்மையான ஆதாரமும் இல்லை என்பதை ஒப்புக்கொள்கிறார்கள்.

கீழமை நீதிமன்றங்கள் இரண்டு வழக்குகளில் அவருக்கு எதிராக வழங்கிய தீர்ப்பினை எதிர்த்து அமீர் டெல்லி உயர்நீதிமன்றத்தில் மேல்முறை யீடு செய்தார். அமீரும் அவருடைய வழக்கறிஞர் மனித உரிமைகள் போராளி இந்தி பஞ்சோலி

யும் அவர்களுடைய மேல்முறையீட்டின் மீது உறுதியான நம்பிக்கை யுடன் இருக்கின்றனர். இந்த 2 வழக்குகளிலும் கீழமை நீதிமன்றங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள சாட்சியங்கள் ஏற்கனவே விசாரணை நீதிமன்றங்களால், உயர் நீதிமன்றங்களால் 17 வழக்குகளில் தவறானவை என கூறப்பட்டு அமீர் விடுதலை செய்யப்பட்டுள்ளதை அவருடைய மேல் முறையீட்டு மனுவை கூர்ந்து படிக்கும்போது அறிந்து கொள்ளலாம்.

### 4) ஹர்கதுல் ஜிஹாதல் இஸ்லாம் உறுப்பினர்கள் (ஹூஜி) என்று கூறப்பட்டவர்களை உயர் நீதிமன்றம் 7 ஆண்டுகளுக்குப் பிறகு விடுதலை செய்தது

6, அக்டோபர், 2004இல் டெல்லி உயர்நீதிமன்றத்தில் நீதிபதிகள் சஞ்சீவ் கண்ணா மற்றும் ஜிபி மெட்டல் ஆகியோர் தங்களுடைய தீர்ப்பில், டெல்லி காவல் துறையினரால் மிகச்சிறந்த சாட்சியங்கள் என்று கூறி சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களை நிராகரித்திருந்தனர். மேலும் தீவிரவாதிகள் என்று கூறப்பட்டு ஆயுள் தண்டனை வழங்கப்பட்ட இரண்டு நபர்களுக்கு வழங்கப்பட்ட ஆயுள் தண்டனையும் விலக்கி வைத்து தீர்ப்பளித் திருந்தனர்.

ஹூஜியின் உறுப்பினர்கள் என்று கூறப்பட்ட இந்த இருவரில் ஒருவர் ஜம்மு காஷ்மீரை சேர்ந்த அமீர் வாணி. மற்றொருவர் பங்களாதேஷை சேர்ந்தவரான லுத்ஃபுர் ரஹ்மான். இவர்கள் டெல்லி காவல்துறையின் சிறப்பு பிரிவினரால் 2007இல்கைதுசெய்யப்பட்டனர். இந்தஇருவரும் ஏற்கனவே ஆறு வருடங்களை சிறையில் கழித்து இருந்தனர். அவர்களுக்கு எதிராக நாட்டுக்கு எதிராக போர் புரிய சதி செய்தல், யு.ஏ.பி.ஏ எனக் கூறப்படும் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. விசாரணை நீதிமன்றம் இருவரையும் குற்றவாளிகள் என 2010இல் தீர்ப்பளித்தது. அவர்கள் இருவருக்கும் ஆயுள் தண்டனையையும் வழங்கியது. காவல்துறை குற்றம் சாட்டப்பட்டவர்களிடமிருந்து பென்டா எரித்ரிடோல் டெட்ரா நைட்ரேட் டெட்டனேட்டர்கள் பேட்டரிகள் மற்றும் பணத்தை கைப்பற்றியதாக கூறியது. ஆனால் தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்பட்ட வெடிப்பொருட்களின் மாதிரிகள் சோதனை செய்யப்பட்டதில் முதல் தகவல் அறிக்கையிலும் காவல்துறையினரின் நாட்குறிப்பிலும் (டைரியில்) குறிப்பிடப்பட்டிருந்த வெடி பொருட்கள் குறித்த விவரங்களுக்கும் ஆய்வகத்தில் சோதனை செய்யப்பட்ட பொருட்களுக்கும் பொருந்திப் போகவில்லை.

தீவிரவாதிகள் என குற்றம்சாட்டப்பட்ட இருவரும் அவர்களுடைய வாக்கு மூலங்களில் அவர்களுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட ஆதாரங்கள் அனைத்தும் டெல்லி காவல்துறையின் சிறப்புப் பிரிவால் ஜோடிக்கப்பட்டவை என்றும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்ட வெடி பொருட்கள், இதர பொருட்கள் அனைத்தும் போலியானவை என்றும் எனவே, இந்த ஆதாரங்களை காவல்துறை வேண்டுமென்றே தீ வைத்து அழித்து விட்டது என்றும் கூறியிருந்தனர்.

விசாரணையின்போது மாண்புக்குரிய நீதிபதிகள், மால்கண்டா காவல்துறையில் நடந்ததாக கூறப்பட்ட தீ விபத்து குறித்து சிறப்பு பிரிவு அதிகாரிகளையும் தடயவியல் நிபுணர்களையும் பரீட்சித்ததில் பல்வேறு முரண்பாடுகளையும் வித்தியாசங்களையும் அவருடைய வாக்குமூலங்களில் கண்டு கொண்டனர். காவல் நிலையத்தில் வெடிப்பொருட்கள் தீ பிடித்தபோது அங்கே எந்த விதமான வெடிப்பும் நிகழவில்லை என்பதையும் நீதிபதிகள் கண்டறிந்தனர்.

தீவிபத்தின் பின்னால் ஏன் வெடி மருந்துகளின் வாசனை கூட எழவில்லை என்றும் நீதிபதிகள் கேள்வி எழுப்பினர். குற்றம் சாட்டப்பட்ட இரண்டு பேரும் தடை செய்யப்பட்ட ஹூஜி என்ற அமைப்போடு தொடர்புடையவர்கள் என்பதை நிரூபிக்க காவல்துறை போதுமான ஆதாரங்களை தர தவறிவிட்டது என்பதையும் அவர்கள் கண்டறிந்தனர். மேலும் குற்றம் சாட்டப்பட்ட அந்த இருவரும் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டார்கள் என்பதை காவல்துறையால் நிரூபிக்க இயலவில்லை என்பதையும் நீதிபதிகள் கவனித்திருந் தார்கள்.

### 5) முளுந்த், விலே பார்லே, மும்பை சென்ட்ரல் குண்டு வெடிப்பு வழக்குகளில் தவறாக சேர்க்கப்பட்ட மும்பையின் முல்லா (இமாம்) ஏழு வருடங்களுக்குப் பிறகு பிணையில் விடுவிக்கப்பட்டார்

மும்பை கிரைம் பிரிவால் மும்பையில் உள்ள முல்லா (இமாம்) ஒருவர் 2003ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். காவல்துறை அவரை முளுந்த், விலே பார்லே, மும்பை சென்ட்ரல் போன்ற இடங்களில் அதே வருடத்தில் நடந்த குண்டு வெடிப்புகளில்அவருக்கு தொடர்பு உள்ளது என்று ஒப்புக்கொள்ள கூறி அவருக்கு அழுத்தம் கொடுத்தது. ஒரு மாதம் அவரை சட்டவிரோத காவலில் வைத்த பின்னர் அவர் குற்றவியல் நடுவர் முன்பாக ஆஜர்படுத்தப்பட்டார். அவரை காவல்துறை தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்து விசாரிக்க அனுமதி வழங்கப்பட்டது.

விசாரணையின் போது அவர் சற்றும் கருணையே இல்லாமல் கடுமையாக தாக்கப் பட்டார். சற்றும் மனிதத் தன்மையற்ற நடவடிக் கைகளுக்கு அவர் உள்ளாக்கப்பட்டார். காவல் துறை மூன்று குண்டு வெடிப்புகளிலும் அவருக்கு தொடர்பு இருப்பதாக அவர் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று விரும்பியது. அவர் சதித்திட்டத்தின் ஒரு பகுதி என்பதையும் அவர் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று காவல்துறை விரும்பியது. அவருடைய பரிதாப கரமான நிலையை பார்த்து அவருடைய அவருடைய பெற்றோர்களும், குடும்ப உறுப்பினர்களும், குற்றத்தை ஒப்புக் கொண்டு எப்படியாவது இந்த சித்திரவதைகளில் இருந்து தப்பித்துக் கொள்ளு மாறு அவருக்கு அறிவுரை கூறினர்.

ஆனால் அவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர் தன் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை ஒப்புக் கொள்ளவில்லை. அவருக்கு எதிராக போதுமான சாட்சியங்கள் எதுவும் இல்லை. ஆனாலும் காவல்துறை பொய்யாக உருவாக்கிய சாட்சியங் களின் அடிப்படையில் அவரை இந்த 3 குண்டு வெடிப்பு வழக்குகளிலும் குற்றம் சாட்டினார்கள். கீழமை நீதிமன்றங்களில் அவருடைய பிணை நிராகரிக்கப்பட்டது. அவர் உயர் நீதிமன்றத்தை அணுகினார். உயர் நீதிமன்றம் ஏழு வருடங் களுக்கு பிறகு அவரை பிணையில் விடுவித்தது.

## 6) தவுலா கான் எதிர் தாக்குதல் 2005 – குற்றவாளிகள் விடுவிக்கப்பட்டனர், காவல்துறை குற்றம் சாட்டப்பட்டது

பாலம் விமான நிலையத்தில் குண்டு வைத்து தகர்க்க இருந்த காஷ்மீரி தீவிரவாதிகளின் சதி திட்டத்தை முறியடித்ததாக கூறி டெல்லி காவல்துறை பெருமை அடித்துக்கொண்டது. 6 காஷ்மீரி இளைஞர்களை கடுமையான எதிர் தாக்குதலுக்கு பிறகு கைது செய்தது. அவர்களுக்கு எதிராக 12.7.2005 அன்று, சிறப்பு பிரிவு சி.ஆர். எண்.146/2005 என்ற கோப்பு எண் கொண்ட வழக்கு இந்திய தண்டனை சட்டத்தின் சட்டப் பிரிவுகள் 307, 353, 489சி, 482, 120 போன்ற பிரிவுகளின் கீழும் ஆயுதங்கள் சட்டம் பிரிவு 25 மற்றும் 27இன் கீழும் வெடிபொருட்கள் சட்டம் 3 மற்றும் 5இன் கீழும் பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கின் விசாரணை புதுடெல்லி துவாரகாவில் உள்ள செஷன்ஸ் நீதிமன்றத்தில் நடத்தப்பட்டு அதன் தீர்ப்பு 8 டிசம்பர் 2011இல் வழங்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட 6 பேரும் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். நீதிமன்றம் டெல்லி காவல்துறை இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களை பொய்யாக இணைத்துள்ளார்கள் என்று சொன்னதோடு மட்டும் நின்று விடாமல் காவல்துறை ஆய்வாளர் ரவீந்திர தியாகி என்பவருக்கு எதிராகவும் இவ்வழக்கை பொய்யாகப் புனைய காரணமாக இருந்த மற்ற காவலர்கள் மீதும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

துணை செசன்ஸ் நீதிபதி வீரேந்திர பாட் அவருடைய தீர்ப்பில் காவல்துறை கூறியதுபோல் எந்தவிதமான எதிர்த்தாக்குதலும் நடைபெற வில்லை, மாறாக, அது டெல்லி காவல்துறையின் அலுவலகத்தில் எழுதப்பட்ட கதை என்று முடிவுரை வழங்கியிருந்தார். அரசு தரப்பு சமர்ப் பித்த ஒவ்வொரு சாட்சியங்களையும் நீதிபதி ஆய்வு செய்து துண்டுதுண்டாக கிழித்தெறிந் திருந்தார். அவருடைய தீர்ப்பில் மிகத் தெளிவாக இவ்வாறு கூறப்பட்டிருந்தது, ‘காவல்துறை கூறிக் கொண்டிருக்கிறதே அந்த எதிர் தாக்குதல் (என்கவுன்டர்) அது உண்மையில் நடக்கவே இல்லை, அலுவலகத்தில் ஆசுவாசமாக அமர்ந்து கொண்டு அவர்கள் அதை பொய்யாக உருவாக்கினார்கள்.

‘காவல்துறையினரின் அனைத்து குற்றச் சாட்டுக்களையும் பொய்யாக்கிய நீதிபதி மேலும் இவ்வாறு கூறினார், ‘காவல் துறையினரால் குற்றம் சாட்டப்பட்டவரிடமிருந்து கைப்பற்றப் பட்டதாக சொல்லப்படும் இராணுவ சீருடை டெல்லி கன்டோன்மென்ட்–இல்உள்ள ஒரு

தையல்காரரிடம் காவல் துறையினரால் தைக் கப்பட்டது. இந்த தையல்காரரோ காவல் துறையின் உளவாளி. காவல்துறையின் கையிருப்பு சாட்சி. மேலும் குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் இருந்து கைப்பற்றியதாக கூறப்படும் ஏகே47 துப்பாக்கிகளையும் கையெறி குண்டுகளையும் காவல் துறையினரால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க இயலவில்லை.

இந்த பொய்யான வழக்கை கட்டமைத்த காவல்துறையை சேர்ந்தவர்கள் மீது விசாரணை செய்யப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதியப்பட வேண்டும். மேலும் துறை ரீதியான விசாரணையும் இவர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டும் என்று நீதிபதி ஆணையிட்டார். இந்த உத்தரவை காவல்துறை அதிகாரிகளுக்கு எதிரான சம்பந்தப் பட்ட குற்றவியல் நடுவரின் புகாராக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் நீதிபதி ஆணை யிட்டார்.

காவல்துறை இந்த உத்தரவுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது. ஆன ால் அற்ப காரணங்களை கூறி விசாரணையை தாமதித்து வருகிறது.

### 7) சிறப்பு பிரிவினரால் பரபரப்பாக பாய்ந்து பிடிக்கப்பட்ட லஷ்கர்–இ–தொய்பாவை சேர்ந்தவர் விசாரணை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டார்

இம்ரான் கிர்மானி இவர் ஒரு ஏரோ நாட்டிக்கல் (வானூர்தி) பொறியாளர். இவர் ஏற்கெனவே பெயர் கெட்டுப் போய் இருந்த டெல்லி சிறப்பு பிரிவினரால் அவருடைய வீட்டி லிருந்து நவம்பர் 2006இல் பிடித்துச் செல்லப் பட்டார். ஒரு பரபரப்பான லஷ்கர்–ஏ–தொய்பா கைது என்பது போலவும் செப்டம்பர் 11 போன்ற தொரு தாக்குதலை டெல்லியில் நடத்த திட்ட மிட்டிருந்ததாகவும் ஊடகங்களின் முன்னால் இவரை காண்பித்தனர். கோப்பு எண். சிறப்பு பிரிவு பி.எஃப்.சி.ஆர் எண்.32/2007 மூலம் இவர் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 121, 121, 122, 120B ஆகிய வற்றின் கீழும் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டம் (யு.ஏ.பி.ஏ) பிரிவு 17, 18 மற்றும் 20–இன் கீழும் வெடிபொருட்கள் சட்டம் பிரிவு 5இன் கீழும் இவர் மீது வழக்கு பதியப்பட்டது. காவல்துறை சிறப்பு பிரிவு விசாரணையை முடித்து நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்தது வழக்கு விசாரணை அக்டோபர் 2010இல் (செஷன்ஸ் வழக்கு எண்.32/2007 தீஸ் ஹஸாரி நீதிமன்றம்) ஆரம்பமானது. துணை செஷன்ஸ் நீதிபதி சுரீந்தர் எஸ். ராத்தி அவர்கள் 12 மே 2011 இல் தன்னுடைய தீர்ப்பை அறிவித்தார். அவர் மதிப்புடன் இம்ரான் கிர்மானியை விடுதலை செய்தார். நீதிமன்றம் காவல்துறையின் விசாரணையை வெகுவாக விமர்சித்திருந்தது. சதித்திட்டம் பற்றி சிறப்பு பிரிவினருக்கு கிடைத்தாக சொல்லப்பட்ட 'ரகசிய தகவல்' என்ற 'ஒன்றுக்கும் உதவாத விஷ யத்தை' நீதிமன்றம் தள்ளுபடி செய்திருந்தது.

மேலும் தடயவியல் ஆய்வகத்தின் அறிக்கை கிர்மானியிடம் இருந்து ஆர்.டி.எக்ஸ்.ஐ கைப்பற்றியதாக கூறிய சிறப்பு பிரிவினரின் கூற்றுக்கு முரண்பட்டது. மேலும் கோப்புகளில் பல்வேறு இருட்டடிப்புகள் செய்யப்பட்டு மூடி மறைக்கப்பட்டு இருந்ததையும் நீதிமன்றம் குறிப்பட்டிருந்தது.

### 8) ஆறு லஷ்கர்–இ–தொய்பா இயக்கத்தினர் விசாரணை நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர்

ஆறு லஷ்கரே தொய்பா தீவிரவாதிகளை ஒரு தைரியமான எதிர்த் தாக்குதலில் கைது செய்ததன் மூலம் இந்தியன் மிலிட்டரி அகாடமியின் மீது நடக்கவிருந்த தாக்குதலை தடுத்து நிறுத்தி விட்ட தாக 3 ஜூன் 2005 அன்று டெல்லி சிறப்புப் பிரிவு தங்களைத் தாங்களே பாராட்டிக் கொண் டது. காவல்துறை (சிறப்பு பிரிவு சி.ஆர்.எண். 40/05) இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 121, 121A, 122, 123, 120B கீழும் வெடிபொருட்கள் சட்டம் பிரிவு 4 மற்றும் 5–இன் கீழும் சட்ட விரோத நடவடிக் கைகள் தடுப்புச் சட்டம் பிரிவு 18, 19, 20 மற்றும் 23 இன் கீழும் வழக்கு பதிந்தது. விசாரணையை முடித்த பிறகு குற்றப் பத்திரிக்கை குற்றம்சாட்டப்பட்ட எல்லோரின் மீதும் தாக்கல் செய்யப்பட்டது (செஷன்ஸ் வழக்கு எண்.178/05, செஷன்ஸ் நீதிமன்றம், வடக்கு டெல்லி).

எனினும் நீதிமன்றம் காவல் துறையினரால் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களை நம்பவில்லை. சமர்பிக்கப்பட்ட சாட்சியங்கள் அனைத்தும் டெல்லி சிறப்பு பிரிவு காவல் துறையால் உருவாக்கப்பட்டவை, புனையப்பட்டவை என்பதன் அடிப்படையில் கைது செய்யப்பட்ட


அனைவரும் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப் பட்டனர். உதவி செஷன்ஸ் நீதிபதி 2 வடக்கு டெல்லி தர்மேஷ் சர்மா அவர்கள் 8, ஜனவரி, 2010 அன்று வழங்கிய அவருடைய தீர்ப்பில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் டெல்லி சிறப்பு காவல் பிரிவினரால் பொய்யாக குற்றம் சாட்டப் பட்டுள்ளார்கள். முக்கியமான சாட்சியமான அதாவது தீவிரவாதிகளுக்கும் அவர்களை கையாண்டதாக சொல்லப்பட்ட பாகிஸ்தானி யர்களுக்கும் இடையேயான மின்னஞ்சல்களின் பதிவுகள் என்று சமர்ப்பிக்கப்பட்டவை யாவும் காவல் துறையினரால் போலியாக உருவாக்கப் பட்டவை என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதை கோடிட்டு காண்பித்திருந்தார்.

## 9) சையத் முபாரக் காஷ்மீரி தீவிரவாதி மூன்று வருடங்களுக்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டார்

சையத் முபாரக் தந்தை பெயர் சையத் நவாஸ் ஒரு காஷ்மீரி தீவிரவாதி என்று கூறப்பட்டு 20 ஆகஸ்ட் 2006 ஆம் ஆண்டு உத்தரப்பிரதேசத்தின் பரேலி மாவட்டத்திலுள்ள சிபி கஞ்ச் காவல் நிலைய ஊழியர்களால் கைது செய்யப்பட்டார். உள்ளூர் உளவுப் பிரிவு ஆய்வாளர் ஆர்.கே.யாதவ் அவர்கள் கொடுத்த உளவுத் தகவலின் அடிப் படையில் இந்த கைது நடவடிக்கை மேற்கொள் ளப்பட்டது. காவல்துறை கூற்றின்படி சையத் முபாரக் ஜம்மு – காஷ்மீரின் பூஞ்ச் மாவட்டத்தை சேர்ந்த சந்தன்பூர் என்ற கிராமத்தை சேர்ந்தவர். அவர் பரேலி மாவட்டத்தின் திலியாப்பூர், பாந்தியா கிராமங்களிலும் இதன் அருகாமையில் இருந்த பகுதிகளிலும் முஸ்லிம்கள் அதிகமாக வாழ்ந்த இடங்களில் வெறுப்பூட்டும் விஷத்தன மான பிரச்சாரங்களை நிகழ்த்தி வந்தார். மக்களை இந்தியாவுக்கு எதிராக தூண்டி வந்தார். அவர் மக்களிடம், 'இந்திய ராணுவம் இந்திய அரசாங்கத்தின் வழிகாட்டுதலின்படி 250 அப்பாவி முஸ்லிம்களை தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தி அவர்கள் மீது துப்பாக்கி குண்டு மழை பொழிந்து படுகொலை செய்துள்ளது என்றும்அதில்இறந்தவர்களில்அவருடையதந்தை தாய் மனைவி சகோதரி மற்றும் குழந்தைகளும் அடக்கம்' என்றும் கூறியதாக காவல்துறையின் அறிக்கை கூறியது. எனவே, இந்தியாவுக்கு எதிராக உரை நிகழ்த்தியமைக்காகவும் நாட்டுக்கு எதிராக மக்களை தூண்டியமைக் காகவும் அவர் கைது செய்யப்பட்டார். இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 124ஏ நாட்டுக்கு எதிராக போர் தொடுத்தல் என்ற பிரிவின் கீழ் அவர் மீது வழக்குப் பதியப்பட்டது.

வழக்கு விசாரிக்கப்பட்டது (வழக்கு எண். சி.பி.கஞ்ச் காவல்துறை க்ரைம் எண். 1240/2006). இவ்வழக்கில் காவல்துறையினரின் வாக்கு மூலங்களும், காவல்துறையினரின் ஆவணங் களுமே முக்கியமான சாட்சியங்களாக இருந்தன. விசாரணையின்போது குற்றம் சாட்டப்பட்ட வரின் முகவரி ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் மாவட் டத்தின் சந்தன்பூர் அல்ல என்பதும் உத்தரப் பிரதேசத்தின் சித்தாப்பூர் மாவட்டத்தின் மக்வாப்பூர், (பிஸ்வான் காவல் நிலையம்) என்பதும் கண்டறியப்பட்டது. இந்த உண்மை அவருடையவாக்காளர்அடையாளஅட்டையின் மூலமும் அவருடைய ரேஷன் அட்டையின் மூலமும் உறுதியானது.

– இன்ஷா அல்லாஹ் தொடரும்...



# இங்கல்ல கருநாடகத்தில்

# விசாரணைக்காக

# வந்த ஹிந்துத்துவ ஆசாமியை

# குற்றவாளியை கைகுலுக்கி

# வரவேற்ற காவல் ஆணையர்

பெங்களூரு, மே-9

**விசாரணைக்கு வந்த ஹிந்துத்துவ ஆசாமியை- குற்றவாளியை காவல்துறை ஆணையர் கைக்குலுக்கி வரவேற்ற காட்சி கருநாடக மாநிலத்தில் அரங்கேறியுள்ளது.**

கருநாடகாவில் பிப்ரவரி மாதத்தில் இருந்து ஹிந்துத்துவ அமைப்புகள் இஸ்லாமியர்கள் மீதான தாக்குதல் தொடர்கதையாகி உள்ளது. இந்த நிலையில் ஹனுமன் ஜெயந்தி அன்று மசூதி ஒன்று தாக்கப்பட்டது. பாதுகாப்பிற்கு நின்ற காவல்துறையினரையும் தாக்கினார்கள். இந்தத் தாக்குதலுக்கு ராம்சேவா என்ற ஹிந்துத்துவ கவலர அமைப்பின் தலைவராகிய பிரமோத் முத்தவிக் என்பவர் காரணமாக இருந்தார்.

இதுதொடர்பாக அவரை மாவட்ட தலைமை காவல் ஆணையர் நேரில் ஆஜராக அழைப் பாணை அனுபபினார். அதன்படி ஹிமோகா மாவட்ட தலைமைக் காவல் ஆணையர் அலுவல கத்திற்குச் சென்றார் பிரமோத் முத்தவிக். அப்போது அங்கு வந்த மாவட்ட தலைமைக் காவர் ஆணையர் ஹரிராம் கைக்குலுக்கி அவரை வரவேற்றார். இதனை பிரமோத் முத்தவிக் தனது சமூகவலைத்தளத்தில் பதிவிட்டு 'இன்று விருந்துக் குச் சென்றேன் மகிழ்ச்சி' என்று பதிவிட்டுள்ளார்.

பிரமோத் முத்தவிக் மீது ஆட்கடத்தல், தனி நபர் தாக்குதல், மோசடி மற்றும் பெண்களைக் கடத்திய வழக்கோடு உடுப்பி வனப்பகுதியில்



நடந்த ஒரு இஸ்லாமியர் படுகொலையிலும் இவருக்குத் தொடர்புள்ளது. இப்படி கொலை மற்றும் கொள்ளை வழக்குகளில் தொடர்புடைய ஒருவரை மாவட்ட காவல்துறை ஆணையரே கைக்குலுக்கி வரவேற்ற நிகழ்வு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஹனுமன் ஜெயந்தி அன்று மசூதியில் நடந்த கவலரம் தொடர்பாக இஸ்லாமியர்கள் பலர் காவல்துறையினரால் கைது செய்யப்படடது குறிப்பிடத்தக்கது. இப்படிப்பட்டவர்களிடம் நீதியை எதிர்பார்க்க முடியுமா?

**இவர்தான் 2008இல் 60 லட்சம் தந்தால் ஒரு வகுப்பு கலவரத்தை நடத்துவேன் என்றார்.**

- நன்றி விடுதலை.



# இந்திய சட்ட அவையில்

## பண்டித நேருவும் டாக்டர் அம்பேத்கரின் பங்களிப்பும்



ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம் களச்சல்

காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட நாடான இந்தியா அதற்குத் தேவையான ஜனநாயக கட்டமைப்பை தானாகவே உருவாக்க வேண்டியதிருந்தது.

நாட்டில் வலது சாரிகள் சமூக கட்டமைப்பில் அதிக மாறுதல் செய்தால் இருப்பவற்றை இழந்து விடுவோம் என்றும் மறுபுறத்தில் இடது சாரிகள் புரட்சியே நாட்டை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லும் என்றும் சொல்லிக் கொண்டிருந்தனர்.

### அம்பேத்கரும் பண்டித நேருவும்

இந்து மத சீர்திருத்தச் சட்டத்திற்கு நமது முதல் சுதந்திர குடியரசுத் தலைவர் பாபு இராஜேந்திர பிரசாத், சர்தார் பட்டேல், சியாம் பிரசாத் முகர்ஜி போன்ற பிரமுகர்கள் எதிராக இருந்தார்கள். ஆனால், சாவர்கர் இச்சட்டம் வரவேண்டுமென சொன்னார். இச்சட்டம் வர வேண்டுமென முன்னின்றவர் அம்பேத்கர். அவருக்குப் பின் நேருஜி. இருவரும் மதச்சார் பற்ற பொதுவானதொரு சிவில் சட்டம் கொண்டு வர விரும்பினார். ஆனால் சிறுபான்மையோர் தலைவர்கள் எதிர்த்ததால் அவர்கள் வற்புறுத்த வில்லை.

இந்து சீர்திருத்தச் சட்ட வல்லுநரான பெனகர் நரசிங்கராவ் தலைமையில் எழுதப்பட்ட அறிக்கையில் இருந்தது. இந்த அறிக்கையை அம்பேத்கர் சட்டத்தின் ஏழு முக்கிய பகுதி பற்றியும் அதிலுள்ள திருத்தம் பற்றியும், மாற்றம் பற்றியும் பேசினார். சொத்துரிமை, வாரிசுகள் பற்றிய விபரம், இறந்தவர்களை சார்ந்தோரை ஆதரிப்பது. திருமணம், விவாகரத்து, தத்தெடுத்தல் போன்று ஆறு பகுதிகள் மாற்றம் செய்யப் பட்டிருந்தன. இம்மாற்றம் இராஜேந்திர பிரசாத் போன்றவர்களுக்கு பிடிக்கவில்லை.

### இராஜேந்திர பிரசாத்தும் நேருவும்

அம்பேத்கரின் விடா முயற்சியால் செப்டம்பர் 1951 (பொதுத் தேர்தலுக்கு முன்) நாடாளுமன்ற தேர்தலுக்கு முன் பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு வந்தது. இந்நேரம் இராஜேந்திர பிரசாத் நேருஜிக்கு இரகசியமாக கடிதம் ஒன்றை எழுதினார். இக்கடிதம் நேருவுக்கு மாலை 3 மணிக்குத்தான் கிடைத்தது. ஆனால், மதியம் 1 மணிக்கே பத்திரிகையாளர்களுக்கு கிடைத்தது. பத்திரிகையாளர்கள் கடிதம் மூலம் விபரம் அறிந்தனர். சட்டம் ஒப்புதலுக்கு வருமானால் அதை ஆய்ந்து என் மனசாட்சிபடி என் கருத்தை சொல்லுவேன். அதற்கு நான் தயங்கமாட்டேன் என எழுதினார். அவர் கருத்தை நாடாளுமன்றத்தில் சொல்ல விரும்பினார்.

நேருஜி எழுதிய பதில் கடிதத்தில் குடியரசுத் தலைவர் அவ்வாறு செய்வது குடியரசுத் தலைவர், அரசு நாடாளுமன்றமென ஓர் நிலை ஏற்படும். அதனால் அபாயகரமான பின் விளைவுகள் ஏற்படுமென குறிப்பிட்டிருந்தார். இப்போதுள்ள அவை தேர்தல் மூலம் தேர்வு செய்யப் பட்டவையல்ல என்பதையும் நேருஜி குறிப்பிட்டிருந்தார்.

நேருஜி முதல் நாடாளுமன்றத்தில் சட்டத் தைப் பல பகுதிகளாக ஆக்கி திரும்பவும் கொண்டு வந்தார். 1951-1952 தேர்தல் சட்ட மறுப்பு வாதிகள் நேருஜிக்கு எதிராக காவி உடை அணிந்த பிரபுதத் பிரம்மாச்சாரி என்பவரை நிறுத்தி அவருக்கு ஜனசங்கம் இந்து மகாசபை, ராம்ராஜ்ய பரிஷத் போன்ற இந்து சனாதிக கட்சிகள் ஆதரவு நல்கி பிரம்மசாரிக்கு ஐம்பதாயிரம் ஓட்டு கிடைத்தது. சட்டத்திற்கு கடுமையான எதிர்ப்பு இருப்பதை இவ்வோட்டு வெளிப்படுத்தியது.

1952-1957 நாடாளுமன்றத்தில் நான்கு சட்டங்கள் இந்து திருமண சட்டம், சொத்துரிமை சட்டம், தத்தெடுத்தல் சட்டம், வயோதிகர் பரா மரிப்புச் சட்டம் போன்றவை பாசாக்கப்பட்டன.

அம்பேத்கர் மாநில அவையினராக இருந்தும் விவாதங்களில் பங்குபெறவில்லை. அம்பேத்கர் மறைந்தபோது நேருஜி சொன்னார். சமுதாயத் திலுள்ள அடக்கு முறைக்கு எதிராக எழுந்த எதிர்ப்புக்கு அடையாளமாக அம்பேத்கர் என்றும் இருப்பார் என்று பாராட்டினார். நண்பர் இராமச்சந்திர குஹா இந்திய சட்டத்தில் இந்து பிரிவினருக்கு கிடைத்துள்ள உரிமையை விவரிக்கிறார்.

1. கணவரை இழந்த கைம் பெண்ணுக்கு, மகளுக்கும் சொத்து உரிமை.

2. பெண்ணை கணவன் கொடுமை செய்கிறான், கவனிக்கவில்லையென்றால் அவனுக்கு விவாகரத்து கோர்ட் மூலம் வாங்கலாம்.

3. மனைவி இருக்கும் போது மறுமணம் செய்ய தடை.

4. வெவ்வேறு சாதியினர் திருமணம் செய்ய வழிவகை செய்யப்பட்டது.

5. மற்ற சாதி பிள்ளைகளை (குழந்தைகளை) தத்தெடுக்க வழிவகை செய்யப்பட்டது.

நேருஜி முதமைச்சர்களுக்கு அரசியல் சட்டம் பற்றி எழுதிய கடிதத்தில் இச்சட்டத்தின் மூலம் கொண்டு வரும் மாற்றம் மட்டுமல்ல. இந்து சமுதாயத்தில் அது அழுந்தியிருந்த குழியிலிருந்து விடுவித்ததுயென குறிப்பிடுகிறார்.

இந்திய விடுதலை அடைந்த நேரம் இந்த மகாசபை போன்ற இயக்கங்கள் பாபர் மஸ்ஜித், பிரச்சினை இன்னும் ஏதோ சிலவற்றை எழுப்பிய போது அகில இந்திய காங்கிரஸ் சுதந்திரத்திற்கு முன் எந்த வழிபாடு இடங்கள் எப்படி இருந்து வருகிறதோ அது அது அப்படியே இருக்க வேண்டும். புதிதாக எதுவும் கிளப்பக் கூடாதென ஓர் தீர்மானம் எடுத்திருந்தது. அது பின்பற்றி யிருந்தால் நாட்டில் உயிர்ச்சேதம் பொருட் சேதமும் ஏற்பட்டிராது.

ஆளுவோர் நாட்டில் இன்று CAA, NRC, NPR போன்ற சட்டங்களை அமல்படுத்த இருந்த போது நாடு பூராவும் நிம்மதியற்ற நிலை இருந்து கொரோனா கொடுமை வந்து நாட்டிலே அதை சமாளிப்பதே பெரும்பாடாக உள்ளது.

பத்திரிகை தி இந்து நவம்.-14-2014 இதழில் பி.ஏ.கிருஷ்ணன் எழுதிய கட்டுரையை தழுவி எழுதியவர் ஜனாப் ஹாஜி பி.எம்.அப்துல் கரீம்.

## பண்டித ஜவஹர்லால் நேரு பற்றி தலைவர்கள்

பண்டிட்ஜி இந்தியாவின் பெருமைமிகு அணிகலனாக நீங்கள் என்றென்றும் திகழ்வீராக

– மகாத்மா காந்திஜி.

நேரு என் ஆதர்சன நாயகர். ஏனெனில் நம்மை ஒடுக்குபவர்களை நாம் எப்படி நடத்த வேண்டும் என்று கற்றுத் தரும் செயல்முறை அவருடையது. – நெல்சன் மண்டேலே

1955-இல் சோவியத் ஒன்றியத்திற்கு வருகை தந்த நேரு மாஸ்கோ பல்கலைக்கழகத்தில் உரையாற்றினார். அதுவரை ஜனநாயக கொள்கை பற்றி என்னைப் போன்ற மாணவர்களுக்கு சரியான புரிதலே இருக்கவில்லை. அப்போது சட்டக் கல்லூரி மாணவனாக இருந்த நான் அவரை முதன் முதலில் பார்த்தேன். கண்ணியமான தோற்றம், கூர்மையான பார்வை, கனிவான புன்னைகையுடனும் காட்சியளித்தார். என் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியவர் நேருதான்.


இந்தியாவும் அமெரிக்காவும் பூ கோளத்தில் இருபக்கத்தில் பிரிந்து கிடக்கிறது. எனினும் நீண்டகால சுதந்திர போராட்டத்தின் போது உங்கள் நாடு மீது அன்பும் ஆதரவும் அமெரிக் காவில் உருவானது. எனவே ஒரு நண்பராகவும் உலகின் சிறந்த தலைவராகவும் உள்ள உங்களை வரவேற்கிறோம்.

– அமெரிக்க முன்னாள் அதிபர் ஜான் கென்னடி

தனிநபர் சுதந்திரத்தை வலியுறுத்திய பிரதி நிதியாக நேரு இருந்தார். யாருடனும் சமரசம் செய்துகொள்ள அவர் தயங்கியதே இல்லை. எனினும் யாருக்கும் பயந்து அவர் ஒருபோதும் சமரசம் செய்து கொண்டதுமில்லை.

– முன்னாள் பிரதமர் வாஜ்பாய்

# மேலை நாட்டவர்களின் மறு உயிர்பெற்ற இஸ்லாத்தின் மீதான போர்




அன்பார்ந்த வாசகர்களே!

இந்தப் பகுதியில் ஜான் பெஃபர் என்பவர் எழுதிய Crusade 2.0 “The Wests Resurgent war on islam” என்ற நூலின் மொழிப்பெயர்ப்பையும், அதனோடு தொடர்புடைய வரலாற்று நிகழ்வுகளையும் பார்த்து வருகின்றோம்.

முந்தைய தொடர்களில் இஸ்லாத்தின் எதிரிகள் எப்படி துனீசியாவில் கபளீகரங்களைச் செய்தார்கள், அங்கு ஓர் இஸ்லாமிய ஆட்சி வந்து விடாமலிருக்க என்பதை விரிவாகப் பார்த்தோம்.

அப்போதே நாம் வெளியிட்டிருந்த துனீசியாவை உலுக்கிய இஸ்லாமிய இயக்கம் என்ற நூல் அதில் மிகவும் உதவி செய்தது.

இந்த இஸ்லாமிய வெறுப்பாளர்கள் “இஸ்லாமோஃபோபஸ்” “Islamophobes” எவ்வளவு ஆக்ரோஷமாக செயல்படுகின்றார்கள், இஸ்லாமிய ஆட்சி உலகில் எங்கேயும் வந்து விடாமல் இருக்க என்பதற்கு இன்னொரு எடுத்துக் காட்டு அல்ஜீரா என்ற நாடு.

**அல்ஜீரியாவில் இஸ்லாம்**

முஸ்லிம்கள் அறுதி பெரும்பான்மையோடு வாழும் நாடு அல்ஜீரியா. மக்கள் தொகையில் 99% மக்கள் முஸ்லிம்கள். இஃதோர் வட ஆப்பிரிக்க நாடு.

கி.பி. 8ஆம் நூற்றாண்டில் உமையாக்களின் ஆட்சிக் காலத்தில் இஸ்லாம் அல்ஜீரியாவுக்குள் புகுந்தது. கி.பி. 10 நூற்றாண்டுக்குள் இஸ்லாம் முழுமையாக அந்த மக்களை ஆட்கொண்டது. இஸ்லாத்தின் உயர்ந்த கொள்கைகளால் கவரப்பட்டு அந்த மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

இஸ்லாம் அல்ஜீரியாவில் நுழைவதற்கு முன் அல்ஜீரியா பல்வேறு பேரரசுகளாலும் காவு கொள்ளப்பட்டு ஆட்சி செய்யப்பட்டது. ரோம பைசாந்தியர்கள் அதனை நீண்ட நெடியதொரு காலம் தங்கள் கைகளில் வைத்திருந்தார்கள். இஸ்லாம் அல்ஜீரியாவில் ஆதிக்கம் செலுத்தி மக்களை மொத்தமாக ஆட்கொண்ட பின்,

பிரான்ஸ் 1830 முதல் பல்வேறு காலக்கட்டங்களிலும் பிரான்ஸ் நாடு அதனை கைப்பற்றிட

*இடைவிடா முயற்சிகளை மேற்கொண்டது. 1875இல் பிரான்ஸ் நாடு அல்ஜீரியாவை முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டது. இந்த ஆக்கிரமிப்பின் போதே, மூன்று லட்சம் முஸ்லிம் களை அது கொலை செய்தது.*

*அதன்பின் மெல்ல மெல்ல அல்ஜீரியா மக்களின் தாய்மொழியாகிய அரபி மொழியைக் குறிவைத்தது.*

*அரபு மொழியை மெல்ல மெல்ல அகற்றி விட்டு பிரஞ்சு மொழியைக் கொண்டு வந்தது. ஆட்சி மொழி பிரஞ்சு மொழிதான் என்றாக்கி யது. அத்தோடு பிரஞ்சு மொழியை எல்லா வகை யிலும் அந்த மக்கள் மீது திணித்தது. அல்ஜீரி யாவை பிரான்ஸ் ஒரு பகுதி என ஆக்கிட அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டது. பிரான்ஸ் தன் இலக்கை இப்படி அறிவித்தது.*

*அல்ஜீரியாவை பிரான்ஸோடு இரண்டறக் கலந்த நாடாக ஆக்கிவிடுவதாக அறிவித்தது.* "Assimilated Part of France"

*இதன் பொருள் - பிரான்ஸின் மதமாகிய கிருஸ்தவ மதத்தை அங்கே திணித்து, பிரஞ்சு மொழியையும் திணித்து, அல்ஜீரிய என்ற நாட்டையே அடையாளமில்லமாக்கி பிரான்ஸோடு கலந்திட செய்திட வேண்டும் என்பது திட்டம்.*

*அல்ஜீரியாவின் எண்ணெய் வளம், அதன் இயற்கை எரிவாயு ஆகியவை பிரான்ஸ் நாட்டின் பொருளாதாரத்தை வளப்படுத்திட பெரிதும் உதவியது. எத்துணை வேகமாக அந்த இயற்கை வளங்களைச் சுரண்டிட இயலுமோ அத்துணை வேகமாகச் சுரண்டினார்கள் பிரஞ்சு ஆட்சியார்கள்.*

*அவர்கள் இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் கொண்ட காழ்ப்பும் கசப்பும் சொல்லி மாளாது.*

**அல்ஜீரியாவில் ஓர் உமர் முக்த்தார் :**
**அமீர் அப்துல் காதிர்**

*பிரான்ஸின் கெடுபிடிகளுக்கெதிராக அல்லாஹ்வின் பாதையில் ஜிஹாத் செய்திட முன் வந்தார்கள். அமீரு அப்துல் காதிர் அவர்கள். முழுப் பெயர் அப்துல் காதிர் இப்னு முஹையத் தீன். அல் ஹஸ்ஸனீ டிராஜ் மார்க்க அறிஞரே. சிறந்த தக்வா, இறையச்சத்திற்கு சொந்தக்காரர். எல்லாமே அல்லாஹ் என வாழ்ந்தவர். அமீர் அப்துல் காதிர் அவர்கள் அல்ஜீரியாவில் ஒரு முஜாஹித் கூட்டத்தைச் சேர்த்துக் கொண்டு பிரான்ஸ்-ஐ தாக்கினார்கள். பிரான்ஸ் நாட்டுப் படைகள் அவர்களுக்குப் பக்கபலமாக வந்த ஆட்சியாளர்கள். இவர்களை அமீர் அப்துல் காதிர் அவர்களின் ஜிஹாத்-ஐ தாக்குப்பிடித்திட இயலவில்லை.*

*பல பகுதிகளைப் பிரான்ஸின் ஆதிக்கத்தின் கீழிருந்து மீட்டு இஸ்லாமிய ஆட்சியை நிலை நிறுத்தினார்கள். அந்த ஆட்சியை அவர்களே பொறுப்பேற்று நடத்தினார்கள். அவர்களுடைய தந்தை மெய்யனித்தீன் அவர்கள்.*

*கிடைக்கும் வரலாற்றுக் குறிப்புகளின் அடிப் படையில் தன் தந்தை தொடங்கிய ஜிஹாத்-ஐத்தான் அமீர் அப்துல் காதிர் அவர்கள் தொடர்ந்தார்கள்.*

*தந்தை தன்னுடைய தள்ளாத காலத்தில், 1832இல் அமீர் அப்துல் காதிர் அவர்களை அமீருல் முஃமினீன் என நியமித்தார்கள். டோக்ரா மஸ்ஜித் என்ற மஸ்ஜித்-இல் வைத்து முஜாஹித் அமீர் அவர்களிடம் பைஅத் செய்தார்கள்.*

*ஐந்து போர்களில் பிரான்ஸ் நாட்டின் படை களை வென்றார்கள். பலமுறை பிரான்ஸ் நாட்டு ஆட்சியாளர்கள் அவர்களிடம் சரணடைந்து பல பகுதிகளை ஒப்படைத்துவிட்டு வெளியேறி னார்கள். எல்லாமே ஒப்பந்தங்கள் தாம்.*

*(இந்த ஜிஹாத் ஓர் நீண்ட வரலாறு 1837இல் தொடங்கி 1883 வரை 50 ஆண்டுகள் தொடர்ந் தது. இதை விரிவாக இங்கே குறிப்பிட்டால் நாம் நம் தலைப்பிலிருந்து வெளியே சென்று விடுவோம். ஆகவே சுருக்கமாக இதை முடிக்கின் றோம்)*

*இறுதியில் அமீர் அவர்கள் மொராக்காவின் அப்துல் ரஹ்மான் அவர்களின் துரோகத்தால் சிறை பட்டார்கள். 26, மே 1883இல் சஹாரா பாலைவனத்தில் மரணித்தார்கள்.*

*ஆனால் பிரஞ்சு மொழிக்குப் பதிலாக அரபி மொழியைக் கொண்டு வந்தார்கள். பிரான்ஸ் இதுபோன்ற முஜாஹித்கள் இருக்கும் வரை நாம் அல்ஜீரியாவை நமது நாட்டின் ஒரு பகுதியாக ஆக்கிட முடியாது என்ற முடிவுக்கு வந்தது.*

*மெல்ல மெல்ல ஜனநாயகம் என்ற பெயரில்*



*தனது ஆட்சியை நிலை நிறுத்தியது. எல்லாம் தனது* (Vicery) *என்ற தலைமையின் கீழ்தான் நடக்கும் என்றாக்கியது.*

*ஜனநாயகம் எப்போதும் மக்களைத் திசை திருப்பி கொள்ளச் செய்யும். மக்கள் ஆக்கப் பூர்வமான விடுதலைப் போர்களை அல்லது ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிரான போர்களைத் தொடங்காமல் பார்த்துக் கொள்ளும். இதனால் மக்களை மிக எளிதாக பிரஞ்சு ஆட்சியாளர்கள் மாற்றி வந்தார்கள்.*

### "FLN" இன்னொரு விடுதலைப் போர் - அல்ஜீரியாவின் தேசிய விடுதலை முன்னணி

*பிரான்ஸ் நாடு ஜனநாயகத்தின் பெயரால் நம்மை ஏமாற்றுகின்றது என்பதை உணர்ந்த அல்ஜீரியா மக்கள் இன்னொரு ஜிஹாத் 1954இல் தொடங்கினார்கள். 1962இல் வென்றார்கள், பிரான்ஸ்-ஐ இந்த வெற்றியை ஈட்டிய அமைப்பு அல்ஜீரியா தேசிய முன்னணி* "FLA". *இதன் இராணுவப் பிரிவுக்கு* "National Liberation Army" *என்றே பெயர். அபூ அல் ஃபாதல் பாடாஜி என்பவரை இதனை வழி நடத்தினார்கள்.*

*பின்னர் இவரே அல்ஜீரியாவின் ஆட்சியாள ரானார். 1962இல் துனிசியாவின் ஹபீப் போர்க் குய்பாவைப் போல், துருக்கியின் கமால் அட்டார்க் போல், இவரும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், இஸ்லாத்திற்கு எதிராகவும், பிரான்ஸ் நாட்டின் ஆசா பாசங்களுக்காகவும் ஆட்சியைத் தொடர்ந் தார். பிரான்ஸ் நாட்டின் திட்டங்கள் எல்லாம் சந்தடியில்லாமல் நிறைவேறியது அல்ஜீரியாவில்*

### இஸ்லாமே தீர்வு - Islamic Salvation Front

*இதனை எதிர்த்து இஸ்லாத்தை இலட்சிய மாகக் கொண்டவர்கள் தங்கள் ஓர் இயக்கத்தைத் தொடங்கினார்கள். 1989இல் இந்த அமைப்பிற்கு இஸ்லாமிக் சால்வேசன் பிராண்ட்* Islamic Salvation Front *எனப் பெயர் அப்பாஸ் மதானி அவர்கள்தாம் இதை தொடங்கினார்கள்.*

*ஜிஹாத்தான் வழிமுறை என்றார்கள். மக்க ளிடம் பெருவாரியான ஆதரவைப் பெற்றார்கள். இந்த ஆதரவுகளால் ஊட்டம் பெற்று 1990இல் நடந்த உள்ளாட்சி தேர்தல்களில் போட்டிப் போட்டார்கள். பெருவாரியான வெற்றியை பெற்றார்கள்.*

*1992இல் நடக்கவிருந்த தேர்தலில் நாட்டின் ஒட்டுமொத்த ஆட்சியைப் பிடித்து விடுவார்கள் இஸ்லாமிய ஆட்சி மீண்டும் வந்துவிடும் என்ற நிலை - பிரான்ஸ் கதிகலங்கிற்று.*

*அல்ஜீரியாவின் ஆட்சியாளர்களுக்கு நெருக்கடிகளைக் கொடுத்து ஆட்சியாளர்கள் பிரான்ஸ்-இன் இராணுவ பலத்தோடு இஸ்லாமிக் சால்வேசன் பிராண்ட்-ஐ தடை செய்தார்கள். தலைவர்களைச் சிறைப் பிடித்தார்கள்.*

*இதில் மிகவும் சோகமான செய்தி என்ன வெனில் இஸ்லாமிக் சால்வேசன் பிராண்ட்-இன் இன்னொரு தலைவராகிய அலீ பென்ஜாரி அவர் கள் ஜனநாயக வழிமுறைகளை ஏற்றுக்கொள்ள வில்லை. ஆனால் அப்பாஸ் மதானி அவர்கள் ஜனநாயகம் வழியிலும் இஸ்லாமிய ஆட்சியைக் கொண்டு வந்து விடுவோம் என நீட்டி குழக்கினார்கள்.*

*இறுதியில் அனைவரும் சிறையில், அல்ஜீரியா பிரான்ஸ்-இன் தலையாட்டிப் பொம்மை களால் ஆட்சி செய்யப்படுகின்றது.*

*இதுவே எகிப்தில் இஹ்வானுல் முஸ்லீமின் களுக்கும் நடந்தது. ஜனநாயகத்தை நம்பியதால் அங்கே ஓர் இராணுவ அதிகாரி. "ச்சி" ஆட்சி செய்து கொண்டிருக்கின்றார்கள். இதனால்தான் நாம் அடித்துக் கூறுகின்றோம். இஸ்லாமிய ஆட்சியை - அது ஜனநாயக முறைப்படி வந்தாலும் அனுமதிக்க மாட்டார்கள்.*

*இனி நாம் ஜான் பெஃபர் அவர்களின் சிலுவைப் போர் 2.0-க்கு திரும்புவோம்.*

*- இன்ஷா அல்லாஹ்.*
- MGM

# இஸ்லாமிய இளைஞர் முன்னேற்றச் சங்கம் சார்பில் விருது வழங்கும் விழா















29-05-2022 அன்று பொன் விழா கண்ட குளச்சல் இஸ்லாமிய இளைஞர் முன்னேற்றச் சங்கம் நிகழ்ச்சியில் தாருல் இஸ்லாம் ஃபவுண் டேஷன் டிரஸ்டின் காப்பாளர் மற்றும் வைகறை வெளிச்சம் மாத பத்திரிக்கை ஆசிரியர் மு.குலாம் முஹம்மது M.A Journalism அவர்களுக்கும்

தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் பொருளாளர், சென்னை மந்தவெளி இமாம் திருமறை விளக்க விரிவுரையாளர் மௌலான மௌலவி இல்யாஸ் ரியாஜி அவர்களுக்கும் தீன்வழி செம்மல் விருது வழங்கப்பட்டது அல்ஹம்துலில்லாஹ்

50 ஆண்டு கால பொன் விழா மலர் குளச்சல் இஸ்லாமிய இளைஞர் முன்னேற்றச் சங்கம் சார்பாக வெளியிடப் பட்டது.

# 2021 ஆண்டுக்கான கண்ணியமிகு காயிதேமில்லத் விருது

## நீதித்துறையின் வீழ்ச்சி...

இந்த விருதை காயிதே மில்லத் கல்வி அறக்கட்டளை வழங்கி வருகின்றது. இந்த விருது, விருது பட்டயத்துடன் ஐந்து லட்ச ரூபாயும் உள்ளடக்கியது.

வருடந்தோறும் இரண்டு பேருக்கு வழங்கப் படுவதால் விருது தொரு தவறாமல் இரண்டு பேருக்கு பங்கிடப்படுகின்றது.

கண்ணியமிகு காயிதேமில்லத் அவர்கள் பேரன், தாவூத் மியாக்கான் அவர்கள்தாம் இந்த மகத்தானப் பணியைச் செய்து வருகின்றார்கள். விருதைப் பெறுவதற்கான அடிப்படைத் தகுதி பொதுவாழ்வில் நேர்மையுடன் சாதனைகளைச் செய்திருக்க வேண்டும்.

அந்த வகையில் முஸ்லிம்களின் சார்பில், சகோதரர் தாவூத் மியாகான் அவர்களுக்கு நற்கூலிகள் பல. அல்லாஹ் அவர்களது செயல் களை பொருந்திக் கொண்டு நிரம்ப நற்கூலி நல்கிடுவானாக.

**இந்த விருதில் ஒரு சாதானை “டீஸ்டா செட்டல்வாட்”**

சமூக ஆர்வலர் நீதிக்காக, களத்தில், நேர்மை யுடன் போராடி வருபவர் வீரமங்கை டீஸ்டா செட்டல்வாட் அவர்கள்.

**குஜராத் இனப்படுகொலைகளும் டீஸ்டாவும்**

2002 குஜராத் கலவரத்தில், பல ஆயிரம் வழக்குள் பதிவாகின. ஆனால், அந்தக் கலவரங் களை ஏவிவிட்டு முஸ்லிம்களின் பிணங்களின் மேல் குளிர் காய்ந்தே மோடி குஜராத்-இன் முதலமைச்சர் வழக்குகள் பல பாதிக்கப்பட்ட மக்களையே குற்றவாளியாச் சித்தரித்தன. முதலமைச்சரின் பக்கபலத்தோடு கொலை காரர்கள், வீதிகளில்லே உலா வந்தனர்.





கொலைகளைச் செய்தவர்களில், மிகச் சிலர் மீதே வழக்குகள் பதியப்பட்டன. அந்த வழக்குகளும் குஜராத் நீதிமன்றங்களிலேயே அல்லாடிக் கொண்டிருந்தன.

2002 குஜராத் இனப்படுகொலைகளுக்குத் தலைமைத் தாங்கியவரே குஜராத்-இல் முதலமைச்சராகவுமிருப்பதால், பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்காது. அந்த வழக்குகளைவேறொரு மாநிலத்திற்கு மாற்றிட வேண்டுமென்றொரு வழக்கை உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றிட வேண்டும் என்றொரு மனுவை தாக்கல் செய்தார்.

இந்த வகையில் அந்த வழக்குகளில் 1800 மராட்டிய மாநிலத்திற்கு மாற்றப்பட்டது. அந்த வழக்குகளைத் தொடர்ந்து கண்காணித்து நடத்தி 500 சங்கப்பரிவாரத்தினருக்குத் தண்டனைகளை வாங்கித் தந்தார் வீராங்கனை டீஸ்டா செட்டல்வாட்.

அப்படித் தாண்டிக்கப்பட்டவர்களில், மோடியின் ஆட்சியின் கீழ் இருந்த அமைச்சர் மாயா கொடானி போன்றவர்களும் உண்டு.

இஹ்ஷான் ஜாஃபரி என்ற காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குல்பர்க் சொசைட்டி என்ற அடுக்குமாடி எரித்து, கோரமாகக் கொலை செய்யப்பட்ட வழக்கில் அன்றைய முதலமைச்சர் மோடியை நேரடியாகவே குற்றம் சாட்டினார். அந்த வழக்கில் காங்கிரஸ் கட்சி கிஞ்சிற்றும் கவலைப்படவில்லை. அந்த வழக்கில், கொலை செய்யப்பட்ட, இஹ்ஷான்ஜாஃபரி-இன் மனைவி ஷஃபியா ஜாஃபரியை முன்னே நிறுத்தி இன்றளவும், அந்த வழக்கை நடத்திக் கொண்டிருக்கின்றார்.


அஸாம் : அசாம் மாநிலத்தில் NRIC - National Register for Indian Citinens - தேசிய குடிமக்கள் பதிவேடு என்பதை முதன்முதலில் அறிமுகப்படுத்தினார்கள். அங்கே தொடக்க நாள்தொட்டே களத்தில் இறங்கி தேவையான ஆவணங்களைத் தயாரித்துத் தந்து ஆயிரக் கணக்கானவர்களை, குடிமக்களாக்கினார். இதன்வழி பல நூறு பேரை தடுப்புக்காவல் முகாம்களிலே இருந்து வெளியே கொண்டு வந்தனர். இந்தப் பெரும் முயற்சியில் எல்லா சமுதாயத்து மக்களும் பெருமளவில் பயனடைந்தார்கள். குறிப்பாக முஸ்லிம்கள் பயனடைந்தார்கள்.

**நிறைவேறா விருப்பம்**

இந்த வீரமங்கை டீஸ்டா செட்டல்வாட் 2002 குஜராத் இனப்படுகொலையில் காட்டிய வீரதீர செயல்களுக்குப் பாராட்டிட வேண்டும், என நாம் விரும்பினோம். அந்த சகோதரி மோடியின் கெடுபிடிகளுக்கு ஆளானார். அவருடைய அலுவலகம் சங்கிகளால் சூறையாடப்பட்டது. 2002 குஜராத் இனப்படுகொலை புகழ் மோடி டீஸ்டாவை எப்படியும் சிறையில் ஓரிரு நாட்கள் சிறையிலடைத்தாக வேண்டும் என்பதில் மிகவும் குறியாக இருந்தார்.

அப்போது நீதிமன்றங்களில் நீதிபதிகளாக அமர்ந்திருந்தவர்கள். மோடி விரும்புவதையெல்லாம் அப்படி எழுதி தீர்ப்பு என முத்திரையிட்டுத் தந்தார்கள்.

குஜராத்-இல் ஒரு படுகொலையைச் செய்து அதனால் ஒருவருடம் சிறையிலிருந்த இன்றைய உள்துறை அமைச்சர், டீஸ்டாவை சிறையிலடைப்




பதற்கு எல்லா அரசு இயந்திரங்களையும் முடுக்கி விட்டார். டீஸ்டாவை ஓரிருமுறை விசாரித்து விட்டார்கள். வழக்கின் சுருக்கம் பொது பணிக்காக வசூலித்தப் பணத்தை தனக்காக செலவிட்டார் என்பதே.

**(என்னென்ன பொய் வழக்குகளை ஜோடித்தார்கள் என்பதை நாம் ஏற்கெனவே ''வைகறை வெளிச்சம்'' வாசர்களுக்கு விரிவாக சொல்லிவிட்டோம்)**

இனி கைது செய்ய ஏற்பாடுகளைச் செய்தார்கள். ஆனால், நாட்டிலுள்ள மூத்த வழக்கறிஞர்கள் பலர் டீஸ்டாவுக்காக வாதாடப் புறப்பட்டார்கள். கடுமையாகவாதிட்டார்கள். நீதுமன்றங்களால் அவரைக் கைது செய்யும் ஆணையைப் பிறப்பித்திட இயலவில்லை.

ஆனால், குஜராத் இனப்படுகொலை புகழ் மோடிபாடும், ஓராண்டு சிறையிலிருந்து அமித் சாவும் விடுவதாக இல்லை. தங்கள் திட்டங்களுக்குத் துணைபோகும் வழக்கறிஞர்களை நியமித்து, பாராதூரமான வாதங்களை முன் வைத்தார்கள். அவரைக் கைது செய்யும் ஆணை எந்த நேரமும் பிறப்பிக்கப்படலாம் என்ற நிலை.

இந்நிலையில்தான் காயிதேமில்லத் அவர்களின் பேரன் தாவூத் மியாகான் அவர்கள், பொதுவாழ்வில் ஊழலற்ற தூய்மையான வாழ்க்கையை நடத்தியமைக்காக விருது வழங்க அழைத்தார் சென்னைக்கு!

**கைது**

மும்பையிலிருந்து, சென்னைக்கு, விமானம் மூலம் வந்திட வேண்டும். காலை சென்னை வந்திடைந்திட இருந்தார்.

இந்நிலையில் தாவூத் மியாகான் ஏன் அவர்களுக்குத் தொலைபேசி அழைப்பொன்று. அழைப்பு டீஸ்டா செட்டல்வாட் அவர்களிடமிருந்துதான் அந்த அழைப்பு.

காலையில் நான் விமான நிலையத்தில் வைத்து, கைது செய்யப்படலாம் என்பதே!

தாவூத்மியாகான்அவர்களுக்கு, அப்போதைய முதலமைச்சர் ஜெயலலிதா அம்மா அவர்களிடம் மிகையான செல்வாக்கு இருந்தது. அதைப் பயன்படுத்தி முதலமைச்சர் தகவல் தந்துவிட்டார். ஆனால், உடனடி பதில் ஏதும் கிடைக்கவில்லை.

எது எப்படி வரினும் கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களின் பேரன் தாவூத் மியாகான் தன் கடமையைச் செய்துவிடுவது என முடிவு செய்தார்.

டீஸ்டாவை - வரவேற்கவும் முடிந்த உத்திகளைப் பயன்படுத்தி, காப்பாற்றிடவும், விமான நிலையம் விரைந்தார்.

விமான நிலையத்தில் கட்டுக்கடங்காத காவல் ஒரு பெருங்கூட்டம். காவல்துறையினர் யாரையோ தேடுகின்றார்கள். அவர்கள் தேடும் நபர்தான். ஆமாம் தாவூத் மியாகான். மியாக்கானைக் கண்டவுடன் ஒருபெருமூச்சு

விட்டார்கள். முதலமைச்சர் உங்களுக்கு பாது காப்பு வழங்கிட சிறப்பாணையைப் பிறப்பித்து இருக்கின்றார்கள் என்றார்கள்.

இப்போது டீஸ்டா செட்டல்வாட் விமானத் திலிருந்து இறங்கி, விமான நிலையத்தில் வெளி யேறும் வாசலை நெருங்குகின்றார்கள். காவல் துறையினரின் குவிப்பு நம்மைக் கைது செய்திடத் தான் என்பதை புரிந்துகொள்கின்றார்.

வெளியே வந்ததும் காவல்துறையினர் அவரை சூழவில்லை. மாறாக, தாவூத்மியாகான் அவர் களின் நண்பர்கள் வட்டம் அவரை சூழுகின்றது.

நடந்ததைச் சொல்லுகின்றார் தாவூத் மியா கான். நிம்மதி. இந்த நிம்மதியை நிலை நிறுத்தும் அளவில் டெல்லியிலிருந்து ஒரு செய்தி.

அதில் டீஸ்டாவை கைது செய்திடக் கூடாது என உத்தரவை உயர்நீதிமன்றம் பிறப்பித்தது.

இப்படி டீஸ்டா சென்னை வந்து சேர்ந்தார். சென்னையில் அவருக்கு பொதுவாழ்வில் நேர்மை, நாணயம் இவற்றிற்கான விருதை கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களின் பேரன் வழங்கினார்.

**நன்றிகளைக் குவித்தார் டீஸ்டா**

செட்டல்வாட், தன்னுடைய ஏற்புரையில் நன்றிகள், நவிலல் உச்சத்தை எட்டியபோது கண்ணீர் சிந்தினார். வீரமகள் டீஸ்டா செட்டல் வாட் அவர்கள். டீஸ்டாவின் பணிகளின், அவர் சட்ட ரீதியாகவும் சமூக ரீதியாகவும் நடத்தும் போர்களையும் ஆழ்ந்து ஆண்டுக் கணக்கில் கவனித்துவரும் நமது கண்களிலும் கண்ணீர்.

எந்த எதிர்ப்பிலும், எதுவரினும் நிலைகுலை யாமல் நிற்கும் டீஸ்டாவின் அடிமனதை வருடி இருக்கின்றது. தாவூத் மியா அவர்களின் விருது வேண்டும் என நாம் ஏங்கிய செயல் ஒன்றை கண்ணியமிகு காயிதேமில்லத் அவர்களின் பேரன் செய்து சாதித்திருந்தார். தொடர்ந்து அவருடைய விருதுகள் இப்படி நல்லவர்களைக் கண்டறிந்து வழங்குவதிலேயே இருந்தது.

**இந்த வருடம் : 2021-2022க்கான விருது**

இந்த வருடம் அவருடைய விருது இரண்டு மழவர்களுக்குச் சென்றது.

ஒன்று, இர்ஃபான் ஹபீப் என்ற வரலாற்று ஆய்வாளர். அந்த ஆய்வுத்துறையில் ஆய்வாள ராக நிமிர்ந்து நிற்பவர். ஆனால் இடதுசாரி சிந்தனைகளில் மூழ்கிக் கிடப்பவர்.

அவருடைய ஆய்வுகளும் தொடர்ந்து வரும் எழுத்துப் போர்களும் வலது சாரி வரலாற்றுப் புரட்டவர்களுக்குப் பெரும் சவாலாக இருந்தது என்பது மட்டுமல்ல, அவர்களை நிலைகுலை யவும் செய்தது.

அடுத்து இந்த விருதின் ஒரு பகுதி விவசாயிகள் போராட்டத்தை வெற்றிகரமாக நடத்திய - விவசாயிகள் (KSM) கிஸான் சம்மேளனம் என்ற அமைப்பிற்கு வழங்கப்பட்டது.

**என்.ராம் அவர்களின் உரை -**
**உச்ச நீதிமன்றத்தின் வீழ்ச்சி...**

இந்த அமைப்பைப் பாராட்டிய இந்துக்குழு மதத்தின் The Hindu Group of Publications முன்னாள் தலைவர், என்.ராம் அவர்கள் ஆற்றிய உரையில் குறிப்பிட்டவை. மிகவும் முக்கிய மானவை.

1. விவசாயிகள் அவர்கள் நடத்திய நீண்ட நாள் போராட்டத்தில் வெற்றிபெற்றதற்கான காரணம், அவர்கள் உச்ச நீதிமன்றத்தை அணுக வில்லை என்பதுதான்.

உச்ச நீதிமன்றத்தை இவர்கள் அணுகி இருந் தால், நிச்சியமாக இவர்கள் - விவசாயிகள் நடத் தியப் போராட்டம், சட்டத்திற்குப் புறம்பானது என்றும், சட்டம் ஜனநாயகப்படியாக சரியாக இருக்கின்றது என்றும், கூறி இருப்பார்கள்.

அன்றைக்கே விவசாயிகள் அடித்து விரட் டப்பட்டிருப்பார்கள். முக்கியமான விவசாய சங்கத் தலைவர்கள் சிறைப்பிடிக்கப்பட்டிருப் பார்கள்.

திரு. என்.ராம் அவர்களின் உரையிலிருந்து நாம், நாட்டு நலனில் மக்கள் நலனில் அக்கறை உள்ள மக்கள் நமது, உச்ச நீதிமன்றத்தின் போக்குப் பற்றி எத்தகையதொரு மன நிலையில் இருக்கின்றார்கள் என்பதை புரிந்திட முடிந்தது.

இதே காயிதேமில்லத் விருது வழங்கும் விழாவில் உரை நிகழ்த்திய நீதிபதி ஹரிபரந் தாமன் அவர்களும் இதையே கோடிட்டுக் காட்டினார்கள்.

உச்ச நீதிமன்றம் நிறைவாகவே மக்கள் மன்றத்தில் “அடி” வாங்கி இருக்கின்றது

என்பதை அனைவரும் அறிந்திட முடிந்தது.

கண்ணியமிகு காயிதே மில்லத் அவர்களின் பெயரால் வழங்கப்பெற்ற 2021-2022 ஆண்டுக் கான விருது நிகழ்ச்சியில் பேசிய என்.ராம் அவர்கள் பிரிதொரு இன்னொரு கருத்தை வெளியிட்டார்கள்.

அது, இன்றைக்கு இந்தியா போய்க் கொண்டி ருக்கும் நிலையில் நடுவுநிலையோடு இருக்கின் றோம். நாங்கள் எந்தப் பக்கமும் சாய்வதில்லை எனச் சொல்லிக் கொண்டிருக்க இயலாது. நிச்சயமாக இன்றைக்கு நாட்டை துவம்சம் செய்து கொண்டிருக்கின்ற இந்தப் பாசிச சக்திகளை எதிர்த்தே ஆக வேண்டும். நாட்டைக் காப்பாற் றியே ஆக வேண்டும் என்பதாகும். இல்லையேல் - எமது பார்வையில் இந்த நாட்டை இவர்கள நாட்டுக்கு ஓர் வரலாற்று தேுரோகத்தை செய்து விட்டார்கள் என்றே பொருள்.

அதேபோல் என்,ராம் அவர்கள் பிரிதொன் றையும் சொன்னார்கள் ; நாட்டிலுள்ள பல்வேறு மனித உரிமைக் குழுமத்தைச் சார்ந்தவர்களும், பத்திரிகையாளர்களும் ஓர் இயக்கத்தை இன்றைய பாசிச அரசுக்கு எதிராக நடத்திட தயாராக இருக்கின்றோம். (அதைத் தொடங்கி விட்டார்கள்)

**விவசாயிகள் சங்கப் பிரதிநிதி**

எல்லாப் பாராட்டுகளையும் செவிமடுத்த விவசாயிகள் சங்கத்தின் பிரதிநிதி, நாடாளுமன்ற உறுப்பினர், கன்னா மெல்லாஹ் என்பவர் தனது நன்றி உரையில் இப்படிக் குறிப்பிட்டார்.

நாங்கள் போராட்டத்தை முழுவீச்சில் நடத்திக் கொண்டிருந்தபோது, அரசின் சார்பில் “சில பேச்சு வார்த்தைகளுக்கு” ஏற்பாடு செய்தார் கள். அந்தப் பேச்சு வார்த்தைகளின் போது அரசு ஓர் ஆலோசனையை அடிக்கடி வலியுறுத்தியது. அது நீங்கள் இந்த சட்டத்தை பிடிக்கவில்லை என்றால் நீதிமன்றம் செல்லுங்கள என வலியுறுத் தினார்கள். நாங்கள் நீதிமன்றம் சென்றால் நிச்சயமாக அநீதிகளுகுகு உள்ளாக்கப்படுவோம் என்பதை நன்றாக உணர்ந்தோம். அதனால் நீதிமன்றம் செல்வதில்லை என்பதில் உறுதியாக நின்றோம் வென்றோம்.

**வேளாண் சட்டங்கள் பின் வாங்கியது ஏன்?**

“வைகறை வெளிச்சம்“ ஆசிரியரின் கணிப்பின் படி அந்த மூன்று வேளாண் சட்டங்களையும் இந்த அடாவடி ஃபாசிஸ்ட்டுகள் பின் வாங்கியது. அப்போது எதிர்வந்த ஐந்து மாநிலங்களின் தேர்தல்களை மனதில் வைத்துதான் இப்போது அந்தத் தேர்தல்களில் தகிடு தத்தங்களையும் செய்து வென்றுவிட்ட நிலையில் இவர்கள் பின் வாசல் வழியாகவும் அந்தச் சட்டத்தைச் செயல் படுத்த முயற்சிகளை செய்து வருகின்றார்கள். (அவற்றை உரிய நேரத்தில் குறிப்பிடுவோம்) இன்ஷா அல்லாஹ்.

**முஸ்லிம்களே இலக்கு!**

இன்றைய இந்த ஃபாசிஸ்ட்டுகளின் போராடி தாக்குதலுக்கு உள்ளாகுகின்றவர்கள், 200 ஆண்டுகளாக முஸ்லிம்கள்தாம் அதேநேரத்தில் முஸ்லிம்கள் உணர்தாம். அதேநேரத்தில் முஸ்லிம்கள் ஒன்றை உணர்ந்திட வேண்டும். அது அவர்கள் இந்தப் போரில் தனியாக இல்லை. இஸ்லாத்தின் வரலாற்றிலோ, முஸ்லிம்களின் வாழ்க்கையிலே, இது ஒன்றும் புரியதல்ல. ஆனால், தாருல் இஸ்லாம், நீதி அமைதிக்கான மக்கள் இயக்கமும், எதிர்கொண்டு 40 ஆண்டு களாக எதிர்கொண்டு வருகிறது. தாவூத் மியாகான் அவர்களின் உரை.

நாம் நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் அடிக்கடி கூறிவருவதைப்போல், பாசிசம் வீழ்ந்தே ஆக வேண்டும். வீழும் இதனை அந்த விருது வழங்கிடும் நிகழ்வில் கண்ணியத்தோடு காயிதே மில்லத் அவர்களின் பேரன் அவர்களும் குறிப்பிட் டார்கள். அவர்கள் குறிப்பிடும்போது ஹிட்லரின் நாஜிசம், 17 ஆண்டுகள், முசோலியன் பாசிசம் 22 ஆண்டுகள், உங்கள் பாசிசம் ப.ஜ.க.வின் பாசிசம் இன்னும் சில நாள் அவ்வளவுதான் எனக் குறிப்பிட்டார்கள்.

பாசிசம் வீழும். பேரினவாத தீவிரவாதத்தை முடுக்கிவிட்ட இராஜபக்சே வீழ்ந்ததைப் போல். இன்ஷா அல்லாஹ்.

இந்நிலையில் இன்னொன்றையும் இந்தியா வின் நலனில் அக்கறைக் கொண்டவர்கள்“ மனதில் கொள்ள வேண்டும். அது ஐரோப்பாவில் நாஜி சமும், பாசிசமும் மீண்டும் தலையெடுக்காமல் ஐரோப்பிய மக்கள் பார்த்துக் கொண்டார்கள். அதேபோல் இந்தியக் குடிமக்களாகிய நாமும் இனியொரு முறை பாசிசம் இந்திய மண்ணில் தலை தூக்கிடாமல் பார்த்திட வேண்டும். **- MGM**



# 9ம் வகுப்பு சமூக அறிவியல் புத்தகத்தில் வகுப்புவாதம்

## இஸ்தான்புல்லின் அயா சோஃபியா பள்ளிவாசல் உருவான வரலாறு...

இன்றைய துருக்கியின் இஸ்தான்புல்லில் அமைந்துள்ளது அயா சோஃபியா பள்ளி வாசல். இது துருக்கியின் ஐரோப்பிய பகுதியில் அமைந்துள்ளது. இன்று கிறிஸ்தவ ஐரோப்பா வில் இப்பள்ளிவாசல் பற்றிய பல கதைகள் சேப்படுகின்றன. புத்தகங்கள் வெளியிடப்படு கின்றன.

http://hagiasaphiaturkey.com என்ற இணையதளம் இஸ்தான்புல்லிற்கு சுற்றுலா சென்றவர்கள் வழங்கும் கட்டுரைகளை பிரசுரிக்கும் தளமாக இருக்கிறது. கட்டுரைகளை வழங்குமாறு அறிவிப்பும் செய்கிறது.

இத்தலம், கடந்த காலத்தில் ஹகியா சோஃபி யாவாக இருந்த தேவாலயம் அயா சோஃபியா பள்ளிவாசலாக மாற்றப்பட்டது எப்படி? என்ற வரலாற்றை குத்தி குதறி இடம்பெற செய்வதின் மூலம், அதை மீண்டும் ஆலயமாக மாற்றத் துடிப்போரை இணைக்கும் பாலமாக இயங்கி வருகின்றது. இந்த சமூக வலைத்தள கருத்து சுதந்திரம், ஓர் அச்சுறுத்தலாக பரிணாமம் பெற்று வருகிறது.

2020இல் அயா சோஃபியா பள்ளிவாசலில் தொழுகை நடத்தலாம் என்ற துருக்கி நீதிமன் றத்தின் தீர்ப்பு வெள்ளை கிறிஸ்தவர்களுக்கும், தேவராஜ்ஜியத்திற்காக உலகம் முழுவதும் மதம் கடந்து ஏதேனும் ஒரு சேவை செய்வதாக காட்டிக்கொள்ளும் கிறிஸ்தவ மிஷினரி மற்றும் மெர்ஷினரிகளுக்கும் ஒருவித அசவுகரியத்தை அளித்திருப்பதாக உணர முடிகிறது.

அயா சோஃபியா பள்ளிவாசல் மியூசியமாக இருந்து நீதிமன்ற வழிகாட்டின்படி மீண்டும் பள்ளிவாசலாக மாற்றியதில் உள்ள நீதியை ஒரு

ஆர்த்தோடக்ஸ் பாரதியார் Youtube சானலில் பதிவிட்டார். அது,

https://m.youtube.com/watch?feature=youtube&v=053dy96xyks.

உடனேயே கருத்து சுதந்திரத்திற்கு மார்தட்டிக் கொள்ளும் கிறிஸ்தவ உலகம் நீதியை பேசிட்டே அவ்வீடியோவை அழித்துவிட்டது. இப்பொழுது அதை பார்க்க முயன்றால்

"This video is unavailable" என காட்டுகிறது.

நம்முடைய நம்மைப் படைத்த இறைவனை வணங்கிவர ஏன் நீதிமன்றத் தீர்ப்பு அவசிய மாகிறது? அதுவும் ஒரு முஸ்லிம் நாட்டில்? என உலக முஸ்லிம்கள் திருதிருவென முழிக்கிறார்கள்.

இதற்கு கி.பி. 1453இல் நடந்த முக்கிய வரலாற்று சம்பவத்தை படித்து அறிய வேண்டியுள்ளது.

கி.பி. 1453இல் மூன்று கண்டங்களை ஆண்ட பிரமாண்டமான பைசாண்டிய பேரரசு, இறுதியா மிச்சசொச்ச நிலப்பகுதியான காண்ஸ்டான்டி நோபிள் (Constantinople) நகரத்துடன் சுருங்கிவிட்டிருந்தது. இதன் மொத்த பரப்பளவு வெறும் 14 கி.மீ. என விக்கிபீடியா தெரிவிக்கிறது.

இந்த பைசாண்டிய பேரரசு கிறிஸ்தவரின் பல பிரிவுகளில் ஒன்றான "கிழக்கு ஆர்த்தோடக்ஸ்" (Eastern Orthodox) பிரிவை சேர்ந்த கிறிஸ்தவர்களால் ஆளப்பட்டது. காண்ஸ்டான்டி நோபிளை தலைநகராகக் கொண்டு சுமார் 1200 வருடங்கள் ஆண்டு வந்தனர் பைசாண்டிய கிறிஸ்தவர்கள். இது கிரேக்க மொழி பேசிடும் பேரரசு.

இதை வரலாற்றில் கிழக்கு ரோமப் பேரரசு என்றும், கிரேக்க ரோமப் பேரரசு என்றும், பைசாண்டியப் பேரரசு என்றும் அறியப்படுகிறது. ஆனாலும், பைசாண்டியப் பேரரசு என்றே அழைக்கப்படுவது மரபாக உள்ளது.

ரோம் நகரத்தை தலைநகராகக் கொண்டு லத்தீன் மொழி பேசிய உருவ வழிப்பாட்டை மேற்கொண்ட ரோமப் பேரரசு விரைவாக வீழ்ச்சியடைந்த நேரத்தில், இப்பகுதியை சேர்ந்த கான்ஸ்டன்

டைன்-I என்ற ஆட்சியாளர் கிரேக்க மொழி பேசும் பைசாண்டியம் நகரை ஆக்கிரமித்து ஆளத் துவங்கினார்.

இந்த கான்ஸ்டன்டைன்-I சுமார் கி.பி. 312இல் கிறிஸ்தவராக மதம் மாறினார். இவரே கிறிஸ் தவம் மதம் மாறிய முதல் ஆட்சியாளர். இவர் பெயராலேயே பைசாண்டியம் நகர் கான்ஸ்டான்டி நோபிள் என அழைக்கப்படுகிறது.

இவருடைய மகன் ஜீலியஸ் கான்ஸ்டன்டியஸ்-II (Constantius-II) கி.பி. 337இல் அரியணை ஏற கி.பி. 360இல் ஹகியா சோஃபியா (Hagia Sophia) என்ற கிறிஸ்தவ தேவலாயத்தை தனது அரண்மனை அருகில் கட்டினார். இது அளவில் சிறியதாக இருந்தது.

இந்தச் சர்ச் கட்டப்பட்ட இடம் சர்ச்சைக் குரியது. இதைப்பற்றி Res. Assist. O. Erdal Sahin என்ற எழுத்தாளர்.

"The first basillica - type Hagia Sophia was builtt on the temple of Artemis"

"ஹகியா சோஃபியா தேவாலயம் அர்டமிஸ் கோயிலை இடித்து, அவ்விடத்தில் கட்டப்பட்டது" என்கிறார்.

ஆதாரம் "The construction of Hagia Sophia as an Imperial space and the process of change" Page-01

(ஆர்டமிஸ் என்பது கிரேக்க பெண் கடவுள். இதற்குரிய கோவில் ஆர்டமிஸ் கோவில். கிறிஸ்தவத்திற்கு முன் தெய்வ வழிப்பாட்டு முறையை Pagan Religion என்றும் கோவிலை Regan Temple என்றும் அறியப்படுகிறது.

இதுபோல். Jonathan Harris என்ற எழுத்தாளர்

"As the fourth century progressed christianity gradually became the official religion of the emprire and by the end of the century most pagan temples had either been foreibly closed dwon or had fallen into decay"

"The christian emperors now falt secure enough to demolish the remaining pagan temples in the city or to convert them for other purpose"

"4வது நூற்றாண்டில் போக்கில் கிறிஸ்தவம் அரசு மதமாக மாற, உருவ வழிபாட்டு கோயில்கள் கட்டாயமாக இடிக்கப்பட்டன. அல்லது கவனிப்பாரற்று விடப்பட்டு அது தானாகவே விழும்படி விடப்பட்டன."

“கிறிஸ்தவ பேரரசர்கள் நகரத்தில் இருந்த மீதமுள்ள போகன் கோயில்களை இப்போது இடிக்க சரியான தருணம் என உணர்ந்தார்கள்.

ஆதாரம் : Constantinople : Capital of Byzantium, Page-28

இவ்வாறு மற்ற மதத்தின் இடத்தாலும், பொருளாலும் கட்டப்பட்ட ஹகியா சோஃபியா சர்ச் கி.பி. 404 மற்றும் கி.பி. 532இல் இருமுறை அப்பகுதி கிறிஸ்தவர்களாலேயே எரித்து, தரை மட்டமாக்கப்பட்டது.

இதன்பிறகு ஜஸ்டினியன்-I (Justinion-I) ஆட்சிக் காலத்தில் கி.பி. 573இல் புதுவடிவில் பிரமாண்டமான கட்டிடமாக கட்டி முடிக்கப் பட்டது. இதுவே இன்று நாம் காணும் அயா சோஃபியா கட்டிடம்.

இத்தேவாலயத்திற்கு கிறிஸ்தவ மத நம்பிக்கையின்படி எந்தவித புனித தன்மையும் கிடையாது.

இத்தேவாலயம் உள்ள காண்ஸ்டான்டி நோபிள் நகரத்தை - பைசாண்டிய பேரரசை - மெஹ்மத்-II (Mehmet-II) என்ற 22 வயதே நிரம்பிய துருக்கி அரசரின் தலைமையில் துருக்கிய - ஐரோப்பிய படைகள் (முஸ்லிம் - கிறிஸ்தவர்) படை தாக்கியது. தரை மற்றும் கடல் வழியே நான்கு பக்கங்களிலிருந்தும் முற்றுகை யிடப்பட்டது. இது 57 நாட்கள் தொடர்ந்தது.

மே-29, 1453-ல் சூரியன் உதயத்திற்கு சுமார் 2 மணிநேரத்திற்கு முன் துருக்கியின் நன்கு பயிற்றுவிக்கப்பட்ட வலுவான முன்கள படை யினரான Janissary என்ற கிறிஸ்தவ படைப் பிரிவின் கடும் தாக்குதலால். அந்நகரின் பாதுகாப்பு அரண் தகர்க்கப்பட்டது. இவர்கள் சுமார் 3000 பேர் கொண்ட சிறப்புப் படையினர்.

இறுதியாக சுமார் 40,000 பேர் மக்கள் தொகை கொண்ட காண்ஸ்டான்டி நோபிள் - பைசாண்டிய பேரரசு வெற்றிக் கொள்ளப் பட்டது.

பாதுகாப்பு கோட்டை சுவர் இடித்து நுழைந்த துருக்கியின் இந்த சிறப்பு Janissary கிறிஸ்தவ படைகள், சிறுசிறு மலைகளை உள்ளடக்கிய நிலப்பரப்பு வழியாக முன்னேறியது.

இப்பகுதிகளில் சில இடங்களில் பைசாண்டிய ராணுவ வீரர்கள், கூலிப்படைகள் ஆங்காங்கே மறைந்து கொரில்லா தாக்குதல் நடத்தின.

சில இடங்களில் இவ்வீரர்கள் தலைமை யில்லாத ஒருங்கிணைக்கப்படாத தாக்குதலை நடத்தினர்.

வெற்றி வீரர்களாக நுழைந்த துருக்கியின் படையினரின் முதலில் முன்னேறிய முன்களப் படையான Janissary ஆங்காங்கே மலை இடுக்குகளில் இருந்த எதிரிகளுடன் கடுமையாக மோதினர். எதிரிகள் கைது செய்யப்பட்டனர். அவர்களின் குடும்பங்களும், அவர்கள் மறைந் திருந்த கட்டிட உரிமையாளரும் - அது வழி பாட்டுதலமும் உரிமையாள இருந்தாலும் சரியே - கைது செய்யப்பட்டு Janissary-களின் தனியு டைமையாக பாவிக்கப்பட்டனர். அம்மக்களின் பொருள்கள் இவர்களுடையதாகியது.

அதேநேரத்தில் சில பகுதிகள் எதிர்ப்பு காட் டாமல் துருக்கிய தளபதிகளிடம் சரணடைந்தன. இவர்களின் உயிர்களும், உடமைகளும் பாது காக்கப்பட்டன.

சில இடங்களில் எதிரிகளால் ஒருங்கிணைக் கப்படாமல் உதிரியாக நடந்த தாக்குதலால் ஆபத்தில்லை என்றுணர்ந்தவுடன் ராணுவ பயிற்சிக்குரிய கொலை வெறி தாக்குதல் நடத்தப்படவில்லை.

தொடர்ந்து 57 நாட்கள் நடைபெற்ற நீண்ட முற்றுகை போரில் ஏற்பட்ட இழப்போ இரவு முருவதும் விழித்திருந்ததால் ஏற்பட்ட சலிப்பு, களைப்பு மற்றும் விரக்தியோ, கோபமோ, மன அழுத்தமோ, ராணுவ பயிற்சிக்கேயுரிய வெறியோ, வெற்றிகளிப்போ இவற்றில் ஒன்றுகூட சரணடைந்தவர்களை கொத்து கொத்தாக படுகொலை செய்ய தூண்டவில்லை. துன்புறுத்தி இன்பம் காணும் மனநிலைக்கு தள்ளவில்லை.

சரணடைந்தவர்கள் மற்றும் கொலை செய்யப் பட்டவர்களின் தலையை மற்றும் உடல் உறுப்புகளை சிதைத்து வெற்றி சின்னமாக்கி (Trophy) கொண்டாடப்படவில்லை.

அப்படியொரு கட்டுகோப்பான துருக்கிய படை. இஸ்லாமியப் பண்புகளால் போதிக்கப் பட்ட படை. அந்த பண்புகள் துருக்கியின் கிறிஸ்தவ படைப் பிரிவினையும் கட்டுப்படுத்

தியது. பயிற்றுவித்திருந்தது என யூகிக்க முடிகிறது.

இந்த Janissary படைகளுக்கு பின்னால் அணிவகுத்து வந்த துருக்கிய முஸ்லிம் படைகளும் தாக்குதல் நடவடிக்கையில் பங்கெடுத்து, தங்களுக்கு கிடைத்த மிச்சசொச்ச பொருள்களை கையகப்படுத்திக் கொண்டும், சந்தேகப் பட்டவர்களையும், அவர்களின் குடும்பத்தினரையும் கைது செய்த நிலையில் காண்ஸ்டான்டிநோபிள் மக்கள் குடியிருப்பு பகுதிக்குள் புகுந்தனர்.

தெருக்களுக்குள் புகுந்த துருக்கிய படைகள் அனைத்தும் கடும் எதிர்ப்பை சந்தித்தன. பெண்கள் கற்களாலும், தீ கங்குகளாலும், கொதிக்கும் எண்ணெய்யை கொண்டும் தங்கள் வீடுகளிலிருந்து வீசி துருக்கிய படைகளுக்கு எதிர்ப்பு காட்டினர்.

துருக்கிய படை நிலைகுலைந்தது. பெரும் ஆயுதங்களை கொண்ட ராணுவம், தீவிரவாதிகள் மற்றும் கூலிப்படைகளின் கூட்டு தாக்குதலை முறியடித்து வெற்றி கொண்டவர்களுக்கு இது சிரமமாகப் பட்டதற்குக் காரணம் தாக்கியவர்கள் பொதுமக்கள்.

அம்மக்களின் குடியிருப்புகள் எளிதில் தீ பற்றி எரியக்கூடிய மரப் பொருள்களால் கட்டப் பட்டவையே. இன்றைய கான்கிரீட் கட்டிடங்கள் அல்ல. தீயால் கொளுத்துவிட்டால் கதை முடிந்துவிடும். ஆனால் துருக்கிய முஸ்லிம் படை அவ்வாறு செய்யவில்லை.

பொதுவாக இத்தகைய சூழலை எதிர்கொண்ட அனைத்து இனமொழி படைகளும் நகரத்தை தீயால் எரித்து விடுவார்கள். வரலாறு இதைத்தான் காட்டுகிறது. இதில் ஒருசில விதிவிலக்குகள் இருக்குமேயானால், அது முஸ்லிம் வரலாற்றுக்குரியதாக இருக்கும். அப்படி ஒரு விதிவிலக்கு மெஹ்மூத்-II துருக்கிய படைக்குரியதாக இருந்தது.

கிறிஸ்தவ பொது ஜனங்கள் வெற்றிபெற்ற ராணுவத்திற்கு கொடுத்த துன்பநிலையை அரசர் மெஹ்மூத் -IIக்கு தெரிவிக்கப்படுகிறது.

அறிந்த மன்னரும், சரியாக அந்நாளின் நடுப்பகலில் நகரத்திற்குள் பிரவேசிக்கிறார்.

பல இராணுவ வீரர்கள் கலந்து பொதுமக்களில் குறிப்பாக பெண்களின் குழந்தைகளின் எதிர்ப்பின் இயல்பை புரிந்துகொண்டார் சுல்தான்.

இவ்வெதிர்ப்பு அச்சத்தின் காரணமாக காட்டப்படும் எதிர்ப்பு. எதிர்காலம் கேள்விக்குறியானதால் ஏற்பட்ட எதிர்ப்பு. உயிர் வாழ வேண்டும் என்ற தேவையின் காரணமாக ஏற்பட்ட எதிர்ப்பு.

இவ்வெதிர்ப்புக்கு வெறுப்பை உமிழவில்லை. 22 வயதேயான சுல்தான் மெஹ்மூத்-II.

பல்வேறு விதமான போர் செய்திகள், வெற்றி செய்திகள், இழப்புகள் என தனது தரப்பு செய்திகள் அருவிபோல சுல்தானின் செவிகளுக்கு வந்துகொண்டிருக்கும் தருணத்தில், அவரின் இரத்தம் பெருமையாலும், ஆணவத்தாலும் பீறிடவில்லை. அசாதாரணமான நிதானம்.

புதிய அரசர், புதிய ராணுவம், புதிய மத அடையாளம், புதிய நிர்வாகம் என அனைத்து வகை புதியவைகளை தோல்வியுற்ற பொதுமக்களின் எளிதில் ஏற்றுகொள்ள மாட்டார்கள்.

இவர்கள் நாட்டைவிட்டு வெளியேறவும் பாதை இல்லை. மூன்று புறம் கடல் நீரால் சூழப்பட்டிருந்தது. அனைத்தும் அடைக்கப்பட்டிருந்தன. இதனால் இவர்களைத் தாமே முன் வந்து "மன்னித்தலே" தனது இறை நம்பிக்கைக்கான சாட்சி, ஆதாரம் என உணர்த்தியிருக்க வேண்டும்.

இவர்கள் எந்த இஸ்லாத்தை வெறுத்து போர் செய்தார்களோ, அந்த இஸ்லாத்தின் மன்னிப்பைக் காட்ட வேண்டிய தருணம் இது.

கடும் சேதாரத்தை சந்தித்தே வெற்றி பெற்றார் சுல்தான் மெஹ்மூத்-II. அச்சேதாரமும் வெற்றி பெற்ற பிறகு தனக்கு ஏற்பட்ட சோதாரத்திற்கான நஷ்ட ஈட்டை பெறும் "போர் முடிவு நீதி" அவர் கண்முன்னே நிழலாடதான் செய்தது. ஆனால், இவை எதுவும் அரசரின் மன்னிப்பு அறிவிப்பை இருமுறை யோசிக்க வைக்கவில்லை.

காண்ஸ்டான்டி நோபிள் நகரத்திற்கு "மன்னிப்பு" அறிவிப்பை அறிவிக்க செய்தார். சாதாரண போர்வீரர்களும் பெண்களும், குழந்தைகளும், வயோதிகர்களும் மன்னிப்பு பெற்றனர். அழிச்சாட்டியம் நிறுத்தப்பட்டது. இதனால் புதிய மக்கள் நலன் நிர்வாகம் அதாவது சிவில் நிர்வாகம் உடனடியாக செய்யப்பட ஏதுவானது.

இது இஸ்லாத்தின் பண்பு.

ஆனாலும் ஹகியா சோஃபியா தேவால யத்தில் காயமடைந்த போர் வீரர்கள், கன்னி யாஸ்திரிகள், பாதிரியார்கள், பெண்கள், குழந்தை கள், வயோதிகர்கள் என அனைத்துப் பிரிவினரும் தஞ்சமடைந்திருந்தனர். இவர்கள் சரணடைய விரும்பவில்லை. அரசரின் மன்னிப்பு அறிவிப்பை ஒரு பொருட்டாக கருதவில்லை. இதனால் தேவாலயத்தின் கதவுகள் இருக மூடப்பட்டன.

(அநேகமாக, முதல் சிலுவை யுத்தத்தின் போது ஜெருசலத்தில் ஜீசஸ் படைகள் அறிவித்த மன்னிப்பு அறிவிப்பை நம்பி வெளியேறிய அனைத்து முஸ்லிம்களும், யூதர்களும் படு கொலை செய்யப்பட்ட நினைவுகள் இவர் களுக்கு வந்திருக்கலாம்)

தஞ்சமடைந்தவர்கள் தோல்வியுற்ற இராணு வமா? இவர்கள் பாய்வதற்கு பதுங்கியுள்ளனரா? மீண்டும் தாக்க வாய்ப்புள்ளதா? போன்ற அச்சத்தையும் குழப்பத்தையும் வென்றவர்களின் மனதில் ஏற்பட்டது.

ஹகியா சோஃபியா நிலவரம் சுல்தானின் செவிக்கு அறிவிக்கப்படுகிறது. சிறிதும் தாமதிக் காமல் சுல்தானும் தன் குதிரை மீதேறி சோஃபியா ஆலயத்திற்கு விரைகிறார். காலத்தை விரயமாக்க தயாரில்லை. காலதாமதம் பல்வேறு பாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பதை அறிந் தவர் சுல்தான் மெஹ்மூத்-II ஆலோசிக்கிறார்.

ஆலோசனையில் "மன்னிப்புச் செய்தி" அறிவித்தும் ஹகியா தேவலாயத்தில் தஞ்சம டைந்தோர் வெளியேற தயாரில்லை என்பதை அறிகிறார். கவலை கொள்கிறார். அவர்களை வெளியேற்ற மற்றவர்கள் செய்யும் தீயிட்டு சிதைப்பதை போன்று தேவாலயத்தை சிதைப் பதை சுல்தான் விரும்பவில்லை.

தேவாலயம் தன் கட்டிடக் கலையின் கம்பீ ரத்தால் எல்லோரையும் ஈர்த்துக் கொண்டிருந்தது. சுல்தானையும் மிகவும் ஈர்த்துவிட்டது.

ஹகியா சோஃபியாவில் தஞ்சமடைந்தவர் களுக்கு ஏதேனும் ஒரு முடிவு கட்டினால்தான், அவ்வூர் சுமூக நிலைக்குத் திரும்பும். ஆனால், தான் வாக்களித்த "மன்னிப்பு வழங்கல்" என்ற ராஜதர்மத்தை கைவிட தயாரில்லை சுல்தான். பொறுமை காத்தார்.

ஹகியா சோஃபியா சிறப்பு நடவடிக்கையில், எக்காரணம் கொண்டும் ஆலயம் சேதப்படுத்தப் படக்கூடாது, பாதுகாக்கப்பட வேண்டும் என உறுதியுடன் இருந்தார். அதே சமயத்தில் போரின் இறுதி வடிவமான "சரணடைதல்" நடைமுறைக்கு வரவேண்டும்.

இல்லையென்றால் நகரத்திற்குள் ராணுவ நடமாட்டத்தை நியாயப்படுத்தும். ராணுவத் தின் சோதனைசாவடிகள், நடவடிக்கைகள் பொது மக்களை அச்சுறுத்தும். சிவில் நிர்வாகத்தை சிறப்பாக நடத்தினார் அணக்கம் ஏற்படும்.

இந்நிலையில் வழிபாட்டுதலத்திற்குரிய விதி களை பயன்படுத்தி ஒருபுறம் கிறிஸ்தவர்களின் உயிர்களை பாதுகாக்கவும், மறுபுறம் தேவால யத்தை பாதுாக்கவும் முடிவெடுக்கிறார்.

முஸ்லிம் மத குருவை அழைத்து சர்ச்-இல் தொழுகைக்கான அழைப்பான "பாங்கு ஓசை"யை ஒலிக்கச் செய்கிறார்.

ஹகியா சோஃபியா அயா சோஃபியாவானது.

"இனி இது எங்கள் வழிபாட்டுதலம். எங்கள் வழிபாட்டு தலத்திற்கு மரியாதை தருவோம். எங்கள் வழிபாட்டு தலத்தில் உள்ளோரை பாதுகாப்பது எங்களது கடமை. அதில் உள்ளவைகளையும் பாதுகாப்பது எங்களது கடமை. இரத்தம் சிந்த மாட்டோம். நிராயுத பாணிகளை கொலை செய்ய மாட்டோம்" என்ற தனது எண்ணத்தின் வெளிப்படாக பாங்கு ஓசையை ஒலிக்கச் செய்துள்ளார்.

இதன் வழியாக அடைப்பட்டுக் கிடந்த கிறிஸதவர்களின் உள்ளத்தில் பாதுகாப்பு உணர்வு களை உத்தரவாதத்தை விதைக்கிறார். வெற்றி வீரர் சுல்தான் மெஹ்மூத்-II உள்ளங்கள் வெற்றி கொள்ளப்பட்டன. இது அடைப்பட்டுக் கிடந்த வர்களுக்குள் ஈர்த்திருக்க வேண்டும். சிந்திக்க தூண்டியிருக்க வேண்டும். இதனால் நம்பிக்கை பிறந்தது. இது பாதுகாப்பு உணர்வை அளித்தது.

சர்ச்-இன் கதவை திறந்தனர். அடைப்பட்டுக் கிடந்த மக்கள். சுல்தான் உள்ளே சென்றார். ஆறுதல் அளித்தார். நம்பிக்கைகளை விதைத் தார். கிறிஸ்தவ மத நம்பிக்கை மதிக்கப்படும் என்றார். அம்மக்களும் ஏற்றனர். அணியணியாக அவரவர் இருப்பிடங்களுக்கு செல்லலாயினர்.

கிறிஸ்தவர்களும் காப்பாற்றப்பட்டன. சோஃபியாவும் காப்பாற்றப்பட்டது. சோஃபியா என்றால் Wisdom. அதாவது ஞானம். இந்த Wisdom சுல்தானின் Wisdomத்தால் காக்கப் பட்டது. கான்ஸ்டன்டின் நோபிளில் அரசின் முறையான விசாரணைக்கும். நீதியின் தீர்ப்புக் கும் முன்பேயும், தீர்ப்புக்கு பின்பும் பலரும் நஷ்டஈட்டை கொடுத்து வெளியேறினர். இவர் களில் வெளிநாட்டு வியாபாரிகள், வாடிகன் தீவிரவாதிகள், அகில தேவராஜ்ஜிய தீவிரவாதிகள் (Knights) கடற் கொள்ளையர்களும் உள்ளவர் ஆவர். இவர்கள் சிலுவை உணர்ச்சியுடன் (Crusadins Spirut) போர் செய்தவர்கள்.

இப்படி மன்னிப்பு பெற்றதால், நஷ்டஈட்டை கொடுத்து தப்பித்தோடியவர்களால் எழுதப் பட்ட அநேக நூல்கள் லத்தீன், கிரேக்கம் மற்றும் ரஷ்ய மொழிகளில் உள்ளன.

மன்னிப்பு பெற்ற, சரணடைந்த காண்ஸ் டான்டி நோபிள் உள்ளூர் குடிமக்கள் பலரும் தங்கள் நாட்டிலேயே புதிய அரசரின் அரவணைப்பில் சீரும் சிறப்போடும் வாழ்ந்தனர், பயனடைந்தனர்.

பொதுவாக ஆர்த்தோடக்ஸ் கிறிஸ்தவத்தின் தலைமை பாதிரியார் Patriarch ஹகியா சோஃபி யாவில்தான் நியமிக்கப்படுவார்.

ஆனால் 1451-1453 வரை காலகட்டத்தில் அதாவது சுல்தான் மெஹ்மூத்-II கான்ஸ்டன்டின் நோபிளை வெற்றி கொள்ளும் வரை எந்தவொரு தலைமை பாதிரியும் நியமிக்கப்படவில்லை. இதை செய்ய வேண்டிய அரசன் காண்ஸ்டான்டி-IX அக்கறைக் காட்டவில்லை. இதனால் இரண்டு ஆண்டுகளாக நடக்க வேண்டிய மத அனுஷ் டானங்கள் ஆத்மார்த்தமாக இருந்ததில்லை என உணரலாம். மக்களும் கவலை கொண்டிருந்தனர்.

மெஹ்மூத்-II அவர்கள் கொடுத்த வாக்குறுதி யின்படி 6 மாதங்களில் அதாவது ஜனவரி - 1454இல் ஜெனடியாஸ்-II (Genndios-II) என்பவரை பாதிரியார்களின் பரிந்துரையின் பேரில் Patriarch of Constantinople-லாக நியமித்தார்.

நிறுத்தப்பட்டு விடுமோ என்ற நிலையி லிருந்து ஆர்த்தோடக்ஸ் மத நம்பிக்கை தலை மையை முஸ்லிம்கள் காப்பாற்றினார்கள். ஆர்த் தோடக்ஸ் தலைமையை புதுப்பித்து பைசாண்டி யர்களின் வழக்கங்களை வாழ வைத்தார். சிறுபான்மை நலன் பேணி பாதுகாக்கப்பட்டது.

(இதுபோன்ற எகிப்தை ஆண்ட பைசாண்டிய பேரரசு, அங்கு வாழ்ந்த கிப்தி எனப்படும் Coptic பிரிவு சிறிஸ்தவர்களை வேட்டையாடியது. சிதறடிக்கப்பட்டார்கள். இந்நிலையில் 7-ம் நூற்றாண்டில் அரபி முஸ்லிம்கள் எகிப்தை வெற்றிகொண்ட பிறகு, Coptic கிறிஸ்தவர்களை மத சுதந்திரத்தை அனுபவித்தனர்.)

முஸ்லிம்களின் வாழ்க்கை முறையால் ஈர்க்கப்பட்ட இம்மக்கள் பிற்காலத்தில் இஸ்லாத்தை தழுவினர். முஸ்லிம்களுடன் இரண்டறக் கலந்தனர். இன்று இவர்கள் ஐரோப்பிய முஸ்லிம்கள். இப்பொழுது இவர் களின் சொத்துக்கள் முஸ்லிம்களின் சொத்துக் களாகிவிட்டன. இன்றைய இஸ்தான்புல்லில் கிறிஸ்தவர்கள் மிகமிக சொற்பமே.

இதுதான் ஹகியா சோஃபியா அயா சோஃபியாவாக மலர்ந்த வரலாறு.

அன்று முதல் கி.பி. 1931 வரை முஸ்லிம்களின் வழிபாட்டுதலமாக தொடர்ந்தது.

முதல் உலகப்போரின் முடிவில் உதுமானிய கிலாஃபத் சூழ்ச்சி வலையால் வீழ்த்தப்பட்டது. வீழ்த்தியவர்கள் சோஃபியா பள்ளிவாசலை அருங்காட்சியமாக மாற்றிட துருக்கிய அதிபரை சித்தாந்த (மதசார்பின்னை) ரீதியாக தூண்ட, அதிபர் கமால் அதார்துக் பள்ளிவாசலை அருங்காட்சியமாக (Museum) மாற்றினார். இது கி.பி. 1935இல் நடந்தது.

2020 முதல் துருக்கிய நீதிமன்ற தீர்ப்பால் தொழும் இடமாக மீண்டும் பள்ளிவாசலாக செயல்பட்டு வருகிறது. அதே சமயத்தில், குறிப்பிட்ட நேரத்தில் சுற்றுலா தளமாக, சென்று கண்டுவர அருங்காட்சியமாகவும் செயல்படு கின்றது.

இன்றுபோல் மக்களாட்சி இல்லாத மன்ன ராட்சி காலத்தில் தொல்லியல் துறையும் இல்லை. ஜனநாயகமும் இல்லை. இருந்திருந்தால் ஆர்ட மிஸ் கோயிலும் அதுபோன்று பிற கிரேக்க கோயில்களும் நினைவு சின்னங்களாக இருந் திருக்கும். சோஃபியா தேவாலயம் உருவாகி

யிருக்காது.

இதுவே சோஃபியா தேவாலயத்தின் உண்மையான வரலாறு, அரசியலுமாகும். இதை கொண்டு 9-ம் வகுப்பு சமூக அறிவியல் பாடத்தில் உள்ள முரண்பாட்டை களைய முஸ்லிம்கள் ஆவண செய்ய வேண்டும்.

ஆதாரம் -


1) The siege and the fall of constantinople in 1453 Historiography, Topography and militray studies by - Marios Philippides of walter K. Hanak. P-81, 492, 520 (Footnote)

A History of Byzantium by - Timothy E.Gregory P-336

2) The siege and the fall of constantinople in 1453 Historiography, Topography and militray studies by - Marios Philippides of walter K. Hanak. P-518, 520, 522, 577 (Footnote)

3) The siege and the fall of constantinople in 1453 Historiography, Topography and militray studies by - Marios Philippides of walter K. Hanak. P-520

4) The siege and the fall of constantinople in 1453 Historiography, Topography and militray studies by - Marios Philippides of walter K. Hanak. P-39, 577

5) (i) The siege and the fall of constantinople in 1453 Historiography, Topography and mil itray studies by - Marios Philippides of walter K. Hanak. P-37, 539

(ii)AHistoryofByzantiumby-TimothyE.Gregory P-336

(iii) From Cuzco to Constantinople Rethinking Postcolonialism P-205

5A) The siege and the fall of constantinople in 1453 P-20, 578

6) The siege and the fall of constantinople in 1453 Historiography, Topography and militray studies by - Marios Philippides of walter K. Hanak. P-539

7) Nestor Iskandar on the fall of constantinople

(i) About the Document - Longman world history wps.pearsoncustom.com

(ii) The siege and the fall of constantinople in 1453 Historiography, Topography and militray studies by - Marios Philippides of walter K. Hanak. P-521

8) (i) The siege and the fall of constantinople in 1453 Historiography, Topography and militray studies by - Marios Philippides of walter K. Hanak. P-526

(ii)AHistoryofByzantiumby-TimothyE.Gregory P-337

9) Nestor Iskandar on the fall of constantinople About the Document - Longman World History

https://wps.pearsoncustom.com/wps/media/objects/2427/2486120/chapassets/document/doc9-4.html

10) (i)AHistoryofByzantiumby-TimothyE.Gregory P-336

(ii) The siege and the fall of constantinople in 1453 by - Marios Philippides of walter K. Hanak. P-137

11) A History of Byzantium by - Timothy E.Gregory P-337

12) God Exphins to patriarch athanasios the fall of constantinople : I.S. Peresvetov and the im passe of political theology - by Petre Guran

13) The siege and the fall of constantinople in 1453 Historiography, Topography and militray studies by - Marios Philippides of walter K. Hanak.

வெளிநாட்டு வியாபாரிகள் - P-11,37,82,383, வாடிகன் தீவிரவாதிகள் - Cardinal Isidore P-9,15, Leonardo Giastiniani P-15,16, கடற் கொள்ளையர்கள் P-381,382,387, தேவராஜ்ஜிய தீவிரவாதிகள் - P-375,376

from Cuzco to Constantinople - by Gregory Jusdanis P-207

14) (i)AHistoryofByzantiumby-TimothyE.Gregory P-343.344

(ii) from Cuzco to Constantinople - by Gregory Jusdanis P-208

(iii) The sultan of Vezirs the life and times of the ottoman grand vezir Mehmud Pasha Angeloric, P-26

15) The siege and the fall of constantinople in 1453 Historiography, Topography and militray studies by - Marios Philippides of walter K. Hanak. P-50


**- ஜாஹிர் உசேன், ICHR**

மதுரை.



சேதாரத்தை ஏற்படுத்தினார்கள். நகரங்கள் அனைத்தையும் அழித்தொழித்தார்கள். இஸ்லாமிய உலகின் நாகரீக மற்றும் கல்வி மையங்களாக விளங்கிய அனைத்தையும் தரை மட்டமாக்கினார்கள்.

இவ்வாறு தாத்தாரியர்களது வேட்டைக்கு இரையாக மாறிய நகரங்களில் வாழும் மக்கள் கூட்டம் கூட்டமாக இடம்பெயர்ந்தனர்.

கல்வியாலும், ஒழுக்கத்தாலும் மேம்பட்ட பாரம்பரிய மிக்க பல்வேறு குடும்பங்கள், குழுக்கள் அந்த நகரங்களை விட்டு வெளியேறி னார்கள். எங்கே செல்வது என்று தெரியாமல்

# இந்தியாவின் தன்னிகரற்ற இஸ்லாமிய ஆளுமைகள்

தமிழில்:
மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி

வாழ்வின் பலதரப்பட்ட துறைகளில், களங்களில், பல்வேறு கலைகளில் சிறந்து விளங்கக்கூடிய ஆளுமைகள் ஒரு சமூகத்தில் என்றும் நிலைத்திருப்பது தான், அந்த சமூகத்தின் தனித்துவத்தின் அடையாளம்.

இந்தியாவில் உள்ள இஸ்லாமிய சமூகத் திற்கோ அதற்குப் பஞ்சமே இல்லை என்றளவிற்கு அனைத்துத் துறைச் சார்ந்த ஆளுமைகள் இங்கே முழுமையாக உள்ளனர்.

ஹிஜ்ரி **6** ஆம் நூற்றாண்டிலிருந்தே இந்தியாவில் பலம் மிகுந்த ஓர் இஸ்லாமியப் பேரரசு நிறுவப்பட்டுவிட்டது. அப்போதிருந்தே பல்துறைகளில் மிகச் சிறந்து விளங்க கூடிய ஜாம்பவான்கள், பல்வேறு கலைகளின் அரசர் களாக விளங்கக்கூடிய அறிஞர்கள், இந்த திருநாட்டின் நிழலில் இளைப்பாறத் துவங்கி விட்டனர்.

இஸ்லாமிய உலகின் கிழக்குப் பகுதியில் தாத்தாரியர்கள் போர்தொடுத்து மிகப்பெரிய

தவித்தார்கள். இந்த தாத்தாரியர்களின் கொடுமை களிலிருந்தும், துன்புறுத்தல்களிலிருந்தும் தப்பித் துக்கொள்ள ஏதாவது ஒதுங்குமிடம் கிடைக்காதா என்று அலைந்து திரிந்து கொண்டிருந்தார்கள்.

துருக்கி பாரம்பரியத்தைக் கொண்டு கிழக்கில் இந்தியாவை ஆண்டுக் கொண்டிருந்த பலம் வாய்ந்த மன்னர்கள் மட்டுமே தாத்தாரியர்களுக் கும், மங்கோலியர்களுக்கும் சிம்ம சொப்பனமாக விளங்கினார்கள். அவர்களது ஒவ்வொரு தாக்குதல்களுக்கும் இந்திய மன்னர்கள் தக்க பதிலடி கொடுத்து கொண்டேயிருந்தனர். இதன் காரணமாக கல்வியாலும், ஒழுக்கத்தாலும் மேம்பட்ட பாரம்பரிய மிக்க உயர்ந்த அந்தஸ் துடைய பல்வேறு குடும்பங்கள் ஈரானிலிருந்தும்,

துருக்கிஸ்தானிலிருந்தும் இந்தியாவிற்குள் தஞ்சம் புகுந்தனர்.

இவர்கள், அறிவை, ஆற்றலை, திறமைகளை, உயர்ந்த மாண்புகளை, மார்க்கத்தில் உயர்ந்த பொறுப்புகளை, தலைமுறை தலைமுறையாக கடத்தக் கூடிய பல்வேறு குடும்பங்களை உருவாக்கினார்கள்.

குறிப்பாக சம்சுத்தீன் இல்த்துத்மிசு, கியாசுதீன் பல்பன், அலாவுதீன் கில்ஜி இவர்களது ஆட்சி காலத்தில் இது இன்னும் பல்கிப் பெருகியது.

இது ஏன் ஏற்பட்டது இப்படியான இடப் பெயர்வு ஏற்பட்டதற்கான காரணம் என்ன என்பதை விளக்குகிறார் இந்தியாவின் பழைய வரலாற்று ஆசிரியர் லியாவுதீன் பிர்னி:

"நிச்சயமாக இந்தப் பாரம்பரியம் மிக்க குடும்பங்கள், உயர்ந்த அந்தஸ்துள்ள மனிதர்கள், தலைவர்கள், மிகச்சிறந்த அறிஞர்கள் அனைவருமே செங்கிஸ்கானது கொடுங்கோன்மையை சகித்துக் கொள்ள இயலாமல் தங்களது நகரங்களிலிருந்து இடம்பெயர்ந்தனர்.

இவர்களில் தலைவர்கள், தளபதிகள், மூத்த அறிஞர்கள், நீதிபதிகள், சங்கைக்குரிய சான்றோர்கள், பெரும் சீர்திருத்தவாதிகளும் அடங்குவர்.

இந்த சிறப்பு வாய்ந்த குடும்பங்களிலிருந்தும் இவர்கள் மூலம் இந்தியாவிலிருந்து இஸ்லாத்தை ஏற்ற பல குடும்பங்களிலிருந்தும்,

கல்வியிலும், மார்க்கத்திலும் நிர்வாகத்திலும், அரசியலிலும் சிறந்து விளங்கக் கூடிய பல ஆளுமைகள் தோன்றினர்.

ஒட்டுமொத்த இஸ்லாமிய உலகிலும் இவர்களில் சிலருக்கு ஈடான ஆளுமைகள் கிடைக்கப் பெறவது மிகவும் குறைவு தான்.

இதனால் இந்திய இஸ்லாமிய சமுகத்தில் மிகச் சிறந்த பல்வேறு மன்னர்கள், தலைவர்கள், அமைச்சர்கள், தளபதிகள், மார்க்க அறிஞர்கள், எழுத்தாளர்கள் தோன்றினார்கள். இவர்களினால் இஸ்லாமிய வரலாறே அழகிய பொலிவு பெற்றது.

இந்தப் பட்டியலில் உள்ள பல நபர்கள் தங்களிடமுள்ள சில திறன்வாய்ந்த குணங்களால் தனிச் சிகரங்களாக விளங்கினார்கள். அவற்றில் அவர்களுக்கு நிகர் அவர்களே.

மிகச்சிறந்த அரச தந்திரியான ஷேர் ஷா சூரி (ஹி-952) அவர்களது வரலாற்றை படிக்கும்



ஒருவர் நாட்டை நிர்வகிக்கும் அவரது மிகச்சிறந்த திறமை, அதனை வளர்ச்சி அடைய செய்யும் ஆற்றல், புதுவித நயத்தோடு பிரம்மாண்ட கட்டிடங்களையும் நிர்மாணிக்கும் திறமை, அவரது நீதமான சட்டதிட்டங்கள், அவர் அறிமுகப்படுத்திய நுட்பமான சட்டங்கள், மிகப்பெரிய அளவில் உற்பத்தி துறையை வளர்ச்சியடைச் செய்த இவரது திறமை என இவரது அனைத்து சாதனைகளையும் அறிந்து கொள்வார். (இது குறித்து சில தகவல்களை முன்னரே நாம் கூறி விட்டோம்).

இன்னும் அவரது வரலாற்றை வாசிக்க கூடியவர் சக்கரவர்த்தி ஷெர்ஷா சூரி இவை அனைத்தையும் 5 ஆண்டுகளில் செய்து முடித்தார் என்பதனையும் அறிந்து கொள்வார். இதுவே சக்கரவர்த்தி மொத்தமாக ஆண்ட வருடத்தின் கால அளவு. இந்த சொற்ப காலத்தில் இவர் செய்த சில சீரமைப்பு பணிகள் ஒரு பிரம்மாண்ட அரசு பல வருடங்கள் எடுத்துக் கொண்டாலும் செய்ய இயலாத ஒன்று.

பல்வேறு கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்து நாட்டை முன்னேறச் செய்வதற்கு பல வசதி வாய்ப்புகளும், நவீன உபகரணங்களும் இருந்தும்கூட சக்கரவர்த்தி ஷெர்ஷா அவர்கள்

சாதித்தவற்றில் சிலவற்றை ஆங்கிலேயர்களினால் கூட சாதிக்க இயலவில்லை என்பதே நிதர்சனம்.

இதுவே இந்த மகா சக்கரவர்த்தியின் உயர்ந்த மாண்புகளை எடுத்தியம்புகிறது. இவரது அரசத் தந்திரத்தை ஒப்புக்கொள்வதற்கும், இவரது காலத்தில் இவர் ஒரு தனிப் பெரும் ஆளுமை என்று முழுமையாக ஏற்றுக்கொள்வதற்கும் இதுவே போதுமானது. உலகத்தின் மிகச்சிறந்த ஆளுமைகளின் வரிசையில் இடம் பெறுவதற்கு ஷெர்ஷா சூரி அவர்களுக்கு முழுத் தகுதியும் உள்ளது.

அடுத்ததாக ஆலம்கீர் சுல்தான் அவுரங்கசீப் (ரஹ்) (ஹி1118) அவர்களது வரலாற்றை படிக்கும் ஒருவர்,சிறந்த அறிவும் அதனை நடைமுறைப் படுத்தும் குணமும் ஒருசேர சுல்தான் அவர் களிடம் இடம்பெற்றிருந்தது என்பதனை அறிந்து கொள்வார். இன்னும் அவரது வரலாறு முழுக்க முழுக்க மிகப்பெரிய சாதனைகளால் நிரம்பி உள்ளது என்றும் புரிந்து கொள்வார். அவரது ஐம்பது வருட ஆட்சி காலத்தில் ஒருநாள் கூட இடைவிடாமல் தொடர்ந்து போர்களில் எவ்வாறு பங்கேற்றார் என்பதையும் இன்னும் அவரது மாபெரும் வெற்றிகள்,அற்புதமான சீர்திருத்தப் பணிகள், உலகப்பற்றின்மை, சிரமங்களை சகித்துக் கொள்ளும் பண்பு, நிலைகுலையாமை, அவர் கொண்டிருந்த திடமான உறுதி, வயதான காலத் திலும் போரில் பங்கேற்ற தீரம் என அத்தனை யையும் அறிந்து கொள்வார்.

அவரது நேர நிர்வாகத்தையும் அறிந்து கொள்வார். இவரது காலத்திலேயே மிகப் பிரம்மாண்ட அரசை மிகுந்த மதி நுட்பத்தோடு ஆள வேண்டிய சூழ்நிலையிருந்தும் ஃபர்ளு மற்றும் சுன்னத்துகளை எவ்வளவு பேணுதலோடு பின்பற்றினார் என்பதையும் இபாதத்துகளில் மும்முரமாக ஈடுபட்டதையும், புத்தக வாசிப்பில் எவ்வளவு ஆர்வமாக இருந்தார் என்பதையும் அறிவார்.

இவரது உயர்ந்த லட்சியம், நாட்டை நிர்வகிக்கும் தனித்திறமை, இவற்றையெல்லாம் அறியும் ஒருவர் உலக அரசர்களில் இவருக்கு நிகர் இவரே என்பதை முழுமனதோடு ஒப்புக் கொள்வார். இரும்பிலிருந்து படைக்கப்பட்ட மனிதர் போல எதற்கும் அஞ்சாத நெஞ்சம் படைத்தவர். எல்லா காலங்களிலும் எல்லா தலைமுறைகளிலும் உலக ஆளுமைகளில் இவர் ஓர் அரிதான ஆளுமை என்பதனை ஒப்புக் கொள்வார்.

இந்த வரிசையில் அடுத்ததாக மிகச்சிறந்த மன்னரும் நீதியரசரும், ஹதீஸ்கலை வல்லுநரும், சட்டக்கலை வல்லுநருமான சுல்தான் முஸஃபர் ஹலீம் குஜராத்தி (ரஹ்) அவர்கள். இவரது இஹ்லாஸ், ஈமான், இறையச்சம், உறுதியோடு அமல் செய்யும் பண்பு,நேர்மை, பிறருக்கு உதவி செய்யும் மனப்பான்மை, தீனின் மீது தீராத பற்று, ஆழமான அறிவு இவற்றையெல்லாம் குறித்து பல அரிதான தகவல்களை வரலாறு பதிவுச் செய்திருக்கிறது. இதுபோன்ற தகவல்கள் உலகப் பற்றற்ற ஞானிகள், பெரும் பெரும் சீர்திருத்தவாதிகளின்வரலாற்றிலேயே கிடைக்கப் பெறுவது அரிது என்றிருக்கும் நிலையில் மன்னர் களின் வாழ்வில் கிடைக்கப்பெறுவது இதனைக் காட்டிலும் அரிதே.

குஜராத்தின் வரலாற்று ஆய்வாளர் ஒரு அற்புதமான சம்பவத்தை விளக்குகிறார்:

ஒரு நூற்றாண்டாகவே மால்வாவின் மன்னர்கள், தளபதிகள் குஜராத்தை தங்களது படைகளினால் கைப்பற்ற முயற்சி செய்து வந்தனர். ஆனால் இவர்களது அனைத்து முயற்சி களும் தோல்வியிலேயே நிறைவடைந்தது.

சுல்தான் முஹம்மத் ஷா ஸானி அவர்களின் நிர்வாக திறமையின்மையால் அவரது அமைச் சரான மண்ட்லி ராயிடம் ஆட்சி அதிகாரம் கை மாறியது. இவன் ஆட்சியைப் பிடித்ததும் சுல்தான் மஹ்மூதை ஆட்சி அதிகாரத்தை விட்டு நீக்கினான். இதற்கு பிறகு எல்லா இஸ்லாமிய அடையாளங்களையும் அழிக்க துவங்கினான். இஸ்லாத்தில் இல்லாத பல நூதனமான சடங்கு சம்பிரதாயங்களை நடைமுறைப்படுத்தினான்.

இவனது இந்த செயல்கள் குஜராத்தின் சுல்தான் முஹம்மத் ஹலீமை கொதித்த தெழச் செய்தது. தனது மிகப்பெரிய படையை மால்வாவை நோக்கி செலுத்தினார். நெடுந்தூர பயணத்திற்குப் பிறகு மால்வாவின் நுழைவு வாயிலை அடைந்தார். நகரம் முழுக்க முற்றுகை யிட்டார்.

இதனால் பயந்துபோன மண்ட்லி ராய் தன்னால் தனியாக இந்த மாபெரும் படையை



எதிர் கொள்ள இயலாமல் போகலாம் என எண்ணி தனக்கு உதவி செய்யும் பொருட்டு மன்னர் ராணா சங்கா விற்கு பல விலைமதிப்புள்ள பரிசுகளை அனுப்பி வைத்தார்.

ஆனால் ராணா சங்கா சரங்க்பூரிற்கு வந்த டையும் முன்னரே சுல்தான் முஸஃப்ர் ஹலீம், அவரது படையை தாக்குவதற்காக தனது படையை அனுப்பி வைத்தார்.

ராணா சங்காவினால் இந்த படையை எதிர் கொள்ள இயலவில்லை. வெற்றிக் காற்று சுல்தான் முஸஃபர் ஹலீமின் பக்கம் வீசியது. மண்ட்லி ராயிற்கு உதவச் செல்வதற்கு முன்னரே அவனது பகுதிக்கு அருகில் இருக்கும் ராணா சங்காவின் கோட்டையை கைப்பற்றினார் சுல்தான் முஸஃபர் ஹலீம்.

இதில் ஆச்சரியம் என்னவென்றால் சுல்தான் முஸஃபர் ஹலீம் கோட்டைக்குள் நுழைந்ததும் படைத் தளபதிகள், படை வீரர்கள் அனைவரும் மால்வாவின் மன்னர்கள் விட்டுச்சென்ற வைர வைடூரியங்கள், கஜானாக்கள் விலை மதிப்புள்ள பல செல்வங்களை சுல்தானிடம் எடுத்துக் காண்பித்தனர்.

இப்படிப்பட்ட செழிப்பான, ஆடம்பர வாழ்க்கையை மன்னர்கள் வாழ்ந்திருப்பதை அறிந்த படைவீரர்கள் சுல்தானிடம் கூறினார்கள்:

"இந்த கோட்டையை கைப்பற்றுவதற்காக மட்டும் நமது படையிலிருந்து 2000 குதிரை வீரர்களை இழந்திருக்கிறோம்.

இவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்பட்ட பிறகு, நிர்வாக திறமையின்மையால் ஆட்சியை இழந்து, மண்ட்லி ராயிடம் ஆட்சியைப் பறிக்கொடுத்து, இப்படியான ஒருப் போர் ஏற்பட மூலக் காரணமான அந்த மன்னரிடம் இந்த நகரத்தை மீண்டும் ஒப்படைப்பது சரியான முடிவல்ல." என்று கூறினார்கள்.

இதனை செவியேற்ற சுல்தான் முஸஃபர் ஹலீம் சிறிது நேரம் யோசித்தப் பிறகு கோட்டையை விட்டு வெளியேறினார். தான் வெளியேறியதுடன் தனது படைவீரர்கள் யாரையும் கோட்டைக்குள் அனுமதிக்க வேண்டாம் என்று மன்னர் மஹ்மூத் ஷா விற்கு கட்டளையிட்டார்.

மன்னர் மஹ்மூத் ஷா சில நாட்கள் கோட்டையில் தங்கி இளைப்பாறிச் செல்லுங்கள் என்று சுல்தான் முஸஃபர் ஹலீமை வற்புறுத்தினார். ஆனால் சுல்தான் முஸஃபர் ஹலீம் மறுத்து விட்டார். கடைசியில் தான் இறைவனது பொருத்தத்தை பெறவே இந்த போரை மேற்கொண்டேன் என்று கூறி தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி, மேலும் கூறினார் :

"படை வீரர்களது பேச்சைக்கேட்டு இந்த கோட்டையின் மீது ஆசைப்பட்டு இங்கேயே நிரந்தரமாகத் தங்கி விடுவேனோ என்று எனக்கு பயமாக உள்ளது. இதன் மூலம் நான் செய்த நல்லறங்கள் அனைத்தும் ஒன்றுமில்லாமல் போய் விடுமோ என்று அச்சப்படுகிறேன்."

நிச்சயமாக புகழப்படுபவர் என்ற பெயர் வைத்த மன்னர் மஹ்மூதிற்கு சுல்தான் முஸஃபர் ஹலீம் உபகாரம் செய்யவில்லை. மாறாக

புகழப்படும் உள்ளத்தைக் கொண்ட சுல்தான் முஸஃபர் ஹலீம் தனக்கு தானே செய்து கொண்ட உபகாரமிது.

ஏனென்றால் இழந்த ஒரு முஸ்லிம் மன்னரின் ஆட்சியை அக்கிரமக்கார அமைச்சரிடமிருந்து எந்த பலனையும் எதிர்ப்பார்க்காமல் மீட்டுக் கொடுத்த மிகப்பெரிய சிறப்பை அடையும் நற்பேறு இவருக்கே கிட்டியது.

இதுபோன்ற மகான்களே தனது வாழ்க்கையின் கடைசி தருவாயில் இறைவன் தனக்கு செய்த அருள் வளங்களை இவ்வாறு எடுத்துக் கூற முடியும்:

“எனது உஸ்தாத் மஜ்துத் தீன் அவர்களிடமிருந்தும் அவரது ஆசிரியர்களிடமிருந்தும் நான் அறிவித்த எல்லா ஹதீஸ்களையும் நான் நன்கு மனனமிட்டுள்ளேன். அந்த ஹதீஸ்களின் அறிவிப்பாளர்கள், அவர்களது பரம்பரை வரிசைகள், அவர்களது மனன ஆற்றல், அவர்களது ஆரம்ப வாழ்விலிருந்து இறுதி வாழ்வு வரை என அனைத்தையும் நான் மிகத் தெளிவாக மனனம் செய்துள்ளேன்.”

திருக்குர்ஆன் வசனங்கள் அனைத்தையும் நான் மனனம் செய்யவும் அதன் விளக்கங்களை புரிந்துக் கொள்ளவும் அது இறக்கப்பட்ட பின்னணியை அறிந்துக் கொள்ளவும் அதனை வாசிக்கும் ஒழுங்கு முறையை தெரிந்து கொள்ளவும் இறைவன் எனக்கு அருள்புரிந்தான்.

யாருக்கு இறைவன் நலவை நாடுகிறானோ அவனுக்கு மார்க்கத்தில் தெளிவை கொடுக்கிறான் என்ற ஹதீஸின் மூலம் என்ன விளங்குகிறதோ அது தான் ஃபிக்ஹ் என்று நான் நினைக்கிறேன்.

வாழ்வின் கடைசி தருணங்களில் இருக்கிறேன். எனவே இந்த தருணங்களில் சூஃபிகளான இறை ஞானிகள் எதில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்களோ அதிலே என்னையும் ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறேன்.

ஒரு சமூகத்திற்கு எவர் ஒப்பாக நடப்பாரோ அவர் அவர்களைச் சார்ந்தவரே என்ற ஹதீஸிற்கு ஏற்ப எம்முடைய குருநாதர்களான ஷைகுமார்கள் வழிகாட்டிய தஜ்கியத்துந் நஃப்ஸில் (உளத் தூய்மை) ஈடுப்பட்டுக்கொண்டிருக்கிறேன்.

எப்படியாவது எதாவது முயற்சி செய்தாவது மேன்மக்களின் பரகத்களை அடைய விரும்புகிறேன்.

தஃப்ஸீர் பகவீயை வாசிக்க துவங்கியுள்ளேன் அல்லாஹ் நாடினால் சுவர்க்கத்தில் அதனை நிறைவுச் செய்வேன் என்று நினைக்கிறேன்.

யூசுஃப் (அலை) அவர்கள் கேட்ட துஆ வை ஓதி இவ்வுலகிலிருந்து இந்த மகான் விடைப் பெற்றார்:

“என் இறைவனே! நிச்சயமாக நீ எனக்கு அரசாட்சியைத் தந்து, கனவுகளின் விளக்கங்களையும் எனக்கு கற்றுத்தந்தாய்; வானங்களையும் பூமியையும் படைத்தவனே! இம்மையிலும் மறுமையிலும் நீயே என் பாதுகாவலன்; முஸ்லிமாக (உனக்கு முற்றிலும் வழிபட்டவனாக இருக்கும் நிலையில்) என்னை நீ கைப்பற்றிக் கொள்வாயாக! இன்னும் நல்லடியார் கூட்டத்தில் என்னைச் சேர்த்திடுவாயாக!”

தொடரும்.........





# இந்தியாவை மீட்க அணிதிரண்ட ஊடகங்கள்

**இப்படி மையப் பொருள் கொண்ட அறிக்கை ஒன்றை நம் நாட்டிலுள்ள எல்லாப் பத்திரிகையாளர் குழுமங்களும் ஒன்றாய் இணைந்து வெளியிட்டுள்ளன.**

இதைத்தான், என்.ராம் அவர்கள், காயிதே மில்லத் அவர்களின் பெயரால் வழங்கப்பெற்ற விருதின்போது குறிப்பிட்டார்கள். அதனை அப்படியே இங்கே தருகின்றோம்.

*ஊதி வளர்க்கப்படும், வெறுப்பின் உச்சத்தில் மௌனம் காப்பது நீதியல்ல.*

*பத்திரிகையாளர்கள், ஊடகவியலாளர்கள், ஆகிய நாங்கள் இந்தக் கோரிக்கையை எல்லா இந்திய நிறுவனங்களிடமும் (Indian Institutions" வைக்கின்றோம்.*

*நீங்கள் தயைகூர்ந்து விழித்துக் கொள்ளுங்கள். உங்கள் மீது அரசியல் அமைப்புச் சட்டம் விதித்துள்ள கடமைகளை நிறைவாக நிறைவேற்றுங்கள். குறிப்பாக இந்தியாவில் வாழும், மத சிறுபான்மையினர் மீது, குறிப்பாக முஸ்லிம்கள் மீது வெறுப்பை வளர்த்து கொலை பாதகங்களை நிறைவேற்றும் இந்நாளில் உங்கள் கடமையை நிறைவேற்றுவது காலத்தின் கட்டாயம்.*

*வெறுப்பை தண்டோரா போட்டு வளர்க்கும் இன்றைய இந்த நிலை, கடந்த சில வருடங்களாகவும் மாதங்களாகவும் அதிவேகத்தில் வளர்ந்து வருகின்றது. அதேபோல்தான் (மத சிறுபான்மையினருக்கு எதிரான) வன்முறை தாக்குதல்களும். அதற்கு வக்காலத்து வாங்கும் பிரச்சாரங்களும். சில நேரங்களில் இந்த பிரச்சாரங்கள், தேர்தல் நேரங்களில் நடக்கின்றன. சில நேரங்களில், அரசியல் கூட்டங்கள், சில நேரங்களில் அது "தரம் சன்சாந்த்" அல்லது சில நேரங்களில் ஆடை அணிவதாக இருக்கலாம். அல்லது ஓர் திரைப்படத்தை வெளியிடுவதாக இருக்கலாம்.*

இப்படி பல்வேறு நேரங்களிலும் செய்யப்படும் வெறுப்புப் பிரச்சாரங்கள், விடுக்கப்படும் வன்முறைக்கான அறைகூவல்கள். ஊடகங்களில் பரவலாகப் பிரச்சாரம் செய்யப்படுகின்றன. ஆனால், இந்த நாட்டினுடைய பெரிய தலைவர்கள், இதுகுறித்து மௌனம் சாதிக்கின்றார்கள். இந்த மௌனம் திட்டமிட்டுக் காக்கப்படுவதாகும். பல மாதங்களுக்கு முன்னால் நாம் ஒரு சூழலைச் சந்தித்தோம். அது கொரோனாவைக்

காரணங்காட்டி முஸ்லிம்கள் மீது வெறுப்பை வளர்த்தார்கள். சில மாநிலங்களில் சட்ட மன்ற உறுப்பினர்கள் அவர்களை சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் புறக்கணிக்க வேண்டும் எனப் பேசினார்கள். மக்கள் கபளீகரப்படுத்தும் அளவில் கொரோனா, ஜிஹாத் என்ற சொற்களை ஊடகங்கள் ஊதி பெரிது படுத்தின.

ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தை, சமுதாயப் புறக்கணிப்புச் செய்திட வேண்டும். பொருளாதாரப் புறக்கணிப்புகளுக்கு உள்ளாக்கிட வேண்டும் என்பதெல்லாம் கருத்துச் சுதந்திரத்தின் கீழ் அல்லது பேச்சுச் சுதந்திரத்தின் கீழ் நிச்சயமாக வராது. அதனால் இந்த வெறுப்புப் பேச்சுகளுக்கு அரசியல் நிர்ணயச் சட்டத்தில் பாதுகாப்பு இல்லை. ஆனாலும் ஒன்றிய அரசின் அதிகாரிகளோ, மாநில அரசின் அதிகாரிகளோ இந்த வெறுப்பை (விஷத்தைக்) கக்கிசயவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இவர்கள் தங்கள் மீது அரசியல் அமைப்பு சுமத்திய கடமைகளை நிறைவேற்றிடவில்லை. தங்கள் கடமை நிறைவேற்றிடும் மனநிலையில் அவர்கள் இல்லை. அவர்கள் அதை விரும்பவில்லை.

சிறுபான்மையினர் மீது வெறுப்பை வளர்த்து வன்முறையை ஏவிவிடும் இந்த நபர்கள் மீது வழக்குத் தொடுப்பதே இல்லை. அப்படியே வழக்குத் தொடுத்தாலும் சம்மந்தமில்லாத குற்றப் பிரிவுகளின் கீழ்தான் வழக்கை தொடுக்கின்றார்கள். அதுவும் உப்புச் சப்பற்ற பிரிவுகளின் கீழ்தான், வழக்குகளைப் பதிவு செய்கின்றார்கள். அதிகாரிகளின் போக்கு எப்படி இருக்கின்றது என்றால் வெறுப்பை விதைத்து, வன்முறையை ஏவும் இந்தச் செயல்களை செய்பவர்கள், சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் என அதிகாரிகள் நினைக்கிறார்கள். இப்படி ஒருமனநிலை அவர்களிடம் வளர்ந்துள்ளது.

இந்த நிலையில் குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி இன்னுமுள்ள உச்ச நீதிமன்ற நீதிபதிகள் அதேபோல் உயர்நீதிமன்ற நீதிபதிகள், இந்தியாவின் தேர்தல் ஆணையம் ; இன்னும் அரசியல் நிர்ணயச் சட்டம் உருவாக்கிய பல்வேறு நிறுவனங்கள் அனைத்தும் தோற்றுப் போய்விட்டன. இவற்றில் எதுவும் பெரியதாக ஒரு பேரழிவு நடப்பதற்கு முன் தடுக்கும் என்ற நம்பிக்கை யாருக்கும் இல்லை. நாம் கற்பனையிலும் நினைத்துப் பார்க்காத ஒரு பெரும் இனப்படுகொலை இங்கே நடக்கலாம்.

ஊடகங்களில் பெரும்பாலானவை இந்த வெறுப்புப் பேச்சுகளைப் பரப்பிடும் வாகனங்களாகப் பயன்படுகின்றன. இதனால் பிரஸ் கவுன்சில் ஆஃப் இந்தியா என்ற பத்திரிகையாளர்களின் குழுமம் (The News Broadcasters & Digital Association) செய்தி ஒலி-ஒளி ஊடகங்கள் மற்றும் எண்ணிலடங்கா அமைப்புகள், உழைக்கும் பத்திரிகையாளர்களின் கூட்டமைப்புகள். Union of Working Journalists, அதேபோல், பத்திரிகைகள் மற்றும் இதர ஊடகங்கள் இவற்றின் குழுமங்கள் அனைவரும் இந்த விவகாரத்தில் அவசர அவசியமாக முழுமையாகத் தலையிட வேண்டும்.

2021 டிசம்பர் முதல் இடைவிடாமல் ஒரு கூப்பாடு முஸ்லிம்களை ஒட்டுமொத்தமாக அழித்தாக வேண்டும் என்பதாகப் போடப்பட்டு வருகின்றனது. இதை ஹரித்வாரில் 2021 டிசம்பரில் நடந்த “தரம் சந்சாத்” என்ற பெயரில் கூடிய கும்பல் ஒன்று தொடங்கி வைத்தது.

2021-2022இல் சமூக தளத்தில் முஸ்லிம் பெண்கள் தொடர்ந்து தாக்கப்பட்டார்கள். முஸ்லிம் பெண்கள் தொடர்ந்து தாக்கப்பட்




டார்கள். அதில் மிகவும் கேவலமான புல்லிபாய் செயலி (Bulli Bai App)-யும் அடங்கும்.

கர்நாடகா மாநிலத்தில் பரபரப்பைக் கிளப்பிய, மிகவும் அசிங்கமான ஹிஜாப் - விவகாரம். முஸ்லிம் பெண்களை நாட்டின் இதரப் பகுதிகளில் தாக்குவதற்கும் கொடுமைப்




படுத்துவதற்கும் அவமானப்படுத்துவதற்கும் வழிவகுத்தது.

2022 பிப்ரவரித் திங்களில் 5 மாநிலங் களுக்கான சட்ட மன்றத் தேர்தல்கள் நடந்தன. இந்தத் தேர்தல் பிரச்சாரங்களின்போது, நட்சத் திரப் பேச்சாளர்கள், முஸ்லிம்களுக்கும், இதர சிறுபான்மையினருக்கும் எதிராக தொடர்ந்து வெறுப்பை விதைத்துக் கொண்டே இருந்தார்கள். இந்த பேச்சாளர்கள் வெட்கமின்றி மதத்தின் பெயரால் மக்களிடம் வாக்குக் கேட்டார்கள். எந்தக் கூச்சமுமமின்றி தேர்தல் விதிகள் அத்தனையும் மீறினார்கள். ஆனால் இந்தியாவின் தேர்தல் ஆணையம் தனது கடமையைச் செய் யாமல் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது. அது அரசியல் அதிகாரங்களுக்கு அப்பாற்பட்ட, சுதந்திரமான நிறுவனம் என்பதை நிரூபிக்கத் தவறிவிட்டது.

அண்மைக் காலத்தில் “கஷ்மீர் கோப்புகள்” என்ற திரைப்படம் வழியாக முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பை வளர்க்க முயற்சிகளைச் செய்தார்கள். இதில் கஷ்மீர் பண்டிட்களின் துயரங்களுக்கு முஸ்லிம்களே காரணம் எனக் காட்டி, மக்களின் கோபங்களை முஸ்லிம்கள்மேல் திருப்பிவிட்டார்கள். இதனைப் பயன்படுத்தி திரை அரங்குகளின் உள்ளேயவும், வெளியேயும் முஸ்லிம்களின் மீது வெறுப்பை வளர்க்கவும், அவர்களைத் தாக்கவும் தூண்டிவிடப்பட்டன. அந்தப் படத்தை விமர்சனம் செய்ய எழுந்த குரல்களையெல்லாம் நசுக்க அதிகாரத்தின் உயர் மட்டங்களில் இருந்தவர்கள் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டார்கள். அரசியல் நிர்ணயச் சட்டம் உருவாக்கிய அமைப்புகள் மட்டுமே இந்த மொத்தச் சூழலையும் கட்டுப் படுத்தி இருக்க முடியும்.

இன்றைய இந்தியா மிகவும் ஆபத்தான ஓரிடத்தில் நிற்கின்றது. நம்முடைய மதச்சார்பற்ற விழுமியங்கள் குடியாட்சித் தத்துவங்கள், அதனை அடிப்படையாகக் கொண்ட அரசியல் அமைப்புச் சட்டங்கள் இவற்றையெல்லாம் மாச்சாரியங் களைக் கொண்டவர்கள். சின்னா பின்னாப் படுத்தப்படுகின்றன. மக்கள் பாரபட்சமாக நடத்தப்படுகின்றார்கள். வன்முறை வெறியாட் டங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள்.

அரசியல் அமைப்புச் சட்டங்களின் பெயரால் உறுதிமொழி எடுத்தவர்கள். அதற்கு நேர்மாறாக செயல்படுகிறார்கள். தங்கள் கடமைகளை நிறைவேற்றுவதற்கு விருப்பமற்றவர்களாக வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதனால், நமது அரசியல் சாசனம் உருவாக்கிய அமைப்புகள், இந்தியாவின் குடியரசு தலைவர், உச்ச நீதிமன்றம் - பொதுவாக நீதித்துறை, தேர்தல் ஆணையம் போன்றவை தங்கள் கடமையை தயங்காமல் நிறைவேற்றிட வேண்டும். அதேபோல் ஊடகங்கள் தங்கள் பொறுப்பை நிறைவேற்றிட வேண்டும். பொறுப்போடு நடந்துகொள்ள வேண்டும்.

வளர்ந்து வரும் இந்தக் கோரமான சூழலுக்கு எதிரராக, தாங்கள் நிறைவேற்றிட வேண்டிய பொறுப்புகளை உணர்ந்து நடந்திட வேண்டும்.

அதிகாரத்திற்கெதிராக பேசுவது என்பதுதான் நமது சுதந்திரத்தையும், தனித்தன்மைகளையும் நிலை நிறுத்திட வேண்டும்.

இவண்,

1) திரு. என்,ராம்,
- முன்னாள் தலைமை ஆசிரியர், திஹிந்து, இந்து வெளியீட்டுக் குழுமத்தின் இயக்குநர்.

2) மிரினால் பாண்டே
- மூத்த பத்திரிகையாளர்/எழுத்தாளர்

3). R. இராஜகோபால்,
- ஆசிரியர், தி டெலகிராம்ப்

4) வினோத்ஜோஷ்
- ஆசிரியர், கேரவான் Executive Editor

5) ஆர்.விஜய் ஷங்கர்
- ஆசிரியர், பிராண்ட் லைன் (Front Line)

6) Q.W.நக்வி - தலைவர் / தலைமை இயக்குநர் சந்தியா ஹிந்து

7) அஷ்தோஷ் - ஆசிரியர் / இயக்குநர், சந்தியா ஹிந்து

8) சித்தார்த் வரதராஜன்
- தாளாளர் / ஆசிரியர், தி வையர்

9) சித்தார்த் பாசியா
- தாளாளர் / ஆசிரியர், தி வையர்

10) எம்.கே.வேணு
- தாளாளர் / ஆசிரியர், தி வையர்

11) அஜீஸ் தன்கார்வி
- வெளியீட்டாளர், குஜராத் இந்து

12) இரவீந்திர அம்பேத்கர்
- இயக்குநர், மாக்ஸ் மராட்டியம்.

13) ஆர்.கே.இராதாகிருஷ்ணன்
- மூத்த பத்திரிகையாளர்

14) தீபா திரிவேதி
- தாளாளர் / ஆசிரியர் Vibes of India, Gujarath

15) ஹஸன் / கமல் - மூத்த பத்திரிகையாளர், எழுத்தாளர், இன்குலாப்

16) டீஸ்டா செட்டல்வாட்
- இணை ஆசிரியர், சப்ரவ் இந்தியா

17) ஜாவித்
- இணை ஆசிரியர், சப்ரவ் இந்தியா

18) பிரதீப் பஞ்சோபான்
- ஆசிரியர். இம்பால் கலைக் களஞ்சியம், கலை & அரசியல்

19) அனுராதா பாஷின்
- ஆசிரியர், கஷ்மீர் டைம்ஸ்

20) கல்பனா ஷர்மா - பத்திரிகையாளர்

21) அனின்டோ சக்ரவர்த்தி - பத்திரிகையாளர்

22) சபா நக்வி - பத்திரிகையாளர்

23) தானியா இராஜேந்திரன்
- முதன்மை ஆசிரியர், தி நியூஸ் மினிட்

24) ஷாபிர் அஹ்மத் - சீனியர் செய்தியாளர், ஆசிரியர், நியூஸ் மினிட்

25) அனிர்பான்ராய்
- ஆசிரியர், 21 கிழக்கு இப்போது

26) தீரன் A. சடோக்பான் - முதன்மை ஆசிரியர், பிராண்டிலர் மணிப்பூர்.

27) டோன்கம் ரினா - பத்திரிகையாளர், அருணாச்சலப் பிரதேசம்

28) மேனேலிசா சாங்கிஜா
- ஆசிரியர் நாகலாந்த் பக்கம்

அன்பார்ந்த வாசர்களே!

இதுபோன்று சிந்திப்பவர்கள் - பாசிசத்தை எதிர்ப்பவர்கள் உலகெங்குமிருக்கின்றார்கள். இவர்களின் முயற்சிகள் எந்த அளவுக்கு வெற்றி களைத் தரும் என்பதை கணக்குப் பார்ப்பது அழகல்ல. ஆனால்சமகலாஇந்தியாவில்அதாவது இந்தியாவின் இருண்ட காலத்தில் அநியாயக் காரர்கள் இந்தியாவை அதலபாதளத்தில் தள்ளிக் கொண்டிருந்தபோது,

அரசியல் நிர்ணயச் சட்டம் உருவாக்கிய அனைத்து அமைப்புகளும் துணைபோயின. அநியாயக்காரர்களுக்கு என்பதன் அப்பட்ட மான சாட்சியம். மேலே உள்ளக கோரிக்கை.

1) உச்ச நீதிமன்றம் & இதர நீதிமன்றங்கள், பொதுவாக நீதித்துறை

2) தேர்தல் ஆணையம்

3) ஊடகங்கள்

4) அதிகார வர்க்கம்

இதனை இன்னொரு கோணத்திலும் பார்த் தால் இந்தியா அதலபாதாளத்தில் வீழ்ந்தபோது அதனைக் காப்பாற்றிட முனைந்தோரின் பட்டியலில், முஸ்லிம்களோடு, மேலே நாம் அட்டவணை இட்ட அனைவரும் அவசியம் இடம் பெறுவார்கள்.

இனி நாளைய வரலாற்றில் இந்தியாவின் இந்த அழிவுகாலம் பற்றி பல்வேறு வரலாறு களை எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு எழுதுவார்கள். அப்போது முஸ்லிம்களும் புட்டுப் புட்டு வைப்பார்கள். முஸ்லிம்களின் கூற்றை சிலர் புறம்தள்ள அல்லது மிகைப்படுத்தப்பட்டவை என பழிசொல்ல தலைப்படுவார்கள். அப்போது இவையெல்லாம் அப்பட்டமான சாட்சியங் களாக நிச்சயமாக அமையும். பாசிசம் வீழும்!! வீழ்ந்தே தீரும்!! இன்ஷா அல்லாஹ்.

அதுவரை நமது எழுத்து பெரும்போர் தொடரும்.

அல்லாஹ்வே பெரியவன்,

- MGM

# அல்லாஹ்விற்கு பிடித்த இடம்

பாசிஸ்ட்டுகள் இந்தியாவில் இஸ்லாத்தின் அத்தாட்சிகளை ஒழிப்பதற்காக பல்வேறு முயற்சிகளை செய்து வருகின்றார்கள். அதில் ஒரு பகுதியாக இந்திய முஸ்லிம்களின் தியாக வரலாறுகளை மறைப்பது அழிப்பது திரித்து எழுதுவது போன்ற காரியங்களை செய்து வருகிறார்கள்.

வருங்கால சந்ததிகள் முஸ்லிம்கள் தவறாக புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, இத்தோடு விடாமல் முஸ்லிம்களின் அடையாளச் சின்னங்கள். அது ஒரு வீதியின் பெயராக இருந்தாலும் கூட மாற்றி விடுகிறார்கள். எதிர்கால சந்ததிகள் முஸ்லிம்ளின் வரலாறுகள் பற்றி தெரிந்துகொள்ளக் கூடாது என்பதற்காக முஸ்லிம்களின் அடையாளச் சின்னங்களில் முக்கியமானது பள்ளிவாசல். இவைகளை அகற்றி ஷிர்க்கின் கோட்டைகளாக மாற்றுவதற்கு மிக நீண்ட காலமாக செயல்பட்டு வருகிறார்கள்.

இதில் ஒரு வெற்றியாக அவர்கள் பாபர் மஸ்ஜிதை கைப்பற்றியுள்ளார்கள். பாபர் மஸ்ஜிதை போன்றே இந்தியாவில் உள்ள மஸ்ஜித்களை மாற்ற வேண்டும் என முயற்சிக்கிறார்கள். சமீபமாக பள்ளிவாசல்களில் சிலைகள் இருப்பதாக அவதூறுகளை பரப்பி வருகிறார்கள். பள்ளிவாசல்களை கோயில்களாக மாற்ற வேண்டும் என அறைகூல் விடுக்கிறார்கள்.

ஒருமுறை முஹம்மது நபி (ஸல்) அவர்களிடம் அல்லாஹ்விற்கு பிடித்த இடம் எது என்று வினவப்பட்டது. அதற்கு முஹம்மது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

அல்லாஹ்வை வணங்கக்கூடிய அவனுடைய இல்லமான பள்ளிவாசல் என்று கூறினார்கள். இறைவனுடைய இல்லத்தை இல்லாமல் ஆக்குவதற்கான வேலைகள் விரைவாக நடந்து கொண்டு இருக்கின்றது. இவைகளை இன்று நாம் தடுக்க முயற்சி எடுக்கவில்லை என்றால் ஒருநாள் வருமை அன்று நம்முடைய இல்லங்கள் தீக்கு இறையாக்கப்படும் நாம் நம்முடைய இல்லங்களில் இருந்து வெளியேற்றப்படுவோம். அப்போது நம்மால் எதுவும் செய்ய இயலாதவர்களாக ஆகிவிடுவோம். அல்லாஹ் நம்மை காப்பாற்றுவானாக.

முஸ்லிம்களே சிந்திப்பிர்களாக உலக அளவில் முஸ்லிம்களின் எண்ணிக்கையில் அதிக அளவு உள்ளவர்கள் இந்திய முஸ்லிம்கள். ஆனால், எண்ணிக்கையில் குறைவாக உள்ளவர்கள் பாலஸ்தீன முஸ்லிம்கள். அவர்கள் யூதர்களுக்கு எதிராக போராடி தங்கள் உயிர்களை தியாகம் செய்து இன்றளவும் பைத்துல் முகத்தஸை காத்து வருகிறார்கள். தொழுகையும் நடத்தி வருகிறார்கள்.

*1967* - ஆகஸ்ட் ஸலோமாகோரன் என்ற யூத மத குரு *20* யூத இராணுவ வீரர்களோடு பூஜை செய்ய அல் அக்ஸா மஸ்ஜிதுல் நுழைந்தார்கள். முஸ்லிம்கள் அதைத் தடுத்தார்கள்.

*1969* - மஸ்ஜிதுல் அக்ஸாவின் ஒரு பகுதியை யூதர்கள் எரித்தார்கள்.

*1979* அல்குத்ஸ் தினம் அறிவிக்கப்பட்டது


*1982* - பால் லெஸ்ரார் என்ற யூதன் மனித வெடிகுண்டாக உள்ளே நுழைந்தான். முஸ்லிம்கள் அவனைத் தடுத்தார்கள். மஸ்ஜிதை காப்பாற்றினார்கள். பலர் ஷஹீதானார்கள்.

*1983-46* - யூதர்கள் மனித வெடிகுண்டாக மஸ்ஜிதுல் நுழைய முயற்சி செய்தார்கள். முஸ்லிம்கள் தடுத்து அல்அக்ஸாவைக் காப்பாற்றினார்கள்.

*1984* - ஆக்ஸ்ட் *7*ல் *130* கிலோ எடை கொண்ட வெடிகுண்டு ஒன்று மஸ்ஜிதுல் அக்ஸாவின் கீழ் வைக்கப்பட்டது. முஸ்லிம்கள் அதை வெடிக்கும் முன் அகற்றினார்கள். *1984* டிசம்பரிலும் இதுவே நடந்தது.

*1986* - ஈகை பெருநாளின் போது யூதர்கள் உள்ளே நுழைந்தார்கள். தடுத்தார்கள் முஸ்லிம்கள். அதனால் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் ஷஹீதானார்கள்.

*1988* - OIC என்ற உலக முஸ்லிம் நாடுகளின்



கூட்டமைப்பு அல்குத்ஸ் தினத்தை உலகமய மாக்கியது.

*1990* - ஆகஸ்ட் 20ம் நாள் ஒரு யூதன் இரண்டு ஏவுகணைகளை பள்ளிவாசலை நோக்கி ஏவினான். பள்ளிவாசல் சிறிது சேதம் அடைந்தது.

*1990*-அக்டோபரில் சாலமோன் கோயிலுக்கு அடிக்கல் நாட்டிட என யூதர்கள் அக்ஸா பள்ளிவாசலுக்குள் நுழைந்தார்கள். தடுத்தார்கள் முஸ்லிம்கள் ஷஹீதானார்கள் பலர்.

*1991* - அகழ்வாராய்ச்சி என்ற பெயரில் பள்ளிவாசலை தோண்டி அஸ்திவாரத்தை பலவீனப்படுத்தினார்கள்.

*1992* - அமெரிக்காவில் வாழ்நத யூதர்கள் (1990ல் நாட்டிய) இந்த கல்லை பூஜை செய்ய உள்ளே புகுந்தார்கள் தடுத்தார்கள் முஸ்லிம்கள் ஷஹீதானார்கள் பலர்.

*2000* - யூத தீவிரவாதி ஏரியல் ஷரோன் ஆயிரக்கணக்கான யூதர்களோடு பள்ளிவாசலுக் குள்நுழைந்தான். முஸ்லிம்கள் தடுத்தார்கள். பலர் ஷஹீதானார்கள். அதுமுதல் ஒவ்வொரு ஜூலை 31ம் நாளும் யூதர்கள் சாலமோன் ஆலயத்தில் நினைவு நாள் என்று அல் அக்ஸா மஸ்ஜிதுக்குள் புகுந்து கபளீகரங்களை செய்கின்றார்கள். முஸ்லிம்கள் தடுக்கின்றார்கள்.

*2009* ஜூலை 31ம் நாளும் இதைப்போல் மஸ்ஜிதுல் அக்ஸாவில் புகுந்தார்கள். முஸ்லிம்கள் பலர் தங்கள் உயிரைத் தந்து தடுத்தார்கள்.

இந்த வருடம் 2022-இல் யூதர்கள் ஒவ்வொரு வருடமும் மே-15ஆம் நாளை ஜெருசலம் நாள் எனக் கொண்டாடி, அல்அக்ஸா மஸ்ஜித் வளாகத்தில் கெடுபிடிகளைக் கட்டவிழ்த்து வருகின்றார்கள். பல முஸ்லிம்களை ஷஹீதாக்கு கின்றார்கள்.

இந்த ரமழானில் ஏப்ரல் மாதம் 14ஆம் தேதியிலிருந்து 21ஆம் தேதிவரை Passover Festival என அறிவித்தார்கள். இது அவர்கள் எகிப்திலிருந்து வெளியேறிய நாள் (The Exodus). அல்அக்ஸா மஸ்ஜித்குள் பிரவேசித்தார்கள். முஸ்லிம்கள் தடுத்தார்கள், பலர் ஷஹீதானார்கள்.

ரமழான் மாதம் முழுவதும் மஸ்ஜித் அக்ஸாவில் முஸ்லிம்கள் பெருவாரியாக சென்று தொழுவார்கள். இந்த வருடம் யூதர்களின் கெடுபிடிகள் அதிகமானதால் 1,50,000 பேர் சென்ற வெள்ளிக்கிழமை (15-4-2022) ஜும்ஆ தொழுதார்கள். இதனால் அக்ஸா வளாகமே நிரம்பி வழிந்தது.-

இன்னும் வருங்காலத்ததில் அல்அக்ஸா பள்ளியைக் காப்பாற்ற அங்குள்ள தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளை சிரித்த முகத்தோடு அனுப்பு கிறார்கள். அல்லாஹ்வின் இறை இல்லத்தைக் காப்பாற்ற இன்னும் எத்துணை உயிர்கள் தேவைப்பட்டாலும் அதற்காக தயாராக உள்ளார் கள். இறை இல்லத்தை காத்தும் வருகிறார்கள். இவர்களை போன்ற தியாக உணர்வு நம்மிடம் வராமல் நம்மால் வெற்றி காண முடியாது.

“அன்றியும் நிச்சயமாக பள்ளிவாசல்கள் அல்லாஹ்வுக்காகவே இருக்கின்றன. எனவே (அவற்றில்) அல்லாஹ்வுடன் (சேர்த்து வேறு) எவரையும் நீங்கள் பிரார்த்திக்காதீர்கள்”

(அல்ஜின்-18)

**அல்லாஹ்வின் பள்ளிவாசல்களில் அவனது பெயர் நினைவு கூறப்படுவதைத் தடுத்து அவற்றை பாழாக்க முயற்சிப்பவனை விடப் பெரும் அநியாயக்காரன் யார்? பயந்தவர்களாகவே தவிர அவற்றில் நுழையும் உரிமை இத்தகையோருக்கு இல்லை. அவர்களுக்கு இவ்வுலகில் இழிவும், மறுமையில் கடும் வேதனையும் உள்ளது.”** (அல்பகரா-114)



# இப்படித்தான் அன்றைக்கு சாப்பிட்டார்கள்!



மருத்துவர் கு.சிவராமன்

**எந்த உணவுமுறை சிறந்தது? இது நான் செல்லும் இடங்களில் எல்லாம் எதிர்கொள்ளும் முக்கியமான கேள்வி.**

முதல் விஷயம்... எல்லோருக்கும் பொதுவான ஒரு குறிப்பிட்ட உணவுத்திட்டம் இருந்தால் நன்றாக இருக்குமே என்று பலர் நினைப்பதுண்டு. நாம் அனைவருக்கும் ஒரே மாதிரியான உணவு எனப் பொதுமைப்படுத்த முடியாது. ஒவ்வொருவரின் நிலம், வாழ்விடம், தட்பவெப்பம், அவர்களுடைய மரபு, அவர்கள் செய்யும் பணிகள் அவர்களுடைய எண்ணம் போன்ற அனைத்தையும் பொறுத்து உணவுமுறை மாறுபடும். நாம் அன்றாடம் எடுக்கும் சில உணவு வகைகளை ஓரளவுக்கு எல்லோரும் பயன்படுத்தும் வகையில் கொண்டு வரலாம்.

இன்றைக்கு உடல் வளர்ச்சிக்கான ஊட்டபானங்கள் என ஏராளமானவை விற்கப்படுகின்றன. அவற்றிற்கெல்லாம் இன்றைக்கு வணிகம் மட்டுமே நிறைந்திருக்கிறது. ஆனால் தமிழ் மரபில் காலை உணவு முறை எப்படி உருவாகியிருந்தது தெரியுமா? அது உடலைக் குளிர்விப்பதாக இருக்க வேண்டும். ஏனென்றால் இரவில் உடலில் பித்தம் அதிகரித்திருக்கும். அதனால் காலை உணவு குளிர்ச்சியாகவும், வயிற்றைப் புண்ணாக்கும் தன்மை இல்லாமலும் ஓரளவுக்கு ஆற்றல் உடையதாகவும் இருக்க வேண்டும். அந்தக் காலத்தில் வேலைக்குச் செல்லும்போது நீராகாரம் குடித்துவிட்டுச் சென்றார்கள். இது அதிக அளவு கார்போஹைட்ரேட் நிறைந்தது. அதனுள், அதிகப்படியான தாதுச் சத்துக்கள் இருக்கும். உடலுக்குத் தேவையான பல சத்துக்கள் அதில் இருக்கும். சமீபத்தில் Post Harvesting Techonology அமைப்பினரும் இணைந்து ஆய்வு மேற்கொண்டனர். அதில் நீராகாரம் எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய பானம் என்று மருத்துவ ஆய்வுப்படி ஆராய்ச்சி செய்து அதிலுள்ள ஊட்டச்சத்துக்கள் குறித்துக் கூறியுள்ளனர்.

அந்தக் காலத்தில் உணவே மதிய வேலையில் தான் சாப்பிட்டனர். அது மொத்தமாகச் சமைக்கப்பட்டு, மீதமுள்ளவற்றை வைத்து மறுநாள் நீராகாரமாகப் பயன்படுத்தினார்கள். இன்றைக்கு நாம் அதை மறந்துவிட்டோம். ஆனால், அது வெளிநாட்டு இணையதளங்களில்கூட விற்பனைக்கு வந்திருக்கிறது. அந்த அளவுக்கு முக்கியமான பானமாக நீராகாரம் விற்கப்படுகிறது. இப்படிச் செல்வதால் எல்லோருக்கும் நீராகரம் வேண்டுமா என்றால், அப்படி அவசியமில்லை. கடின உழைப்பை மேற்கொள்கிறவர்கள் நீராகாரத்தை எடுத்துக் கொள்ளலாம். தேநீரும் சிறப்பானதே. காலையில் ஒரு குவளையோ, இரண்டு குவளையோ குடிக்கலாம். தவறில்லை. ஆனால், அதில் பாலை ஊற்றித் தேநீரில் உள்ள அத்தனை சத்துக்களையும் நாம் கெடுத்து விடுகிறோம். உண்மையிலேயே தேநீர் என்றால் பால் சேர்க்காத தேநீரே. இனிப்புச்சுவை வேண்டுமென்போர் சிறிதளவு கருப்பட்டியோ, நாட்டுச் சர்க்கரையோ, தேனோ சேர்த்துக் கொள்ளலாம்.




அதிக அளவு ஊட்டச்சத்து மற்றும் ஆற்றலைத் தரக்கூடிய பானங்களைக் காலையில் தவிர்க்கலாம். எப்போதுமே ஊட்டச்சத்து மிகுந்த பானங்களைக் கொடுத்துப் பழகினால் நமது உடலானது, புலால், கீரைகள், பழங்கள் போன்ற வற்றின் மூலமாக உயிர்ச்சத்துக்களை ஏற்றுக் கொள்கிற தன்மையைக் கொஞ்சம் கொஞ்சமாக இழந்துவிடும்.

நாம் வைட்டமின் பி-யை பீன்சிலிருந்து பெற முடியும். வைட்டமின் ஏ-யை மீனிலிருந்து எடுக்க முடியும். வைட்டமின் சி-ஐய எலுமிச்சை யிலிருந்து பெற முடியும். ஆனால் நேரடியாக வைட்டமின் ஏ, பி, சி மூன்றையும் சோயா பவுடரில் கலந்த ஒரு பானத்தை எடுத்துக் கொண்டால் அது நமது உடலை எளிதாகச் சோம்பேறியாக்கிவிடும். அந்த ஆற்றல் என்பது மந்தப்படுத்தும் தன்மையைத்தான் ஏற்படுத்தும். அதேபோல் இது எல்லோருக்கும் தேவையான ஒன்று அல்ல. ஒருவருக்கு வைட்டமின் சி குறைவாக இருக்கும்போது, மருத்துவர் அதைப் பரிந்துரைத்துக் கொடுத்தால் அது நியாயம்.


ஆனால், எல்லாச் சத்துக்களும் நிறைந்த பானத்தை ஒரு பவுடராகக் கொடுப்பது என்பதன் பின்புலத்தில் அக்கறை கிடையாது. மாறாக அதில் வணிகம் மட்டுமே இருக்கிறது. எனவே, அப்படியான ஊட்ட பானங்களைத் தவிர்த்து விடலாம்.

ஊட்டச்சத்துக்களை அவரவர் தேவைக்கேற்ப எடுத்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக, ஒரு குழந்தைக்கு சளிப் பிடிக்கிறது என்றால், துளசி, கற்பூரவல்லி, வெற்றிலை, மிளகு போன்ற வற்றில் எது கிடைக்கிறதோ அதை வைத்து தேநீர் தயாரித்துக் கொடுக்கலாம். இதய நோயாளியாக இருப்பவருக்கு, செம்பருத்திப் பூ, வெள்ளைத்தாமரைப் பூ போன்றவற்றை வைத்து தேநீர் தயாரித்துக் கொடுக்கலாம்.

பித்தம், அஜீரணம் இருந்து, அடிக்கடி எதுக் களிப்பவர்களுக்கு சீரகத் தேநீர் கொடுக்கலாம். இப்படித்தான் அன்றைக்குச் சாப்பிட்டார்கள். முசுமுசுக்கை, கரிசலாங்கண்ணி போன்றவற்றால் நம் முன்னோர் தேநீர் தயாரித்திருக்கிறார்கள். நம் ஊருக்கு காப்பியும் தேநீரும் வருவதற்கு முன்பு இங்கு இருந்த காலை பானங்கள் இவைதாம்.

காலை உணவானது மிகவும் முக்கியம். அது இட்லி, பொங்கல், இடியாப்பம், புட்டு போன்ற ஆவியில் வெந்த உணவுகளாக இருககலாம். நாம் எங்கு வசிக்கிறோமோ அதற்கு அருகாமையில் கிடைக்கும் பழங்களே போதுமானது. முடிந்த அளவுக்கு இயற்கை முறையில் விளைந்த, ரசா யனக் கலப்பில்லாத வாழை, கொய்யா, மாதுளை, பப்பாளி போன்ற பழங்களைத் தேர்ந்தெடுக் கலாம்.

- நன்றி முதுமை எனும் பூங்காற்று.



# கல்வி வழிகாட்டி

## அடுத்து என்ன படிக்க வேண்டும்..?

அஸ்ஸலாமு அலைக்கும்
சகோதர, சகோதரிகளுக்கு.

12 வகுப்பு நடந்து முடிந்து விட்டது. +2 பிறகு என்ன செய்யலாம் என்ன கூடாது என்பதை வழிகாட்டிடும் பதிவு.

**1. ஆசிரியர் தொழிலில் ஆர்வம் காட்டுவோர்**

பி.ஏ. படிப்பில் ஆங்கிலம், தமிழ், வரலாறு படிக்கவும்.பிறகு பி.எட் படிக்கவும்.மொத்தம் 5 வருடங்கள் ஆகும். (அறிவியல் பாடப்பிரிவை தவிர்க்கவும். டியூசன் மட்டுமே நடத்த ஆர்வம் காட்டுவோர் ஏதேனும் அறிவியல் பாடப்பிரிவை எடுக்கலாம்.)

சில கல்லூரிகளில் பி.ஏ.வுடன் பி.எட் படிப்பை இணைத்து மொத்தமாக 4 வருடத்தில் முடித்திடலாம். அவரவர் மாவட்டத்தில் இதை அறிந்து கல்லூரியில் சேரவும்.

நாம் பள்ளி கூடங்கள் நடத்தினால் வெறும் முதலாளிகளாக மட்டுமே ஆகமுடியும். நம்முடைய ஆசிரியர் தொழில் பங்களிப்பு இல்லாமல் நம்முடைய கலாச்சார பண்பாட்டை காப்பாற்ற முடியாது.இவ்வாறுதயாராகவில்லை என்றால் நம் பள்ளிகளிலும் இப்படி வரக்கூடாது, அப்படி வரக்கூடாது என ஆசிரியர்கள் உத்தரவு போடுவார்கள்.

பிறகு ஒரு நேரத்தில் நம்மால் நடத்தப்படும் பள்ளி கூடங்கள் ஜாஹில்லியா ஆசிரியர்களால் take over செய்யப்பட்டு விடும். நிற்க.

மேலும் இந்த வகை பாடப்பிரிவு பட்டம் தேர்வை எழுத எளிமையாக்கி கொடுக்கும்.

**2. குழந்தை பிறந்தாலும் மருத்துவமனை செல்லவேண்டும்.குழந்தை பிறக்கவில்லையா? அதற்கும் மருத்துவமனைக்கு செல்ல வேண்டி உள்ளது.**

ஆக மருத்துவமனைகள் பெருகி கொண்டே செல்கிறது.இத்துறை சார்ந்த துணை மருத்துவ படிப்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

**பெண்களுக்கு**

ஆண்களை விட பெண்களுக்கே அதிக உடல் உபாதைகள்.மற்றும் மகப்பேறு, குழந்தை வளர்ப்பு, பாட்டி வைத்தியம், வீட்டில் வயதான வர்களை கவனித்தல் என ஈருலக நன்மைகளை அள்ளும் நம் பெண்மணிகள் துணை மருத்துவ படிப்பில் கவனம் செலுத்தி முதலுதவி செய்யும் திறனை மேம்படுத்துவது நல்லது.

இன்ஜினியரிங்,பி.காம் என படித்து விட்டு இறுதியில் பண்ட பாத்திரம் தேய்க்க தான் போக வேண்டியுள்ளது. இவ்வாறு வீட்டு வேலை செய்வது கேவலம் அல்ல.

ஆனால் உபயோகமில்லாத படிப்பிற்கு அளவு



கடந்து செலவழிக்க வேண்டிய அவசியமில்லை தானே !

நம் சமூகத்தில் விரல் விட்டு எண்ணக் கூடிய சிலர் அவரவர் குடும்ப பின்னணிக்கு ஏற்ற வகையில் வேலைக்கு செல்கின்றனர்.இவர்கள் பெரும்பாலான பெண்களுக்கு உதாரணமில்லை.

D.pharm. படிக்கலாம். 2 வருட படிப்பு. இதற்கு +2 வில் இயற்பியல் வேதியியல் உயிரியல் அல்லது இயற்பியல் வேதியியல் கணக்கு பிரிவு தேவை.

இன்ன நோய்க்கு இன்ன மருந்து என்பதை கற்று தரும் படிப்பு.இம்மருந்தை எவ்வாறு தயாரிப்பது என்பதையும் சொல்லும். மருந்துகடை நடத்தலாம். நமக்கு வரப்போகும் கணவர் மருந்து கடை நடத்த விரும்பினால் உங்களுடைய படிப்பு லைசென்ஸ் பயன்படும்.

எக்காரணம் கொண்டும் B.pharm படித்து காலத்தையும், பணத்தையும் வீணடிக்க வேண்டாம்.

(டிகிரி படிப்பின் மீது போதையுள்ளோரை நாம் தடுக்க முடியாது.)

அரசு வேலைக்கு D.pharm- மே போதுமானது.

இதில் சேர அரசு கல்லூரியில் cut-off மார்க் 85% இருந்தால் இடம் கிடைக்கும். வருடத்திற்கு 3000/- மட்டுமே கட்டணம்.

தனியார் கல்லூரியில் வருடத்திற்கு 45000/- முதல் 55000/- வரை ஆகும். அவரவர் மாவட்டத்தில் உள்ள கல்லூரிகளில் விசாரிக்கவும்.

**3. DMLT படிக்கலாம். இது ரத்த பரிசோதனை படிப்பு. இதற்கு+2 வில் இயற்பியல் வேதியியல் உயிரியல் கட்டாயம்.இந்த டிப்ளோமா படிப்பிற்கு அநேக வேலை வாய்ப்பு உண்டு. சுயமாக ரத்த பரிசோதனை கூடம் நடத்தலாம்.**

நமது உடல் நிலை பற்றி நாமே அறியலாம். என்னமோ, ஏதோ என நமது நோயை பற்றி பதற்றம் அடைய வேண்டி வராது. சில டாக்டரை நம்பி ஏமாற வேண்டி வராது.

தேவைப்படும் போது டாக்டர் ஆலோசனை படி நாமே ஊசி போடலாம். குளுக்கோஸ் ஏற்றிகொள்ளலாம்.

( இதில் டிகிரி படிப்பு படிப்போருக்கு அரசு மற்றும் தனியார் வேலை வாய்ப்பு குறைவு. )

**4. குடும்பத்தாரின் ஆதரவு இருந்தால் 3 வருட Diploma GNM நர்சிங் படிப்பு படிக்கலாம். குட்டி டாக்டர் படிப்பு.**

இதற்கு +2 வில் அனைத்து குரூப் பிரிவும் தகுதியே.

+2 வில் இயற்பியல் வேதியியல் உயிரியல் கட்டாயம் இல்லை.

அரசு கல்லூரியில் வருடத்திற்கு 4000/- கட்டணம். தனியார் கல்லூரியில் 40000/- முதல் 75000/- கட்டணம்.

**5. B.sc physician Assistant என்றொரு படிப்பு அரசு கல்லூரிகளிலும், தனியார் கல்லூரியிலும் நடத்தப்படுகிறது**

டாக்டருக்கு துணை புரியும் படிப்பு. நர்சிங் படிப்பு அல்ல.இது புதுவிதமான படிப்பு.

இதற்கு தகுதி +2 இயற்பியல் வேதியியல் உயிரியல். இதற்கு எதிர்காலத்தில் அரசு வேலை வாய்ப்பு வரலாம்.

இப்போதும் நடைமுறையில் வந்துள்ள “மக்களை தேடி மருத்துவம்" திட்டத்திற்கு அநேகமாக இப்படிப்பு பட்டதாரிகள் பயன்படுத்தபடலாம்.

**6. விவசாய துறையில் ஆர்வம் உள்ளவர்கள் Food technology படிப்பை படித்தால் நலம். பல்வேறு உணவு வகைகளை பற்றி போதிக்கும் படிப்பு. உடல் ஆரோக்கியத்திற்கு இன்ன உணவுகள் முக்கியம்.உடல் பருமனை கட்டுக்குள் வைக்க இன்ன இன்ன உணவு முறை தேவை என்பதையும் கூறிடும் படிப்பு.**

உணவை பரிசோதித்து சான்றிதழ் கொடுக்கும் அதிகாரம் கொண்ட படிப்பு.

பால், கறிகடை, எண்ணெய், குழந்தைகள் உண்ணும் தீனிகள், பிஸ்கட்கள் என அனைத்து வகை உணவு பொருட்களையும் பரிசோதிப்பதால், இதையெல்லாம் உற்பத்தி செய்யும் உற்பத்தி கூடங்களில் வேலைவாய்ப்பு அதிகம்.

அரசு வேலையும் உண்டு.ஹோட்டல்களில் , கல்லூரி மற்றும் மருத்துவமனை கேன்டின்களில் ரெய்டு செய்து தரச்சான்று அளிக்கும் அதிகாரம் உள்ள அரசு வேலை இது.




இவர்கள் தரச்சான்று தரவில்லை என்றால் கடையை பூட்ட வேண்டியது தான்.

உங்கள் பகுதியில் மேற்கண்ட படிப்பு இல்லை. B.Sc Nutrition படிப்பு உண்டு என்றால் படிக்கவும். ஆரோக்கிய வாழ்வுக்கு பயன்தரும். சில பல்நோக்கு மருத்துவமனைகளில் இவர்களை வேலைக்கு அமர்த்தி கொள்கிறார்கள்.

**7. B.Sc Clinical Psychology படிப்பும் தேவையான படிப்பே.வெகு சில இடங்களில் மட்டுமே உண்டு.**

பொம்பள பிள்ளை ஏதாவது ஒரு படிப்பு படிக்கட்டும் என எண்ணுவோர் ஒரு பக்கம். அதே போன்று பொம்பள பிள்ளை சொல்லி யிருச்சு. அது நினைக்கிறது படிக்கட்டும் என எண்ணும் பெற்றோர் ஒரு பக்கம். இவர்கள் அனைவருமே தங்கள் பணத்தை வீணடித்து கொண்டிருக்கிறார்கள்.

நபி (ஸல்) அவர்கள் "பயனற்ற கல்வியிலிருந்து காப்பாற்றுவாயாக என பிரார்த்தனை செய்ய சொன்னார்கள்.

ஆக வீட்டிற்கு கூட பயன்படாத படிப்புகள் நமக்கு வேண்டாம். உம்மத்துக்கு பயன்படாத கல்வியும் வேண்டாம். மேலே நாம் குறிப்பிட்டுள்ள படிப்புகளின் பக்கம் ஆர்வம் செலுத்து வோம்

இவண்:

**வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம். மதுரை.**

## சந்திப்பு...



குமரி மாவட்டம் வடக்கு சூரங்குடி கிளை தமுமுக, மமக சார்பாக கொடியேற்ற வருகை தந்த பேராசிரியர் எம். எச். ஜவாகிருல்லாஹ் விலிகி, வைகறை வெளிச்சம் ஆசிரியரும் இந்திய இஸ்லாமிய மாணவர் அமைப்பு முதல் இன்றுவரை சமூக பணிசெய்துவரும் மு. குலாம் முஹம்மது அவர்களை அவர்களின் இல்லத்தில் சந்தித்து கலந்துறையாடினார்,

# மேட்டுப்பாளையத்தில் ஈத்மிலன்

மே-22 அன்று மேட்டுப்பாளையம் அருகே உள்ள அன்னூர் பகுதியில் தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் சார்பாக ஈத்மிலன் எனும் பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இதன் நோக்கம் இஸ்லாத்தை அறிமுகப் படுத்துவதும் சகோதர சமுதாயத்துடன் நல்லுறவை வலுப்படுத்துவதுமாகும். இந்தியாவில் எண்ணற்ற பண்டிகைகள் கொண்டாட பட்டாலும் பிரியாணி வேண்டும் என உரிமையோடு கேட்கும் சிறப்பு ரமலான் மற்றும் பக்ரீத் பண்டிகைகளுக் கேயாகும்.

அந்தளவிற்கு உரிமையானது இந்த பண்டிகைகள். இன்று பாசிஸ்டுகள் பிரித் தாளும் சூழ்ச்சியை கையாண்டு ஒற்றுமையை சிதைத்து வரும் போது நாம் இது போன்ற நிகழ்ச்சிகள் வழியே அவர்களின் திட்டத்தை முறியடிக்கிறோம்.

அந்நிகழ்வில் பல சமூக அறிஞர்கள் மக்களின் பிரச்னைகளை குறித்து உரை யாடினர். சிராஜ் அவர்களின் கிராஅத்தோடு நிகழ்ச்சி ஆரம்பமாகியது.














மேட்டுப்பாளையத்தில் தீண்டாமை சுவர் இடிந்து மக்கள் கொடூரமாக இறந்ததை கண்டு மனம் வெதும்பி சாதியின் பெயரால் சக மனிதனை தீட்டென பிரிக்கும் கொடுமை இனி தனக்கும் வேண்டாம் தனது வாரிசுகள் சமமாக நடத்தப்பட வேண்டுமென இஸ்லாத்தை தழுவிய ராஜா உரையாற்றினார்.

சாதிய இழிவு கடவுளின் பெயரால் நடப் பதையும் அதை தகர்த்து எறிவது இஸ்லாமிய கடவுள் நம்பிக்கை என்பதையும் அழகாக விவரித்தார். அடுத்ததாக ராம கோபாலனுக்கு மெய்காப்பாளராக இருந்து பின்னர் இஸ்லாத்தை தழுவியதமிழ் புலிகள் கட்சியின் கோவை கிழக்கு மாவட்ட பொருப்பாளர் சந்திரன் என்ற தாவூத் உரையாற்றினார். ராஜா அவர்கள் ஒரு உலமா (இஸ்லாமிய மதகுரு)வை போல பேசுகிறார்.

அருந்ததியராக இருந்த போது பேசகூட மாட்டார். இஸ்லாம் உரிமையை கொடுத்து அறிஞராக. மாற்றியுள்ளதை பெருமைப்பட எடுத்துரைத்தார்.அடுத்ததாக தமிழ் புலிகள் மாநில கொள்கை பரப்பு செயலாளர் சிற்றரசு அவர்கள் உரையாற்றும் முன்னர் பேசிய ராஜா அவர்கள் குர்ஆனில் இருந்து பேசியதை சிலாகித்து பேசினார். இந்துவாக இருக்கும் போது வேதத்தை பார்க்க கூட அனுமதி யில்லாத போது இஸ்லாத்தை ஏற்றதும் குர்ஆன் வேதத்தில் இருந்து பேசுவது சமத்து வத்தின் மகிமையை வெளிப்படுத் துவதை குறிப்பிட்டார்.

களப்பணியில் நீண்ட காலமாக அருமை யாக செயல்பட்டு வரும் தமிழ் புலிகள் பொது செயலாளர் இளவேனில் இந்தியாவின்சாதிய சூழல்களையும் இதை எப்படி எதிர்கொள்வது என்பதையும் தீர்வையும் ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

திருவண்ணாமலையை சேர்ந்த வெங்கடேஷ் உரையாற்றும் போது முன்னர் கம்யூனிஸ்ட்டாக இருந்தும் சாதியை ஒழிக்க வழி இல்லாததால் தற்போது அம்பேத்கர் பெரியார் இயக்கங்களில் பயணிப்பதாக கூறினார். தீண்டாமை சுவர் இடிந்து விழுந்த போது இஸ்லாத்தை ஏற்ற ரங்கராஜ் என்ற அப்துல் ரஹீம் உரையாற்றும் போது தான் முன்னர் வாழ்ந்த வாழ்க்கையையும் தற்போது இஸ்லாம் எந்தளவிற்கு பண்படுத்தியுள்ளது சமூக அந்தஸ்தை பெற்று தந்துள்ளதை எடுத் துரைத்தார்.

இறுதியாக பேசிய காதர் மைதீன் சமத்து வமாக வாழ இஸ்லாமே தீர்வென்பதை எடுத்துரைத்தார். முடிவில் உமர் நன்றியுரை யாற்றினார்.

# 1300 ஆண்டுகளுக்கு முன்பு தமிழகத்திற்கு இஸ்லாம் வந்துவிட்டது என்பதை நிரூபிக்கும் உமர் (ரலி) காலத்து நாணயங்கள்

## புதுக்கோட்டை பொன்னமராவதியில் கண்டுபிடிப்பு



*புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமரா வதியில் ஏனாதி கிராமத்தில் பெண் ஒருவர் வீடு கட்ட குழி தோண்டியபோது மண்பானையில் 63 கிராம் மதிப்பிலான 16 தங்க காசுகள் கிடைத்தன. இந்த தங்க காசுகள் அனைத்தும் முகலாயர் காலத்து அல்லது நவாப் காலத்து அரபுமொழி பொறிக்கப்பட்ட தங்க நாணயங்கள் என்று ஆரம்பத்தில் கருதினர்.*

*ஆனால் தொல்லியல் துறையின் ஆய்விற்குப் பின் கிடைத்த வியப்பூட்டும் செய்தி என்ன வென்றால் இந்த தங்க நாணயங்கள் 1300 ஆண்டுகள் பழமையான நாணயம் என்றும் 7-ஆம் நூற்றாண்டை சேர்ந்தது என்றும், இது அரபு நாட்டின் உமர் கலீபா பேரரசின் நாணயங்கள் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*இந்த தங்க நாணயங்களில் லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மது ரசூலுல்லாஹ் என்ற இஸ்லாத்தின் திருக்கலிமா பொறிக்கப்பட் டுள்ளது.*

*உமர் கலீபா பேரரசு அரபுத் தீபகற்பம், பார சீகம், சிந்து சமவெளி, வட ஆப்பிரிக்கா மற்றும் ஐபீரிய முவலந்தீவு (ஸ்பெயின், போர்ச்சுகீஸ்) ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக வரலாற்றின் மிகப்பெரிய பேரரசாக இருந்தது.*

*உமர் கலீபா இஸ்லாமிய கலீஃபாக்களின் வரிசையில் இரண்டாவது கலீஃபா ஆகும்.*

*தமிழக மக்கள் இதில் இருந்து பெற வேண்டி யது இஸ்லாம் முஹம்மது (ஸல்) நபியவர்களின் காலத்திலேயே இந்தியாவிற்கு வந்துவிட்டது நாம் அறிந்ததே.*

*ஆனால், இப்போது மற்றுமோர் ஆதாரமாக 1300 ஆண்டுகளுக்கு முன்பே இங்கு இஸ்லாம் வந்துவிட்டது.*

*இஸ்லாமியர்கள் விணகம் செய்துள்ளனர் என்பதை இது உறுதிபடுத்தும் தெளிவான ஆதாரம் கிடைத்துள்ளது. இன்னும் அகழ்வாய்வு செய்தால் மேலும் பல உண்மைகள் வெளியா கலாம்.*

*இதன்மூலம் வரலாறு தெரியாமல் முகலாயர் காலத்தில் தான் இஸ்லாம் தமிழகத்திற்கு வந்தது என்று கூறுபவர்களின் கூற்று மீண்டும் பொய்யா யிற்று.*

**மேலும், நம் தமிழ் மக்களுடன் 1300 ஆண்டிற்கு முன்பு இஸ்லாமியர்கள் வணிக ரீதியான நட்புணர்வுடன் இருந்தது தெரிய வந்துள்ளது.**




Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001. Editor M. Gulam Mohamed. Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,** 19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002